
ஒரு கனவு
விஜி பிரபு
நாள் ஒரு கனவு
* விஜி பிரபு

கு

2013

ளைத் தாள்

ம்

டம் சாலை,

—,

014.



# ஒரு நாள்
# ஒரு கனவு

## பதிப்புரை

நாங்கள் அறிமுகப்படுத்தும் அனைத்து எழுத்தாளர்களையும் ஆதரித்தது போல் விஜிபிரபு அவர்களையும் ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு நாள் ஒரு கனவு இந்நாவலை டிக்க ஆரம்பித்தால் முடிக்காமல் வைக்க டியாது. அவ்வளவு விறுவிறுப்பாக சிரியர் எழுதியுள்ளார். ஆசிரியருக்கு களின் மனமார்ந்த பாராட்டுகள்.

- **பதிப்பகத்தார்**

# ஒரு நாள் ஒரு கனவு

## 1

**"கௌசல்யா சுப்ரஜா..."**

பெருமாள் கோவிலில் ஒலித்த சுப்ரபாத பாடலின் இசையைக் கேட்ட வண்ணம் வினயா கண் விழித்தாள். காலை வழக்கமாக கண்களை மூடியபடியே திரும்பி எதிரே இருந்த ஏழுமலையானின் படத்தில் கண்விழித் தாள். 'எல்லா கவலைகளையும் என் பாதத்தில் வைத்து விட்டு நீ உன் கடமையை செய்' என்றவிதத்தில் கால் களை கைகளால் சுட்டி காட்டியவாறு தெய்வீகமாக சிரித்துக் கொண்டிருந்தார் அவர். வழக்கம் போல் கண்கள் பனிக்க படுக்கையிலிருந்து எழுந்து பாத்ரூமிற்குள் புகுந்தாள்.

வினயா பாத்ரூமிலிருந்து வெளியே வந்தவுடன் பாரிஜாதம் கைகளில் காபியோடு அறைக்குள் நுழைந்தாள்.

''குட்மார்னிங் அம்மா எப்படித்தான் நான் எழுந்து கொள்வது உனக்குத் தெரியுமோ? என் செல்ல அம்மா'' என்றவாறே அம்மாவின் தோள்களை அணைத்த படியே காபி கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

நிர்மலமான மகளின் முகத்தைக் கண்கள் நிறைய பார்த்த பாரிஜாதத்தின் மனம் கணத்தது. மகள் அறியா வண்ணம் கலங்கிய கண்களை திருப்பிக் கொண்டாள். ''போடி அரட்டை எனக்கு இதைவிட வேறு வேலை என்ன இருக்கிறது?'' என்று மகளை வினவிய தாயை அன்புடன் பார்த்தாள் வினயா.

அவளுக்குத் தெரியும் தாயாருக்கு காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கும் வரை எத்தனை வேலைகள் இருக்கும் என்று.

அந்த ஊரிலேயே பெரிய வீட்டுக்காரர்கள் மூவர். அதில் ஒருவர் வினயாவின் அப்பா ஹரிசந்தர். மற்ற இருவரும் பாரிஜாதத்தின் உடன் பிறந்த சகோதரர்கள் மூத்த அண்ணன் சிவராமன். இளைய அண்ணன் பலராமன். பாரிஜாதம் அடிக்கடி நினைத்துக் கொள்வாள் மூத்தவருக்குத் தானே பலராமன் என்று அப்பா பெயர் வைத்திருக்க வேண்டும் என்று. உடனே இளையவரின் அனைவரையும் பின்தள்ளும் புத்திசாலித்தனத்திற்கு இந்தப் பெயர் பொருத்தம் தான் என்ற எண்ணம் தோன்றும். பெருமூச்சுடன் கவனத்தை வேறு வேலையில் செலுத்தி விடுவாள்.



அவளது புகுந்த வீட்டில் வேலைக்குப் பஞ்சமில்லை. காலை கண்விழித்து மாடியிலிருந்து எழுந்து வரும் முன்பே சமையல்காரி செவ்வந்தி அடுக்களையை சுத்தம் செய்து முடித்து பாலைக் காய்ச்சி ரெடியாக வைத்து விட்டு அடுத்த கட்டளைக்காக காத்திருப்பாள். பாரிஜாதம் காபியைக் கலந்து மகளுக்கும் கணவருக்கும் கொடுக்க எடுத்துச் சென்றவுடன் வேலைக்காரர்களுக்கு காபித்தண்ணியை கலந்துவிடுவாள் செவ்வந்தி. பெயருக்கு தான் காபித் தண்ணியே தவிர அந்த வீட்டுக் காபி கள்ளிச் சொட்டை விட கெட்டியானது என்று அனைவருக்கும் தெரியும்.

வினயாவின் அப்பா ஹரிசந்தருக்கு வேலையாட்களின் வயிறு மட்டும் நிறைந்தால் பத்தாது. மனமும் நிறைய வேண்டும். அதற்கேற்றாற் போல அவரது பொருளாதாரமும் அதற்கு ஒத்துழைத்தது. ஊரிலேயே நாலில் ஒரு பங்கு நிலம் அவருடையது. அவரது நிலத்தின் அளவு அவர் வீட்டுக் கணக்குப்பிள்ளைக்குத் தான் தெரியும். அதுபோக ஊருக்கு வெளியே பெரிய மில்லும், பக்கத்தில் இருக்கும் டவுனில் இரண்டு பெரிய ஹோட்டல்களும் அவருக்குச் சொந்தம்.

வினயா பிறந்தவுடன் டவுனில் அவளுக்காக அவர் வாங்கிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸும் அபார்ட்மெண்ட் வீடுகளும் வினயாவின் பெயரில் இருந்தன. அத்தனை சொத்துக்கள் இருந்தாலும் பணிவான அன்பான அவரது நடவடிக்கைகள் வேலையாட்கள் மத்தியில் அவருக்கு பெரும் மரியாதையையும் நன்றியையும் உண்டாக்கி இருந்தன.

'ஐயா என் மகளுக்கு காய்ச்சலுங்க' என்று சொன்னவுடன் கையில் பணத்தையும் ஆஸ்பத்திரிக்குச் செல்ல காரையும் கொடுக்கும் ஐயாவின் பெருந்தன்மையில் வேலையாட்கள் அனைவரும் நெகிழ்ந்து விடுவார்கள்.

அந்த வீட்டில் மட்டும் அல்லாமல் மில்லிலும் ஹோட்டல்களிலும் வேலை செய்யும் வேலையாட்கள் அனைவரது பிள்ளைகளுக்கும் படிப்புச் செலவு அவருடையதுதான்.

இவை அனைத்திற்கும் சொந்தமான வினயாவிடம் அனைவருக்கும் மிகுந்த பாசமுண்டு. சமீபகாலமாக ஐயாவின் மனத்திலிருக்கும் துன்பத்தையும் அம்மாவின் முகத்திலிருக்கும் வேதனையையும் அறிந்து அனைவரும் மௌனமாக வருந்தினர்.

## 2

வினயா தாயைக் கொஞ்சியவாறே காபிக் கோப்பையைக் காலி செய்து விட்டுத் தாயிடம் நீட்டினாள்.

''அம்மா நீ தான் எவ்வளவு அழகு. அதனால் தான் அப்பா உன்னிடம் மயங்கிப் போய் உள்ளார்.''

''போடி வாலு. கல்யாண வயசில் பொண்ணை வைத்திருக்கும் என்னிடம் என்ன அழகைக் கண்டாய்.''

''அம்மா உனக்குத் தெரியாது. என் பிரண்ட்ஸ் எல்லோரும் உன்னுடைய விசிறிகள் தான். உன்னிடம் அழகுக் குறிப்பு வாங்கி வரச்சொல்லி ஒரே நச்சரிப்பு தான் போ!''



''உனக்கு பொய் சொல்லக் கற்றா கொடுக்க வேண்டும் நீ யாருடைய மகள்'' என்ற பாரிஜாதத்தின் கன்னங்கள் கணவரின் நினைவில் வந்தது.

''என்ன? காலையிலேயே என்னைப் பற்றி புகழ ஆரம்பிப்பது போல் தெரிகிறது'' என்று கண்களில் கேலியையும், மையலையும் ஒருங்கே காட்டியவராய் ஹரிசந்தர் மகளின் படுக்கையறையில் நுழைந்து கட்டிலில் அமர்ந்தார் ஹரிசந்தர்.

என்றும் போல் அவரைக் கண்டவுடன் மலரும் தாயின் முகத்தையும் கேலி செய்தாலும் அன்பு மாறாமல் மனைவி முகம் பார்க்கும் தந்தையையும் கண்டவுடன் வினயாவின் மனது நிறைந்தது.

'வாழ்ந்தால் இவர்களைப் போல ஒற்றுமையான அன்னியோன்யமான தம்பதிகளாய் வாழ வேண்டும்' என்று எண்ணியவள் 'அந்தப் பாக்கியம் தனக்கு இந்த ஜென்மத்தில் நிச்சயம் இல்லை' என எண்ணிப் பெருமூச்சு விட்டாள்.

மகளின் முகத்தில் தோன்றிய வாட்டத்தைப் பார்த்த பெற்றவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கண்களால் எச்சரித்துக் கொண்டனர்.

''என்னம்மா! அம்மாவின் காபி எப்போதும் போல சுமார் தானா.''

''வேறு என்னப்பா செய்வது, அம்மாவாயிற்றே. அதனால் அட்ஜெஸ்ட் பண்ணிக் குடித்து விட்டேன்.''

''அப்பாவிற்கும் பெண்ணிற்கும் என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது?'' என்று கேட்ட மனைவியைக் கண்களால் விழுங்கிய படியே மகளிடம்,

''ஏதோ ஒரு ஜீவன் நிற்பது போல தெரிகிறது'' என்றார் ஹரிசந்தர்.

''இந்த ஒரு ஜீவன் இல்லாவிட்டால் தெரியும் உங்கள் இருவருக்கும்'' என்ற பாரிஜாதத்தின் வாயைப் பாய்ந்து மூடினாள் வினயா.

''என்னம்மா இது. விளையாட்டிற்கு எதைச் சொல்வது என்று தெரியாதா?'' என்று கண்கலங்கிய மகளை அணைத்தவாறு,

''ஸாரிங்க வாய் தவறி வந்து விட்டது'' என்றாள் கணவரிடம் பாரிஜாதம்.

''சரிசரி இது போன்ற பேச்சுக்களை இன்னொரு முறை நீ பேசினால் தெரியும். பல்லை உடைத்து விடுவேன்'' என்றவாறு கோபமாய் வெளியேறிய கணவனைப் பார்த்து சிரித்தவாறு காபி கோப்பைகளை எடுத்துக் கொண்டு வெளியேறினாள் பாரிஜாதம்.

# 3

வினயா சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே ஹாலை விட்டு வெளியேறி அடுத்து இருந்த பால் கனிக்கு வந்து அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்து எதிரே பார்த்தாள். கண்ணெதிரே தோன்றிய இரண்டு மாளிகை களையும் பார்த்தவுடன் அவளது இதயம் வேகமாக துடித்தது.



எதிரே இருந்த இரண்டு மாளிகைகளில் வலதுபுறம் இருந்தது அவளது பெரிய மாமா சிவராமனுடையது.

இடதுபுறம் அதே பாணியிலேயே கட்டப்பட்டு இருந்த இன்னொரு மாளிகை அவளது சின்ன மாமா பலராமனுடையது.

இரண்டு மாளிகைகளுமே ஜெய்ப்பூர் அரண்மனை போன்ற தோற்றத்துடன் ராஜமாளிகையாகக் கம்பீரமாக நிமிர்ந்து நின்றிருந்தது. அங்கு வாழும் மனிதர்களின் மனங்களைப் போலவே அதன் முன்புறம் நீண்டு பரந்திருந்த தோட்டமும் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

பெரியவர் சிவராமன் பெயருக்கேற்றாற்போல சிறந்த சிவபக்தர். பூஞ்சோலை என்ற அந்த ஊருக்கு ஏற்றாற் போல அவரது வீட்டுக் தோட்டமும் மனமும் அழகும் நிறைந்த மலர்களாலும் மரங்களாலும் நிறைந்திருந்தது. அந்த ஊரில் இருக்கும் இரண்டு கோவில்களுக்கும் அவரது தோட்டத்திலிருந்து தான் பூக்கள் செல்லும். ஹரியும் சிவனும் நமது இரண்டு கண்களைப் போல, அந்த இரண்டு தெய்வங்களிலும் வேறுபாடு பார்க்கக் கூடாது'' என்பார் அவர்.

முன்புறம் நீண்டு வளைந்து காம்பவுண்டு வரை செல்லும் பாதையின் இருபுறமும் ரோஜாக்கள் அனைத்து வண்ணத்திலும் பூத்துக் குலுங்கும்.

அதன் பின் சீராக வெட்டி விடப்பட்ட புல் தரையும், அதன் நடுவில் ஆங்காங்கே பூத்துக் குலுங்கும் கலர் கலரான டேலியாப் பூக்களும் பச்சை பட்டில் பூக்கள் பூத்து குலுங்குவதைப் போல பார்க்க கண்களுக்கும் மனத்திற்கும் குளிர்ச்சியாய் இருக்கும்.

அதை தாண்டினால் காம்பவுண்டு சுவரின் ஓரமாக சீரான இடைவெளியுடன் மா, கொய்யா, தென்னை, சப்போட்டா போன்ற மரங்களும் வீட்டில் பின்புறத்தில் வாழைத் தோப்பும் இருந்தன. மாளிகையின் முன்புறத்தில் உயர்ந்து கம்பீரமாய் போர்ட்டிகோவைத் தாங்கி நிற்கும் வேலைப்பாடு மிகுந்த தூண்கள் இரண்டிலும் ஒன்றை சுற்றி மல்லிகைக் கொடியும், மற்றொன்றை சுற்றி முல்லைக் கொடியும் படர்ந்திருந்தன.

படர்ந்த இரண்டு கொடிகளையும் வெட்டி விடாமல் மாடிவரை வளரவிட்டு அவற்றை மாடிப் பால்கனியில் கம்பிகளில் படரவிட்டு இருந்தனர். இவை அனைத்தும் சேர்ந்த அந்த மாளிகையைப் பார்ப்பவர்களுக்கு தேவலோகத்தைப் போல் காட்டிக் கொண்டு இருந்தன.

## 4

இளையவர் பலராமன் அவரது பெயருக்கேற்றாற் போல பலமும் புத்திசாலித்தனமும் நிறைந்தவர். ஆனால் அண்ணனைப் போல அவருக்கு கலாரசனை எல்லாம் கிடையாது. அவரது மாளிகையின் ஒவ்வொரு பாகமும் அவரது பகட்டையும் நாகரிக மோகத்தையும் பறைசாற்றிக் கொண்டிருந்தது.

வீட்டின் முன்புறம் நீண்டிருந்த பாதையை சலவைக் கற்கள் அலங்கரித்துக் கொண்டிருந்தது. அதன் இரு புறமும் அலங்கார விளக்குகள் ஒளிர்ந்தன. அதற்கு அடுத்து புல்வெளியும் அதன் நடுவில் செயற்கை



நீரூற்றும் இருந்தது. காம்பவுண்டு சுவரின் ஓரத்தில் விசிறி, வாழை, குரோட்டனின் செடிகள், தேக்கு மரக் கன்றுகள் ஆகியவை சீரான இடைவெளியில் நடப்பட்டிருந்தது.

வீட்டின் பின்புறத்தில் வெளியே தெரியாமல் மேற்கூரையிடப்பட்டு சுற்றிலும் சுவர்கள் மறைத்த நீச்சல் குளம் அலங்கரிக்கும்.

பெரியவரான சிவராமனுக்கு அவரின் மனம் அறிந்து நடக்கும் மனைவியாக பார்வதி வாய்த்திருந்தாள். கணவரின் பார்வையிலேயே அவரின் மனமறிந்து நடக்கும் குணவதி அவள். சிவராமனும் மனைவியைப் போற்றும் உத்தமர் தான். எனவே அவர்களின் ஒரே மகனான கண்ணனுக்கும் பெற்றவர்களின் அடக்கமும் அன்பும் சேர்ந்தே இருந்ததில் ஆச்சரியம் இல்லை.

ஆனால் பரம்பரை வீரமும், அழகும் எதிலும் பின்பற்றும் நேர்மையும் விட்டுக் கொடுக்காத இரும்புக் குணமும் பெற்றோரே அவனிடம் பெருமைப் படும் அதிசயக் குணங்கள்.

சின்னவரான பலராமனுக்கு அவருக்கேற்ற மனைவியாய் வேதவல்லி வாய்த்திருந்தாள். பலராமனின் பகட்டு மோகத்திற்கு தூபம் போடும் வேலையை செவ்வனே செய்து கொண்டிருந்தாள் அவரது மனைவி.

அவர்களின் பிள்ளைகளான ரூபனும், ரூபாவதியும் தாய் தந்தையரின் ஆடம்பர மோகத்திற்கு ஏற்றார் போல் அச்சு பிறளாமல் வாரிசாக வாய்த்திருந்தனர்.

அண்ணன் தம்பி இருவருக்குமே அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வர்யத்தை அவர்களது பெற்றோரான

திருப்பதியும், அலமேலம்மாளும் சேர்த்து வைத்திருந்தனர். திருப்பதி ஐயா ஜமீன் வீட்டு வாரிசாக இருந்தாலும் அவர் பொருளாதாரத்தில் மென்மேலும் வளர அலமேலு அம்மாளின் புத்திசாலித்தனமும், சிக்கனமும் பெரிதும் உதவின.

''அலமேலு மேல தெருவில ஒரு வீடு விலைக்கு வருது, வாங்கிரலாமா?'' என கேட்கும் கணவரிடம்,

''எதுக்குங்க குண்டுச்சட்டியில குதிரை ஓட்டணும். பக்கத்து டவுனில் ஏதாவது வீடு இருந்தால் பாருங்க வாங்கிரலாம்'' என்பாள்.

''டவுனில் வீடு என்றால் இப்பொழுதைக்கு முடியாது. அறுவடை முடியட்டும் பார்க்கலாம்'' என தயங்கும் கணவரை,

''கையில வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும் மனிதரைப் பார். பீரோவில் என் நகைகளெல்லாம் சும்மா தான் தூங்குது. பத்தும் பத்தாதற்கு அதை வைத்து சமாளிப்பாரா? அதை விட்டுவிட்டு ஏங்கறார்'' என்று நொடித்தவாறே அனைத்து நகைகளையும் கையில் கொண்டு வந்து தரும் மனைவியை பார்த்தாலே மனம் நிறையும் திருப்பதிக்கு.

''இல்லைம்மா. இவ்வளவு சொத்து இருக்கையிலே உன் நகைகளைப் போயி...''

''அதான் நீங்களே சொல்லிட்டிங்கள்ள இவ்வளவு சொத்து இருக்குதுன்னு. அறுவடை முடிந்தவுடன் நகைகளை திருப்பிக் கொள்ளலாம். ஆனால் வீட்டு மதிப்பு கூடிவிடாதா? சொல்றதைச் செய்யுங்க'' என்று கணவரை அரட்டியே சொத்து சேர்த்திருந்தாள்.



இருவரின் உழைப்பாலும் புத்திசாலித் தனத்தாலும் இரண்டு மகன்களுக்கும் இரண்டு தனித்தனி மாளிகை டவுனில் இரண்டு தனித்தனி அபார்ட்மெண்ட், மேலும் மெயின் பஜாரில் ஆளுக்கொரு துணிக்கடை என்று சொத்துக்கள் சேர்ந்திருந்தன.

மேலும் பரம்பரையாய் வந்த தோட்டமும், வயலும், தோப்பும், மில்லும் மகன்கள் இருவருக்கும் தனித் தனியே பிரித்துக் கொடுக்கப்பட்டு இருந்தது.

மகன்களைப் போலவே மகளான பாரிஜாதத்திற்கும் வீடும், பரம்பரை வைரநகைகளும், வெள்ளிப் பாத்திரங்களும், தங்க தாம்பாளமுமமாக மணமும் வீடும் நிறைய சீர் செய்து அருமையான இடத்தில் திருமணம் முடித்து வைத்து நிறைவாள் அவளை வாழ வைத்திருந்தனர்.

சொத்துக்களை சமமாக மகன்களுக்குப் பிரித்து கொடுத்திருந்தாலும் தாங்கள் இருவரும் பெரியவரான சிவராமன் வீட்டில் தான் வாழ்ந்து வந்தனர். அதில் சின்னவரான பலராமனுக்கு துளியளவு கூட வருத்தம் கிடையாது. அவரது மனைவிக்கும் அதில் மிக்க மகிழ்ச்சி.

# 5

வினயா கண் கொட்டாமல் இந்த நொடி மறுபடியும் தன் வாழ்வில் வர எத்தனை நாட்களாகுமோ என்று தவிப்புடன் அந்த மாளிகையைக் கண்களால் படம் பிடித்துக் கொண்டிருக்கும் போது தான் அது நிகழ்ந்தது.

மாடி பால்கனியில் படுத்தவாறு கைகளை ஊன்றி உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த கண்ணன் எழுந்து நின்று திரும்பிப் பார்த்தான்.

அவனை பார்த்த அந்த நொடியில் வினயாவிற்கு உலகம் நின்று விட்டது. காற்று அடங்கி விட்டது. சிலையாய் சமைந்து நின்றவளின் கண்களிலிருந்து கண்ணீர் தானாகக் கொட்டியது. வழிந்த கண்ணீரைத் துடைக்கவும் தோன்றாமல், கால்கள் துவழ சுவற்றில் சாய்ந்தவாறே சரிந்து அமர்ந்தாள் வினயா.

அவளின் அத்தனை செய்கைகளையும் அசையாமல் நின்றவாறு பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன். அவளை இழுத்து மார்போடு அணைத்துச் சமாதானப் படுத்த அவனது உயிரும் மனமும் தவித்தது. அவளை ஒரு நொடியாவது காண்போமா என ஏங்கிய அவனது இதயம் இந்த நொடியைத் தாங்க முடியாமல் துடித்தது.

கோவிலிலிருந்து வந்த மணியோசை வினயாவை இந்த உலகத்திற்கு கொண்டு வந்தது. தடுமாறி எழுந்து அருகிலிருந்த தூணில் சாய்ந்தவாறு அவனை நிமிர்ந்து பார்த்தவள் திகைத்தாள். கண்ணனின் கண்களில் தெரிந்த குற்றச்சாட்டைக் கண்ட அவளது மனம் தவித்தது.

''ஏழைகளின் ஆசையும்

கோவில் மணி ஓசையும்

வேறுபட்டால் என்ன செய்வது

தர்மமே மாறுபட்டால் எங்கு செல்வது?''



தோட்டக்கார சுப்பனின் எஃப் எம்மில் இருந்து வந்த பாடல் வரி ஓசை அவளின் தவிப்பை அதிகரிக்கச் செய்ததே ஒழிய அவளின் வேதனை குறையவில்லை.

தாங்க முடியாமல் வெடித்து கிளம்பிய அழுகையை கைகளால் வாய்பொத்தி தாயாருக்கு தெரிந்து விடாமல் மறைத்தவாறு திரும்பி வீட்டிற்குள் ஓடிவிட்டாள் வினயா.

குலுங்கிய அவளின் முதுகைப் பார்த்த கண்ணன் வேதனையில் கற்சிலையாய் நின்றிருந்தான். எதற்கும் கலங்காத அவனது கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவள் மேல் அவனுக்கு இருந்த காதலைப் பறை சாற்றியது.

பட்டாம் பூச்சியாய் அவனை சுற்றி வந்த வினயா அவன் கண்களில் ஒரு நொடி வந்து போனாள். பழைய நினைவுகளில் அவனது நெஞ்சம் குலுங்கியது. அவன் நினைவு பின்னோக்கிச் சென்றது.

## 6

''பாசமலர்கள்'' என்று அனைவராலும் கேலி செய்யப்பட்ட பாரிஜாதம் அவளது அண்ணன்களின் உறவு உண்மையில் அதற்கும் மேலாந்து.

அண்ணன்மார் இருவருக்கும் தங்கை தான் உயிர். அவளை ஒரு நாளாவது காணாவிட்டால் இருவருக்கும் காய்ச்சல் வந்து விடும். அதனாலேயே இருவரும் தங்கைக்கு தங்கள் மாளிகையின் எதிரேயே இன்னொரு

மாளிகை கட்டி அதைத் தங்கைக்கு கல்யாணப் பரிசாக கொடுத்திருந்தனர்.

பாரிஜாதத்தின் கணவரான ஹரிசந்திரனுக்கு அதில் துளியளவும் பொறாமையோ, வருத்தமோ என்றும் ஏற்பட்டதில்லை. சிறு வயதிலிருந்தே ஒற்றைப் பிள்ளையாய் வளர்ந்திருந்த அவருக்கு இரு மைத்துனர்களின் உறவும் மிகவும் பிடித்தமான ஒன்றாக இருந்தது. பாரிஜாதம் தன் கணவனையும் குறைவில்லாமல் கவனித்து அன்பு செலுத்தியதும் அதற்கு ஒரு காரணம்.

''என்ன பாரிஜாதம், என் மச்சினர்களை விடிந்து இவ்வளவு நேரமாகியும் காணவில்லையோ என்பார் காலை ஏழுமணிக்கு காபியைக் குடித்தக் கொண்டு ஹரிசந்திரன்.''

''தெரியலையேங்க'' என்பாள் கேலிச்சிரிப்புடன் பாரிஜாதம்.

இவர்கள் பேசி வாய் மூடுமுன் கேட்டை திறந்து கொண்டு மச்சினன்கள் இருவரும் வந்து நிற்பார்கள்.

''ஆயுசு நூறுப்பா உங்களுக்கு... இப்போ தான் உங்களைக் கேட்டேன். வந்துட்டீங்க'' என்பார் சிரித்தவாறு ஹரிசந்தர்.

''அதற்கென்ன மாப்பிள்ளை. உங்களை பார்ப்பதற்காகவே நாங்க நூறு வருஷம் வாழுறோம்'' என்றவாறு அவரின் கைப்பற்றி அருகில் அமர்வார் சிவராமன்.

''பாரிஜாதம் எங்களுக்கும் சேர்த்து காபி போட்டியா இல்லை மறந்துட்டியா'' என்றவாறு இன்னொரு பக்கம் அமர்வார் பலராமன்.



''என்னங்கண்ணா இப்படி சொல்லிட்டீங்க. உங்களைப் பிரிச்சு என்னைக்காவது பார்த்திருக்கேனா. இதோ காபி கொண்டாரேன்'' என்று சிறுபிள்ளையாய் ஓடுவாள் பாரிஜாதம்.

இதைப்பார்த்து பெருமையாய்ச் சிரிக்கும் மாப்பிள்ளையின் தோள்தட்டிச் சிரிப்பார்கள் மச்சினர்கள் இருவரும்.

சுற்றியுள்ள வேலையாட்கள் அனைவரும் இதனை கண்டும் காணாமல் மகிழ்ச்சியுடன் வேலையைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இவர்கள் ஒற்றுமையில் பாரிஜாதத்தின் மூத்த அண்ணியான பார்வதிக்கு மிகவும் சந்தோசம். பார்வதி திருமணம் முடிந்து அந்த வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த பொழுது பாரிஜாதத்திற்கு பன்னிரண்டு வயது. அறிந்தும் அறியாத சிறுமியாய் அவளைப் பார்த்த பாரிஜாதத்தை அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. பாரிஜாதமும் பார்வதியை தனது இன்னொரு அன்னையாகத் தான் நினைத்தாள். எனவே இரு குடும்பத்தின் ஒற்றுமை இருவருக்குமே மனநிறைவையே கொடுத்தது.

ஆனால் சின்ன அண்ணியான வேதவல்லிக்கு இவர்களின் ஒற்றுமை கண்ணில் விழுந்த தூசுபோல் உறுத்திக் கொண்டே இருந்தது. அவளின் எல்லாச் செயலுக்கும் தகுந்தாற் போல் பலராமன் ஆடினாலும் அவரின் தங்கைப் பாசத்தை மட்டும் அவளால் வெட்டி விட முடியவில்லை. அதுவே அவள் மனதில் துவேசமாக வளர்ந்து விட்டிருந்தன. ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவள் சிரித்துப் பழகியதால்

வெள்ளந்தியான பாரிஜாதம் அவளை முழுவதும் நம்பிவிட்டாள்.

அலமேலுவுடன் தனித்திருக்கும் தருணங்களில பாரிஜாதம் ''நம்ம அண்ணிங்க ரெண்டு பேருமே எனக்கு இன்னொரு அம்மாதாம்மா'' என்று கூறுவாள். ஆனால் வீட்டு மனிதர்கள் அனைவரின் குணங்களையும் கணித்து விரல் நுனியில் வைத்திருக்கும் புத்திசாலியான அலமேலம்மாள் மகளின் தலையைக் கோதியபடி பாசத்துடன் சிரிப்பாள்.

ஆனால் விதி அவர்களைப் பார்த்து கேலியுடன் சிரித்ததை அவர்களில் ஒருவரும் அறியவில்லை.

# 7

''அம்மா இந்த மிட்டாயைப் பாரேன்'' மழலையாய்ப் பிதற்றிக் கொண்டு ஓடிவந்த மகளைக் கட்டிக் கொண்டாள் பாரிஜாதம்.

''ஏதுடா வினயா? இது யார் கொடுத்தது?''

''அவன் தான் கொடுத்தான்'' எனத் தன் பிஞ்சு விரல் நீட்டி சுட்டிக் காட்டினாள் வினயா.

அவள் காட்டியது அவளை விட எட்டு வயது மூத்தவனான மாமன் மகன் கண்ணனை.

''ஐயோ பாப்பா! அவன் இவன்னு எல்லாம் சொல்லலாமா? உன்னை விட பெரியவங்க இல்ல.''

''எவ்வளவு பெரிசு? இவ்வளவா?'' என குட்டி கைகளை உயர்த்தி கேட்டவளை குனிந்து தூக்கிக் கொண்டான் கண்ணன்.



''பெரிசு என்றால் உயரமில்லைடா. வயதில் மூத்தவங்க இல்லையா? அவன் இவன் என்றெல்லாம் சொல்லக்கூடாது'' என்றாள் கண்டிப்புடன் அன்னை.

''வேறு எப்படி கூப்பிடுவது?''

''ம்ம்... அத்தான் என்று கூப்பிடுவது'' என்று கேலியாகச் சிரித்தபடியே தூங்கித் தட்டாமாலை சுற்றிய அந்த அத்தானை வினயாவிற்கு மிகவும் பிடித்தது.

''போதும் அத்தான் இறக்கி விடுங்கள்'' என்று செல்லமாய் சிணுங்கிய வினயாவை கண்ணனுக்கு மிகவும் பிடிக்கும். காலை பள்ளி செல்லுமுன் அவளைக் கொஞ்சாமல் பள்ளிக்கு செல்ல மாட்டான். அதே போல் பள்ளியிலிருந்து திரும்பும் வழியில் அவளுக்காக சாப்பிட ஏதாவது வாங்காமல் வீடு திரும்ப மாட்டான்.

நேராகத் தன் வீட்டுக்கு செல்லாமல் அத்தையின் வீட்டிற்கு வந்து வினயாவைக் கொஞ்சாமல் போக மாட்டான். வினயாவிற்கும் அந்த அறியாத வயதில் இருந்தே கண்ணன் என்றால் மிகவும் பிரியம்.

அவளது சின்ன மாமாவான பலராமனின் பிள்ளைகளான ரூபாவதி வினயாவை விட நான்கு வயது மூத்தவள். ரூபனோ இரண்டே வயது மூத்தவன். எனவே ரூபனுக்கு எப்பொழுதுமே வினயாவிடம் போட்டி தான் உண்டு. பாசம் கிடையாது.

ரூபாவதிக்கோ வினயாவின் சிவந்த நிறத்தையும் பெரிய கண்களையும் அழகிய தோற்றத்தையும் பார்த்துப் பொறாமைதான் உண்டு. பாசம் கிடையாது.

ஆனால் பள்ளி செல்லும் பொழுது அத்தையின் வீட்டை திரும்பிப் பார்க்காமல் போகமாட்டான் ரூபன். அது அத்தையின் மேல் உள்ள பாசத்தால் அல்ல. வினயாவைக் கண்ணன் கொஞ்சுகிறானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக.

'பத்து வயசானால் பங்காளி' என்று கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. ஆனால் விவரம் தெரிந்தது முதலே ரூபனை கண்ணனின் பங்காளியாக மாற்றி வைத்திருந் தாள் அவனது அன்னை வேதவல்லி.

''ரூபன் உனக்காக ஒரு கைச்செயின் எடுக்கலாம் என்று அப்பாவிடம் சொன்னால் அவர் கண்ணனுக்கு வாங்கி வந்துட்டாருடா. நீ இந்த வீட்டில் என்றுமே இரண்டாம் பட்சம் தான்'' என்பாள் தலை கோதியவாறே மகனிடம்.

அவன் அன்று இரவு கண்ணனிடம் சென்று ''அண்ணா அந்த கைச்செயின் மிகவும் பிடிக்கிறது. எனக்குத் தருவாயா'' என்று அவன் கைகளை ஏக்கமாகப் பார்த்துக் கொண்டே கெஞ்சுவது போலக் கேட்பான்.

ரூபனை தன் உடன் பிறந்தவனாக எண்ணும் கண்ணனோ சிறிதும் சந்தேகப்படாமல்,

''இந்தா ரூபா, உனக்கில்லாததா. அண்ணனிடம் இருக்கும் அனைத்துமே உனக்குத்தான். வைத்துக் கொள்'' என்று கழுத்துச் செயினையும் சேர்த்துக் கழட்டிக் கொடுத்துவிடுவான்.

''அம்மா அவன் ஒரு இளிச்சவாயன்மா. நான் கேட்டவுடன் அனைத்தையும் கொடுத்துவிட்டான்



பார்த்தாயா? அவனெல்லாம் எனக்கு ஒரு ஆளா?'' என்று மார் தட்டியவாறே இரண்டு நகைகளையும் அன்னையின் கைகளில் கொடுத்து விடுவான் ரூபன்.

''அப்படி சொல்லாதே ரூபா. இப்படி பாசம் காட்டுவது போல் மயக்கித்தான் அப்பாவை அவர்கள் இஷ்டத்துக்கு ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றவாறே செயினை பீரோவில் வைத்துப் பூட்டுவாள் வேதவல்லி.

''நீ கவலைப்படாதேம்மா. இவர்கள் எல்லோரையும் நான் வளர்ந்த பின் என்ன செய்கிறேன் என்று பார்'' என்பான் அவன் அன்னையின் தோள்களில் சாய்ந்து கொண்டு.

அவன் வளர்ந்தபின் செய்த காரியந்தான் அந்த குடும்பத்தை எப்படி எல்லாம் பந்தாடிவிட்டது!

# 8

மாலை சூரியனின் மாயத்தால் வானம் பூப்படைந்த கன்னியைப் போல் பொன் நிறமாகச் சிவந்திருந்தது. இதமான தென்றல் காற்று உடலை வருட ஐந்து வயது வினயாவும் பதிமூன்று வயது கண்ணனும் தோட்டத்தில் பந்து விளையாடிக் கொண்டு இருந்தனர். கண்ணன் பள்ளிச் சீருடையிலும், வினயா அழகான மாம்பழ வண்ணத்தில் சிவப்புக் கரையிட்ட பட்டு பாவாடை யிலும் இருந்தனர்.

பாவாடையைச் சுருட்டிக் கைகளில் பிடித்துக் கொண்டு பந்தை பிடிக்க முடியாமல் இங்கும் அங்கும்

ஓடிய வினயாவைப் பார்த்து அவளது பெற்றோரும் மாமன்களும் வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தனர்.

பள்ளியில் டீச்சரிடம் சரியாக மார்க் வாங்காமல் திட்டும், அடியும் வாங்கிய ரூபன் அந்தக் கோபத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழக்கம் போல் அத்தையின் வீட்டை நோட்டமிட திரும்பியவனின் பார்வையில் அந்த சந்தோசமான சூழ்நிலை பதிந்து விட்டது.

என்னவோ, தன்னை மட்டும் அந்த குடும்பம் வஞ்சித்து விட்டதைப் போன்ற ஒரு வன்மம் அந்த அறியாத வயதில் அவன் மனதில் ஆழமாகத் தோன்றி வேரூன்றியது. அவன் வேதவல்லியின் மகனல்லவா? அந்த வன்மத்தை தன் உதட்டு சிரிப்பால் மறைத்தவாறே அத்தையின் வீட்டிற்குள் சென்றான் அவன்.

ரூபனின் வருகையை கண்ட பாரிஜாதம் ''வாப்பா ரூபா, ஏன் முகமெல்லாம் சோர்ந்து கிடக்கிறது? மதியம் சாப்பிடவில்லையா?'' என்று கேட்டவாறே அவனை தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள்.

''அதெல்லாம் இல்லங்கத்தை. கால்கள் தான் வலிக் கிறது.''

''ஏய் செவ்வந்தி பிள்ளைக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வா. ரூபா வாய்யா. அத்தை உன் கால்களைப் பிடித்து விடுகிறேன்'' என்றவாறே பாரிஜாதம் அவன் கால்களை தன் மடிமீது போட்டுக் கொண்டு கைகளால் மெதுவாகப் பிடித்து விட்டாள். அந்த நொடி அவளை தனக்கு பனிப்பெண்ணாக ஆக்கி விட்ட நிறைவுடன் செவ்வந்தி கொண்டு வந்த தட்டைக் காலி



பண்ணிவிட்டு நிமிர்ந்த அவன் பார்வை கண்ணனிடம் பதிந்தது.

''அண்ணா, நானும் விளையாட வரவா?''

''என்னடா கேள்வி இது? தாராளமாக வா.''

''இதோ...'' என்று ஓடிச் சென்றவன் வேண்டும் என்றே புல்தரையில் தலைகுப்புற விழுந்தான்.

வினயாவிடம் இருந்த கவனம் விலகி ''ரூபா என் னாச்சு?'' என்று பதறியபடி ஓடிவந்தான் கண்ணன்.

''அண்ணா எனக்கு காலில் அடிபட்டுருச்சு, எந்திரிச்சு நிக்கவே முடியலையே'' என கால்களைப் பிடித்துக் கொண்டு கதறிய தம்பியைக் கண்டவுடன் கண்ண னுக்கு அனைத்துமே மறந்து விட்டது.

ரூபனை கைகளால் தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்று சிற்றன்னையிடம் அவனை ஒப்படைத்த பின்தான் கண்ணனுக்கு மூச்சே வந்தது.

''ஐயய்யோ ரூபா உனக்கு என்னாச்சுடா?'' எனப் பதறிய தாயின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அன்னை யின் காதோரம் ஒண்ணுமில்லைம்மா. இதுகளுக்கு ஒரு ஷாக் கொடுத்தேன். ஆடிப் போயிருச்சுக தெரியுமா?'' என்று கூறிச் சிரித்தான் ரூபன்.

இவை அனைத்தையும் சோபாவில் அமர்ந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த அலமேலு,

''வித்தாரக்கள்ளி, பிள்ளையையும் சேத்துல்ல கெடுத்து வைத்திருக்கிறாள்'' என்றாள் கணவரிடம்.

ஆனால் திருப்பதிக்கோ கண்ணனிடம் இதைச் சொல்ல விருப்பமில்லை. கண்ணனிடம் மட்டுமில்லை

குடும்பத்தார் யாரிடமும் இதைச் சொல்ல அவருக்கு விருப்பமில்லை. இதனால் அந்தக் குடும்பங்களின் இடையே உள்ள ஒற்றுமை குலைந்துவிடும் என்று அவர் பயந்தார். அலமேலுவும் அதையே எண்ணியதால் இருவரும் எல்லாம் தெரிந்தும் ஒன்றுமே தெரியாதவர்களாய் நடித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் வினயாவின் பத்தாவது வயதில் அவளுக்கு காது குத்தும் விழா வந்தது.

## 9

பச்சைப் பசேலென்ற வயல்வெளி பூமிக்குப் பச்சை பட்டு உடுத்தியிருந்தது போல் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்திருந்தது. குளுமையான வயல் வெளிக் காற்று மேனியைத் தழுவிச் செல்ல பாரிஜாதம் சிலிர்த்தாள் அருகிலிருந்த வினயாவைப் பார்த்து,

''குளிருதாடா?'' என வினவினாள்.

''இல்லம்மா. ஏசி போட்டது போல் சில்லுன்னு இருக்கு. எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''இது ஏசியை விட சுத்தமான காத்துடா. பாரு இந்த காத்துப்பட்டதும் என் செல்லக்குட்டி எவ்வளவு பிரஷ்ஷா இருக்கான்னு'' என்று மகளைக் கொஞ்சியபடி வந்த மனைவியைக் கண்கொட்டாமல் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் ஹரிசந்தர்.

மகளிடம் பேசியபடியே நிமிர்ந்த பாரிஜாதம் கணவனின் பார்வையில் கன்னம் சிவந்தாள்.



''என்ன சைட்டெல்லாம் பிரமாதமாயிருக்கு. பக்கத்தில் அண்ணன்களும், அப்பாம்மாவும் இருக்கிறது தெரியலையா?''

''என் பொண்டாட்டியை நான் பார்க்க யாருக்கும் எதுக்குடி பயப்படணும். இன்னும் சொல்லப்போனா நான் உன்னை பார்க்காவிட்டால் தான் அவங்க வருத்தப் படுவாங்க.''

''போதுமே. அதான் தினமும் பாக்கிறீங்களே பத்தாதா.''

''ஏய் என்னடி? எல்லோருக்கும் மத்தியில் நின்னுகிட்டு என்னை உசுப்பேத்துற. பத்தாதுன்னா உடனே பார்க்க விட்டுருவியா.''

ஹரிசந்தரின் பார்வை மனைவியின் மேல் தாகத்துடன் பதிந்தன. அவரது பார்வைக்கு பதில் பார்வையைக் குறையாமல் பார்த்தபடி,

''சரி சரி போதும். ரொம்ப வழியாமல் வந்த வேலையைப் பாருங்கள்'' என்றாள் பாரிஜாதம்.

அவர்கள் அனைவரும் குலதெய்வம் கோவிலில் வினயாவிற்கு மொட்டை எடுத்து காதுகுத்துவதற்காக ஹரிசந்தரின் சொந்த ஊரான மாங்குடிக்கு வந்து இருந்தனர். அந்த ஊர் ஜமீன்தாரின் ஒரே வாரிசான ஹரிசந்தர் திருமணத்திற்குப் பின் பூஞ்சோலையில் குடியேறியதில் அந்த ஊர் மக்கள் மிகவும் மனம் வருந்தினர்.

''என்னங்கைய்யா இப்படிச் செஞ்சுபுட்டீங்க. உங்களை பாக்காம கண்ணு இரண்டும் பூத்துப் போச்சுய்யா'' என்று பாதம் பணியும் விசுவாசமான பணியாட்களிடம்,

''அதான் வாரத்துக்கு மூணு நாள் வர்றேனே பிறகென்ன. போய் வேலையைப் பாரு'' என்று சிரிப்பார் அவர்.

மாங்குடியிலும் அவருக்கு பரம்பரை சொத்தாக ஊரிலேயே பாதி நிலமும் அவர்களின் பரம்பரை அரண்மனையும் இருந்தன. அவை அனைத்தும் விட்டு விட்டு பூஞ்சோலைக்கு அவர் குடிபோனதுக்கு முழு காரணமும் அவர் தன் மனைவி மேல் வைத்திருக்கும் காதல்தான். இதை பாரிஜாதமும் நன்றாக அறிவாள். எனவே தான் அவள் தன் கணவனை கண்ணுக்குள் வைத்துப் பாதுகாத்தாள்.

ஹரிசந்தர் வாரத்தில் மூன்று நாட்கள் மாங்குடிக்கு வந்து விவசாய நிலங்களையும், அரண்மனையையும் பார்வையிட்டுப் போவார். சிறு வயதிலேயே தாயை இழந்த அவரை பாசமாய் வளர்த்த தந்தையும் அவரது பதினெட்டு வயதில் காலமாகிவிட்டார். அன்றிலிருந்து அனாதை போல உணர்ந்த ஹரிசந்தருக்குச் சொந்தமென்று வந்த மனைவி மேல் அவர் உயிரையே வைத்திருந்தார். திருமணம் முடிந்த அடுத்த மாதமே மனைவி கருவுற்றபோது இந்த உலகமே தன் காலடியில் அடங்கியது போல கர்வத்தில் மகிழ்ந்து போனார். அரண்மனையையும், நிலங்களையும் பார்வையிட விசுவாசமான வேலைக்காரர்களை நியமித்து விட்டு மனைவியின் ஊருக்கு குடியேறி விட்டார். அவரின் விசுவாசிகளும் அவரின் சொத்துக்களை கண்போல் பாதுகாத்து வந்தனர்.



# 10

பெரிய மீசையும் கோபமான கண்களும் உயர்ந்த கைகளில் வீச்சரிவாளுமாக தெய்வீக வீரத்துடன் குதிரை மேல் வீற்றிருந்தார் கருப்பசாமி. இவர்தான் ஹரிசந்தரின் குலதெய்வம். அவரது முன்னோர்கள் அவர்களது வயல் வெளியிலேயே தன் குலதெய்வத்திற்குக் கோவிலும் கட்டி, கோவில் மானியமாக பத்து ஏக்கர் நிலமும் ஒதுக்கியிருந்தனர்.

அடுப்பிலிருந்து பொங்கலை இறக்கிய அலமேலம்மாள் மகளை நிமிர்ந்து பார்த்தார். மகளை கைகளில் தூக்கிக் கொஞ்சியவாறு கணவருடன் இணைந்து நின்றிருந்த மகளின் நிறைவான தோற்றத்தில் கண்களும் மனமும் நிறைந்தது அவருக்கு. ''ஆண்டவனே என் மகளின் இந்த சந்தோஷமும், நிறைவும் அவளுக்கு என்றும் நிலைத்திருக்க வேண்டும் ஐயா'' என்று மானசீகமாக கருப்பசாமியிடம் கண்கள் நிறைந்த கண்ணீருடன் வேண்டினாள் அலமேலம்மாள்.

அலமேலம்மாள் இறக்கிய பொங்கல் பானையை அதன் சூட்டிலேயே விளக்கி கழுவி விட்டு நிமிர்ந்த பார்வதி, மாமியாரின் கண்களில் கண்ணீரை கண்டவுடன் ''என்ன அத்தை இது? உங்க நல்ல மனசுக்கு எல்லாம் எப்போதும் நல்லதே நடக்கும். உங்கள் பிள்ளைகள் அனைவரும் உங்க புண்ணியத்தில் நன்றாகவே இருப்பார்கள். கண்களைத் துடைங்க முதலில்'' என்றாள்.

''இல்லை பார்வதி. ஐந்து விரல்களும் ஒன்று போல் இருப்பதில்ல. அது போல எல்லோர் மனமும் ஒரே மாதிரியில்ல. பாரிஜாதத்திற்கு பிறந்த வீடுதான் உலகமும், சொந்தமும். அவளை எப்போதுமே கண் கலங்க விடமாட்டேன் என்று எனக்கு வாக்கு கொடுப்பாயா?'' என சிறு குழந்தை போல கை நீட்டி மாமியாரை ஆச்சரியமாக பார்த்தாள் பார்வதி.

''அத்தை உங்க மனதில் என்ன துன்பமின்னு எனக்கு தெரியாது. நான் அதைக் கேட்கவும் மாட்டேன். ஆனால் எனக்கு பாரிஜாதம் என்றுமே மூத்தமகள் போலத்தான் அதை நான் என்றுமே கண்கலங்க விட மாட்டேன். இது சத்தியம். அத்தை, நீங்க கவலைப்படாதீர்கள்'' என்று வாறே மாமியாரின் கைகளைப் பிடித்தாள் பார்வதி.

கண்களை முந்தானையால் துடைத்துக் கொண்டு நிமிர்ந்த அலமேலம்மாள் ''பொங்கலை இறக்கியா சுய்யா. அடுத்து நடக்க வேண்டியதைப் பாருங்க மசமசன்னு நின்னா எல்லா வேலையையும் யாரு பார்க்கிறது. தாய்மாமன்கள் தள்ளி நின்னா யாரு வந்து என்ன செய்வாங்க?'' என்று மகன்களையும், கண்களா கணவரையும் கடிந்துக் கொண்டாள்.

''என்னம்மா இப்படி சொல்றீங்க. விருந்தெல்லாம் அப்பவே ரெடியாயிருச்சு. சொந்தபந்தமெல்லாம் வ துட்டாங்க. சீர்வரிசைத் தட்டெல்லாம் எடுத்து வெ சாச்சு. மச்சினர் தான் மகளுக்கு மொட்டை போடு நினைப்பில்லாம பராக்குப் பார்த்துக்கிட்டிருக்கார் என்று கேலியாகச் சிரித்தவாறே ஹரிசந்தரைப் பார்த்த சிவராமன்.



''சிவராமா, உனக்கு ஆள் வளர்ந்த அளவிற்கு அறிவு இன்னும் வளரவில்லை. மாப்பிள்ளையை சொந்த பந்தத்திற்கு நடுவில் இப்படியா கேலி பேசுறது'' என்று கடித்துக் கொண்டார் திருப்பதி.

''என்ன மாமா இது. என் மச்சினனை விட யாரும் எனக்கு முக்கியமில்லை. அவரு கேலி பண்ணாம என்னை வேறு யாரு கேலி பண்றது. நானும் தான் வந்த வேலையை மறந்து தானே போயிட்டேன்'' என்று மாமனாரிடம் சொல்லியவாறே நிமிர்ந்து மனைவியை நோட்டமிட்ட கணவரைப் பார்த்து யாருமறியாமல் பழிப்புக் காட்டினாள் பாரிஜாதம்.

## 11

இதையெல்லாம் வயிறெரியப் பார்த்தவாறே அமர்ந்திருந்தாள் வேதவல்லி. ஏற்கனவே தன் பேச்சைக் கேட்காமல் பலராமன் தங்கை மகளுக்காக வைரமும், தங்கமுமாய் சீர்வரிசைகளை வாங்கியதில் மனம் குமைந்திருந்த அவளுக்கு, பெரியவரான சிவராமன் வைர அட்டிகையும், கழுத்து ஆரமும், வைரத்தோடும். வெள்ளி தாம்பாலத்தில் சீர்வரிசைப் பணமும், பட்டுமாய் கொண்டு வந்து சபையை நிறைத்ததில் மேலும் கோபம் கூடியது.

''காணாததைக் கண்டதைப் போல உங்க அப்பனும் பெரியப்பனும் தங்கைக்கும் அவளது மகளுக்கும் அத்தனையும் அள்ளிக் கொடுத்தால், நாம என்னதான்

பண்றது ரூபா?'' என்று மகனிடம் மனம் கேட்காமல் அங்களாய்த்தாள் அவர்.

ரூபாவதிக்கோ இத்தனை நகைகளும் வினயாவிற்கா என்ற பொறாமையால் வாயே திறக்க முடியவில்லை. அவள் தன் தம்பியை முறைத்துப் பார்த்தாள்.

தாயின் பேச்சையும், அக்காவின் கோபத்தையும் பார்த்தவாறு குமுறும் எரிமலையாய் நின்றிருந்த தன் மகனைப் பார்த்த வேதவல்லிக்கு அன்று தான் அந்த எண்ணமே தோன்றியது. அவள் நன்றாக நிமிர்ந்து தன் மகனை கண்களால் அளவிட்டாள். மாநிற முகமும் கோபத்தால் முறுக்கேறிய கைகளும் உடம்புமாக பனிரெண்டு வயதிற்கு மீறிய வளர்ச்சியுடன் நின்றிருந்த மகனைப் பார்த்தவுடன் அவளது எண்ணம் உறுதி யானது.

''ரூபா'' என்று அழைத்த தாயை நிமிர்ந்து பார்த்தான் ரூபன். அன்னையின் முகத்தில் தெரிந்த உறுதியும், கோபமும் அவனை கட்டி போட்டது போல் அவள் கண் களை ஏறிட்டான் அவன்.

''ரூபா நான் சொல்வதை நன்றாக மனதில் ஏற்றிக் கொள். நம் வீட்டிலிருந்து உன் அத்தை வீட்டிற்குப் போன செல்வம் அத்தனையும், அதற்கு மேல் அவர்களின் செல்வத்தையும் சேர்த்து நம் வீட்டிற்கும் உன் வாழ்க் கைக்கும் கொண்டு வருவதற்கு ஒரே வழி தான் உள்ளது. ஆனால் அதற்கு குறுக்கே உன் அன்பு அண்ணன் நிற்பானே?'' என்றாள் வேதவல்லி.

''சொல்லுங்கம்மா. அது எந்த வழியானாலும் அதை நான் கண்டிப்பாகச் செய்கிறேன். அதற்கு குறுக்கே யார்



வந்தாலும் அது அண்ணனோ, அப்பாவோ எந்த சொந்தத்தையும் நான் பார்க்க மாட்டேன். என்னை நம்புங்க'' என்றான் ரூபன்.

''அந்த வினயா குட்டியை நீ கல்யாணம் பண்றது ஒண்ணுதான் அதுக்கு ஒரே வழி. ஆனால் உன்னை விட மூத்தவன் கண்ணன் இருக்கையில் அது நடக்குமென்று தெரியலை. இந்த குட்டி வேறு அத்தான் பொத்தான்னு அவன் மேலேயேதான் விழுது. அவனும் இதுமேல உயிரை விடுகிறான். அதுதான் யோசனையாய் இருக்குது'' என்று பன்னிரெண்டு வயது பாலகனிடம் பேசும் எண்ணமே யில்லாமல் என்னவோ கல்யாண வயதுப் பையனிடம் சொல்வது போல் சொன்னாள் வேதவல்லி.

அந்தப் பாலகனோ அவளை விட உறுதியாய் வெறி யாய் வினயாவைப் பார்த்தவாறே ''கவலையை விடுங் கம்மா. சொல்லிட்டீங்கள்ள. இனி இந்த வேலையை நான் பார்த்துக்கிறேன்'' என்று அன்னையிடம் உறுதி கூறினான்.

தன்னைச் சுற்றியும், தன் மகளின் வாழ்வைச் சுற்றியும் பின்னிக் கொண்டிருக்கும் சூழ்ச்சி வலையைப் பற்றி அறியாதவளாய் பிறந்த வீட்டுச் சீரையும், கணவனின் அன்பையும் எண்ணி மனம் நிறைந்து சிரித்துக் கொண் டிருந்தாள் பாரிஜாதம்.

## 12

''தாய் மாமன் மடியில் பிள்ளையை உட்கார வைங்க. காது குத்த வேண்டாமா? நல்ல நேரம் போயிட்டிருக்

குல்ல. சட்டு புட்டுன்னு ஆகுற காரியத்தைப் பாருங்கப்பா'' சொந்தக்காரர் ஒருவர் உரிமையோடு குரல் கொடுத்தார். அதைக் கேட்டுத் திரும்பிய சிவராமனும், பலராமனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

முதலில் பிறந்து தாய்மாமன் என்ற உரிமையை தான் மட்டும் அடைய சிவராமனின் மனது ஒப்பவில்லை. அவர் தன் தம்பியைப் பார்த்து ''பலராமா, வினயாவை நீ மடியில் வைத்துக் கொள். நான் உன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்'' என்றார்.

அண்ணனின் மனதைப் புரிந்து கொண்ட பலராமன் ''இல்லைங்கண்ணே. நீங்க உட்காருங்க. நான் என்றுமே உங்கள் பக்கத்தில் தான் இருப்பேன்'' என்றார்.

''என்னங்கப்பா இது. யாராவது ஒருத்தர் உட்காருங்க. நல்ல நேரம் போகுதுல்ல'' என்றார் சபையில் அமர்ந்திருந்த பெரியவர் ஒருவர்.

தன் பிள்ளைகள் இருவரின் மன ஒற்றுமை கண்ட திருப்பதி ஐயாவிற்கு மனம் குளிர்ந்தது. அதை மறைத்துக் கொண்டே அவர் ''நீங்கள் உட்காரலேன்னா கண்ணனைக் கூட உட்கார வைய்யுங்கப்பா அவனும் மாமன் தானே?'' என்றார் சிரித்துக் கொண்டே.

அதைக் கேட்ட வினயா ''அத்தான் வாங்க. இங்க உட்காருங்க. நான் உங்க மடியில் தான் உட்காருவேன்'' என்றவாறு தன் தந்தையின் தோளில் இருந்த பட்டுத் துண்டை எடுத்து தன் அருகில் தரையில் விரித்து விட்டாள். சபையிலிருந்த அனைவரும் இதைப் பார்த்து சிரித்தனர். ''என் பேத்திக்கு என்னைக்கும் அவங்க கண்ணன் அத்தான் தான் ஒசத்தி. பட்டுத் துண்டை



விரித்து உட்காரச் சொல்றதைப் பாருங்க'' என்று குனிந்து பேத்தியின் கன்னத்தில் முத்தமிட்டாள் அலமேலம்மாள்.

பாட்டிக்குக் கன்னத்தைக் கொடுத்துக் கொண்டே தனக்காகக் கை நீட்டிய தன் அத்தை மகளைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் கண்ணன். ஏனோ அவளைப் பார்க்கப் பார்க்க அவள் தன் சொந்தம் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றுவதை ஆச்சரியமாய் உணர்ந்தான் அவன். பளிங்குக் கன்னங்களும், கருவண்டுக் கண்களும் சந்தன நிறமுமாய் இருக்கும் அத்தை மகளை அவனுக்கு என்றுமே மிகவும் பிடிக்கும். ஆனால் சிறுவயதில் தன் கழுத்தைக் கட்டிக் கொண்ட அத்தை மகளின் நெருக்கத்தையும், அன்பையும் நேசித்த அவன் மனம் இன்று அவளையே நேசிக்க ஆரம்பித்தது.

மிகுந்த விருப்பத்துடன் வினயா விரித்த துண்டில் உட்கார்ந்த கண்ணன் அவளைத் தூக்கித் தன் மடியில் உட்கார்த்திக் கொண்டான். வினயாவோ ஏதோ தங்க சிம்மாசனத்தில் உட்கார இடம் கிடைத்த மகிழ்ச்சியும், பெருமையுமாய் தன் அத்தானின் மடியில் உட்கார்ந்திருந்தாள். ஆனால் இதைப் பார்த்த வேதவல்லியும், ரூபனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். தன் தாயின் கண்கள் சொல்லிய செய்தியை நொடியில் புரிந்து கொண்ட ரூபன் வேகமாகக் கண்ணனிடம் ஓடி அவன் அருகில் அமர்ந்து அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

தன் கைகளைப் பிடித்த தம்பியைப் பாசத்துடன் திரும்பிப் பார்த்தான் கண்ணன். கண் நிறைய பாசமும்,

வாய் நிறையச் சிரிப்புமாகத் தன்னைப் பார்க்கும் தம்பியை என்றுமே அவன் மிகவும் விரும்புவான் அன்றும் அதைப் போலவே தம்பியைப் பார்த்தவனிடம் அவன் ''அண்ணா, அப்போ நான் வினயாவிற்கு அத் தானில்லையா? என் மடியில் அவளை உட்கார வைக்க மாட்டீங்களா?'' என்று ஏக்கத்துடன் கேட்டான். இதைக் கேட்டவுடன் கண்ணன் வழக்கம் போல் ''ஏண்டா அப்படி சொல்றே? நீயும் அவளுக்கு அத்தான் தான்டா வினயா அத்தான் மடியில் உட்கார்ந்து கொள்'' என்று விட்டான்.

''இல்லைண்ணா, நான் அந்தப் பட்டுத் துண்டில் தான் உட்காருவேன்'' என்றான் ரூபன். கண்ணன் உடனே எழுந்து விட அந்தத் துண்டில் உட்கார்ந்து வினயாவை இழுத்து மடியில் அமர்த்திக் கொண்ட ரூபன் யாருமறியாமல் தாயை நிமிர்ந்து பார்த்தான். தாயின் முகத்தில் தெரிந்த பாராட்டையும், வெற்றிக் குறியையும் பார்த்தவனின் முகத்தில் சந்தோஷப் புன்னகை விரிந்தது. யாருக்கும் தெரியாத இந்தப் பார்வை பரிமாற்றத்தைப் பார்த்த அலமேலம்மாள் மனம் தவித்துப் போனாள். ஏனோ இவர்களின் சிரிப்பில் தன் பேத்தியின் எதிர்காலம் ஆட்டம் கண்டு விட்டதைப் போல அவர் மனம் துடித்தது. வேதவல்லியின் நடிப்பைப் பார்த்து பழகியிருந்தவளுக்கு அவள் மகனின் நடிப்பு நன்றாகவே புரிந்தது. ஆனால் இதையறியாமல் தன் பிள்ளைகளின் ஒற்றுமையை எண்ணிப் பெருமை யடைந்திருந்த மகன்களிடம் இதை சொல்லிக் கஷ்டப் படவைக்க அவள் மனம் விரும்பவில்லை. அவள் கைகூப்பி கருப்பசாமியைக் கும்பிட்டாள்.



''ஐயா என் பேத்தியின் வாழ்வையும் நீ தான் காப் பாற்ற வேண்டும். என் மகளின் வாழ்வை மட்டும் உன்னிடம் நான் வேண்டியதற்கு என்னை மன்னித்து விடு'' என்றாள். அனைத்தும் அறிந்திருந்த கருப்ப சாமியோ எப்பொழுதும் போல் வீரமாய் புன்னகைத்து நின்றார்.

# 13

''பாட்டி...''

மென்மையாய்த் தன்மேல் விழுந்த கரங்களுக்குரிய வளை நிமிர்ந்து பார்த்தாள் அலமேலம்மாள். என்றும் உள்ள வழக்கமான அவளது மனம் சிலிர்த்தது. எதிரி லிருந்த அந்த கைகளுக்கு உரிய வினயாவோ கள்ள மின்றி பாசத்துடன் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன தாயீ, அந்த டிவிப் பொட்டிய விட்டு வெளியே வந்துட்டியா?''

''பாட்டி! அது டிவிப் பொட்டியில்லன்னு எத்தனை தடவை உனக்குச் சொல்றது? அது கம்ப்யூட்டர் பாட்டி.''

''என்ன பூட்டரோ போ. எதுத்தாப்புல யாரு இருக் கான்னு கூடத் தெரியாம அதிலயே முழுகிப் போய்தான் படிக்கணுமா?'' என்று அங்கலாய்த்தாள் அலமேலம்மாள்.

''என்ன பாட்டி பண்றது. கம்பூட்டர் இன்ஜினியரிங் படிப்புன்னா சும்மாவா? புராஜெக்ட் ஒர்க் நிறைய பண்ண ணும் பாட்டி. அப்பத்தான் எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கும்'' என்று செல்லமாய் அணைத்த பேத்தியைப் பார்த்த

அலமேலம்மாளுக்கு அவள் மேலிருந்து கண்கள
எடுக்க முடியவில்லை.

சந்தன நிறமும், பெரிய நீண்ட விழிகளும் செ
போன்ற உயர்ந்த உருவமும், செதுக்கிய மூக்கு
முல்லைப் பற்களும், இடைதாண்டி நீண்ட அடர்
பின்னலுமாகத் தேவலோக மங்கையைப் போ
இருந்தவளைப் பார்க்கையில் எப்பொழுதும் போ
அலமேலம்மாளின் மனது பெருமைப்பட்டது. அவளி
பெருமை பேத்தியின் அழகில் மட்டுமல்ல, குணத்தி
கும் சேர்த்துத்தான்.

அடுத்தவரின் மனம் நோகப் பேசத் தெரியாது வின
விற்கு. 'இட்ட அடி நோக' என்பது போல் நடப்பது கூ
பூமித் தாயிற்கு வலிக்காமல் அடியெடுத்து வைப்பா
யாருடைய குறையையும் அடுத்தவரிடம் சொல்லா
குணத்தில் அப்படியே அலமேலம்மாளைக் கொண்டிரு
தாள் வினயா.

"என்ன பாட்டி? என்ன அப்படிப் பார்க்கறீங்க" என்
சிணுங்கினாள் வினயா.

"என் பேத்தியை எத்தனை முறை பார்த்தாலு
எனக்கு அலுப்பே தெரியாது. அப்படியொரு தெய்வீக
பிறவி நீ."

"வேண்டாம் பாட்டி அப்படிச் சொல்லாதீங்க. தெ
வீகப் பிறவின்னா அதுக்குத் தனி பண்புகள் வேண்டு
என்னிடம் அப்படி எதுவும் கிடையாது. நான் உங்களி
சாதாரணப் பேத்தி தான்."

"என்ன தாயீ அப்படிச் சொல்லிட்ட. நீயென்
சாதாரணப் பிறவியா. உன் சொத்துக்கும், அழகிற்கு



வேறொரு பெண்ணா இருந்தா தலை கீழால்ல
நடப்பாங்க."

"சொத்து என்றைக்கும் நிலையானது இல்லை பாட்டி.
அப்புறம் அழகுன்றதும் வெளித்தோற்றம் இல்லை.
என்னைப் பொறுத்தவரையில் அழகு மனம் சம்பந்தப்
பட்டது. யாரைப் பார்த்தால் எல்லோர் மனதிலும் சந்
தோஷமும் அமைதியும் வருகின்றதோ அவள் தான்
அழகானவர்கள் பாட்டி" தலையை ஆட்டித் தீர்மான
மாய்ப் பேசிக்கொண்டிருந்த பேத்தியின் கன்னம் வழித்து
முத்தமிட்டாள் அலமேலம்மாள்.

"நீ மனதாலும் குணத்தாலும் சொக்கத் தங்கம் தாண்டி
கண்ணு."

"போங்க பாட்டி. என்ன சொன்னாலும் உங்களுக்கு
நான் உயர்த்தி தான்" செல்லமாய்ச் சிரித்தவளை
இழுத்து அணைத்துக் கொண்டாள் அலமேலம்மாள்.

"பாட்டியும் பேத்தியும் கொஞ்சினது போதும். நீ
முதலில் இந்த டிபனைச் சாப்பட்டுக் காபியைக் குடி.
இப்படிப் படித்துக் கொண்டே இருந்தால் உடம்பு
என்னத்திற்கு ஆகும்" என்று கடிந்துக் கொண்டே
வந்தாள் பாரிஜாதம்.

"பாருங்க பாட்டி. அம்மாவிற்கு எப்பவுமே என்னைத்
திட்டுவதே வேலையாய் போச்சு."

"ஏண்டி, என் பேத்தி இவ்வளவு மனம் நோகப் பேசுற
அளவுக்கு நீ என்ன சொன்ன."

"ஆமா உங்க பேத்தியைத் திட்டி விட்டு நான் இந்த
வீட்டில் இருந்துற முடியுமா. சாப்பிடச் சொன்னால்
குத்தமா?"

''ஆமா வினயா. அம்மா சொல்றதும் சரிதானே?'' எங்களுக்கு உன் உடம்பை விட படிப்பு முக்கியமில்லைம்மா. நீ படிச்சுத் தான் நாங்க பொழைக்கணுமா? முதல்ல சாப்பிடு தங்கம்.''

''பாட்டி நீங்க சொல்றதால தான் நான் இந்த அம்மாவின் டிபனைச் சாப்பிடுறேன். இல்லைன்னா இந்த டிபனை யார் சாப்பிடுவா?''

''பார்த்தீங்களாம்மா இவள் சொல்றதை? ஏண்டி நான் செஞ்ச டிபன் உனக்கு அவ்வளவு மட்டமாகவா போச்சு. இனிமே உனக்கு சமையல்காரி செய்யும் டிபன் தான் கிடைக்கும். பாவமாச்சே நம்ம பொண்ணுன்னு நானே சமைச்சேன் பாரு. எனக்கு இது தேவை தான்.''

''ஐயய்யோ அம்மா. நான் சொன்னது தப்புன்னு தோப்புக்கரணம் கூடப் போடுறேன். ஆனால் அவ சமையலைச் சாப்பிடும் தண்டனையை மட்டும் எனக்குத் தந்துடாதீங்க தாயே'' என்று செல்லமாய்க் கன்னத்தில் போட்டுக் கொண்டு தாயின் கழுத்தை கட்டிக்கொண்ட மகளை ''போடி போக்கிரி'' என்று தலையில் மெதுவாய்த் தட்டிவிட்டு நகர்ந்தாள் தாய்.

இந்த காட்சிகளை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு கண்ணும் மனமும் நிறைய பெருமூச்சு விட்டாள் அலமேலம்மாள்.

''ஆமாம் பாட்டி! என்ன இன்னைக்கு நீங்க பலமான சிந்தனையிலேயே இருக்க மாதிரித் தோணுது?''

''சிந்தனையெல்லாம் இல்லை தங்கம். மனசு நிறைஞ்சு இருக்கு. இவ்வளவு சந்தோஷத்தையும் என்



மனசு தாங்குற சக்தியை அந்த இறைவன் எனக்கு கொடுக்கணும்னு அவனை வேண்டிக்கிட்டிருக்கேன்.''

''என்ன விஷயம் பாட்டி? எதுக்கு இவ்வளவு எமோஷன் ஆகுறிங்க?''

''என் செல்லப்பேரன் வெளிநாட்டிலிருந்து வரப் போறான்னு கேட்டதிலிருந்து என் மனம் என்னிடமில்லை கண்ணு.''

''யாரு அத்தானா? வர்றாங்களா? எப்போ பாட்டி? ஏன் இவ்வளவு நேரம் இதைச் சொல்லலை? என்னிக்கு வர்ராங்க? டேட் என்னன்னு தெரியுமா? சொல்லுங்க பாட்டி'' என்று பரபரத்தவளைக் கண் இமைக்காமல் பார்த்தாள் அலமேலம்மாள்.

அவருடைய மனம் பேத்தியின் பரபரப்புக்குக் காரணம் பாசத்திலான அன்பா? நேசத்திலான அன்பா? என்று அளவெடுத்துக் கொண்டிருந்தது.

இது எதையும் கவனத்தில் கொள்ளாமல் வினயாவின் மனமும் சிந்தனையும் ''அத்தான் வர்ரார்'' என்ற ஒரே எண்ணவோட்டத்தில் நிலைத்திருந்தது. அவளது முகமும் கண்களும் மலர்ந்தன. இதழ்களை லேசாக கடித்து அவளது உணர்ச்சிகளை அடக்க பெரிதும் முயற்சி எடுத்தும் அது அவளால் முடியவில்லை. இந்தப் பாட்டி ஏன் தன் கேள்விக்கு இன்னும் பதிலளிக்கவில்லை? என்று அவள் மேல் கோபமாக வந்தது.

''என்ன பாட்டி? நான் கேட்டிட்டே இருக்கேன். நீங்க குத்துக் கல்லாட்டம் பதில் சொல்லாமல் உட்கார்ந்து இருக்கீங்க.'' என்று கோபமாகக் கேட்ட வினயாவின்

தோற்றம் அவள் தன் பேரன் மேல் வைத்திருப்பது நேசமான அன்பு தான் என்பதைத் தெளிவாக உணர்த்தியது. அவள் பேத்தியை இழுத்து அணைத்துக் கொண்டாள். அவள் உயிரோடு இருப்பதன் நோக்கமே இவர்கள் இருவரும் இணைந்து சந்தோஷமாக வாழ்வதைப் பார்ப்பதற்குத்தான் என்று அலமேலம்மாளின் உள்ளம் குதூகலித்தது.

''தேதியெல்லாம் இன்னும் தெரியலைம்மா கண்ணு. இன்னிக்கு காலையில் தான் போன் வந்துச்சு. சீக்கிரம் வருவேன்னு உன் அத்தான் தான் சொன்னான்.''

அலமேலம்மாள் அந்த 'உன் அத்தானை' அழுத்திச் சொன்ன விதத்தில் வினயாவிற்குத்தான் கண்ணன் சொந்தம் என்ற செய்தியிருந்தது. கண்களை உயர்த்திப் பார்த்த வினயாவும் அதை மறுக்கவில்லை. அவள் மனம் வினயாவும் கண்ணனுக்குத் தான் சொந்தம் என்று கூறியது.

ஆனால் இந்த சந்தோஷத்தை முழுமையாக அனுபவிக்க விடாமல் ஏதோ ஒரு எண்ணம் முள்போல் அவள் மனத்தின் ஓரத்தைத் தைத்துக் கொண்டே இருந்தது. அந்த முள் ரூபன் தான் என்பதை அலமேலம்மாளும் அறிவாள்.

ஒருவர் மேல் முழுமையாக அன்பு செலுத்தும் பொழுது அவர்களின் வேதனை, துக்கம், மகிழ்ச்சி அனைத்தும் சொல்லாமலே அடுத்தவருக்குப் புரியும். அதே போல் தான் அலமேலம்மாளிற்கு பேத்தியின் மனமும், வேதனையும் நன்றாகப் புரியும். அவளின் பாதச் சத்தத்திலிருந்தே அவளின் மனதைப் பாட்டி



அறிந்து கொள்வாள். பெற்றவளான பாரிஜாதத்தை விட பாட்டியான அலமேலம்மாள் மேல் வினயா அதிகப் பாசம் வைத்திருந்ததும் அதற்கொரு காரணம்.

''கவலைப்படாதே கண்ணு. எல்லாம் நல்லதே நடக்கும். நல்லபடியாகவே நடக்கும்'' என்ற பாட்டியிடம் 'எது எல்லாம்' என்று வினயா கேட்கவில்லை. 'எது எல்லாம்' என்று அலமேலம்மாளும் சொல்லவில்லை. அவள் கரங்கள் தன் மடிமீது மௌனமாய்த் தலைசாய்த்த பேத்தியின் தோளைத் தட்டிக் கொடுத்தன ஆதரவாக.

# 14

சிறு வயதில் கண்ணனைத் தன் தோழனாகவும் ரூபனை தன் இன்னொரு தோழனாகவும் இயல்பாகவே பழகி வந்த வினயாவிற்கு இருவரிடமும் உள்ள குண வேறுபாடு புரியவில்லை. புரிவதற்கான வயது வந்த போதோ ரூபனைத் தன் தோழனாகக் கூட நினைக்க அவளால் முடியவில்லை.

கண்ணன் தன் மீது வைத்திருக்கும் அன்பு எவ்வளவு உயர்ந்தது என்பதை வினயா வளர வளர தன் மனதால் உணர்ந்து கொள்ள ஆரம்பித்தாள். சிறு பிராயத்தில் தன் அத்தான் மேல் தான் கொண்ட தோழமையும் தற்போது வேறு பரிமாணத்திற்கு வந்து விட்டதை அவள் மனமும் உணர ஆரம்பித்தது. அத்துடன் ரூபனின் உண்மையான குண இயல்பையும் அவள் மிகவும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தாள்.

எப்பொழுதும் மிகவும் அலட்சியமாகவும் குரூரமாகவும் தன்னைப் பார்க்கும் ரூபனின் கண்கள் வினயா கண்ணனுடன் தனித்து இருக்கும் போது மட்டும் பொறாமையுடன் அவர்களை அளவிடுவதை அவள் அறிந்திருந்தாள். ஆனால் கண்ணனுக்கு மட்டும் ரூபன் என்றுமே அவனுடைய ஒன்றுமறியாத அப்பாவித் தம்பி தான். ஏனெனில் கண்ணனிடம் அவன் காட்டும் நடிப்பு அப்படிப்பட்டது. ஒன்றுமே தெரியாத அப்பாவிபோல் முகத்தை வைத்துக் கொண்டு கண்ணனிடம் தான் வேண்டுவதை சாதித்துக் கொள்ளும் அவனது திறமை சிறுவயதிலிருந்தே மாறாமல் அவனுடன் இருந்தது. கண்ணன் ரூபனின் மேல் வைத்திருந்த பாசமும் கூட அவனின் கெட்ட குணம் வெளியே தெரியாமல் இருக்க ஒரு காரணம்.

ரூபன் கேட்டால் எதையும் விட்டுக் கொடுக்கும் குணத்தை அவனது தந்தையும், தாயும் சிறுவயதில் கண்ணனுக்கும் கற்றுக் கொடுத்தது குடும்ப ஒற்றுமை குலையக் கூடாது என்பதற்காக. ஆனால் அந்த குணம் அவனது இயல்பில் ஊறிப்போனது கண்ணனுக்கே தெரியாத குணமாகிப் போனது. ஆனால் இதை ரூபன் நன்றாக அறிந்து வைத்திருந்தான். கண்ணன் ஆசையும் கூட ரூபனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இவர்களின் அன்பினால் தன் அன்னையின் லட்சியம் வீணாகப் போவதை ரூபன் சிறிதும் விரும்பவில்லை.

எனவே கண்ணன் இருக்கும்போது அவன் இயல்பாக அமருவதைப் போன்று வினயாவின் அருகில் நெருங்கித் தான் அமர்வான். அப்பொழுதெல்லாம் வினயாவின்



உள்ளமும் மனமும் கூடத் தள்ளித்தான் அமர்வாள். ஆனால் அதையும் சாதாரணமாக எடுத்துக் கொள்பவனைப் போல அவன் தலையில் தட்டி 'தொட்டாச் சிணுங்கி' என்று கேலிபோல சிரிப்பான் அவன். கண்ணனும் அவனுடன் சேர்ந்து சிரிப்பான். ஆனால் கண்ணனின் பார்வை அவளைத் தேற்றும் ரகசியத்தை வினயாவின் கண்கள் மட்டுமே அறியும். ஆனால் ரூபனைக் கண்டிக்காத கண்ணனின் குணம் மட்டும் என்றுமே அவளுக்கு பிடிக்காத ஒன்று.

''என்னத்தான் நீங்க? அவனக் கண்டிக்கவே மாட்டேன் என்கிறீர்களே? ரூபன் செய்வது எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கோபத்துடன் கண்ணனிடம் சொல்லும் பொழுதெல்லாம் அவன்,

''அவனும் உனக்கு அத்தான் தானே வினயா'' என்பான்.

''ஆமாம். சரியான அத்தான் பொத்தான். அவனை என்றைக்காவது நான் அப்படிக் கூப்பிட்டிருக்கிறேனா'' என்பாள் வினயா.

அது உண்மைதான் என்பதை கண்ணனும் அறிவான். வார்த்தைக்கு வார்த்தை கண்ணனை அத்தான் என்பவள் ரூபனின் பெயர் சொல்லிக் கூட கூப்பிடமாட்டாள். அவனிடம் தேவையில்லாமல் பேசவும் மாட்டாள். பெரியவர்கள் முன் பேசவேண்டிய தேவை வந்தால் மட்டும் அவனின் பெயர் சொல்லி பேசுவாள். இது எல்லாமே ரூபனுக்கு தெரியும். ஆனால் வேண்டுமென்றே ரூபன், மற்றவர்கள் முன்பு உரிமையாக பேசுவதும், பாசத்துடன் வினயாவை பார்த்துச் சிரிப்பதையும்

அவளைத் தோழமையுடன் தொட்டுப் பேசுவதையும் ஒரு கடமையாகவே அவன் செய்து வந்தான். கண்ணனை விட தான் எந்த வகையிலும் உரிமையில் குறைந்தவன் இல்லை என்பதை வினயாவிற்கு உணர்த்திக் கொண்டேயிருப்பான்.

ரூபனின் செயல்கள் எதிலும் குற்றம் சொல்ல முடியாதபடி அப்பாவிபோல இதையெல்லாம் செய்யும் திறமை அவனுக்கிருந்தது. இதையெல்லாம் அறிந்து கொண்டும், வினயாவின் உள்ளம் படும் பாட்டை அந்த வீட்டில் உணர்ந்து கொண்ட ஒரே ஜீவன் அலமேலம்மாள் மட்டும் தான். ஆனால் அவளும் புரிந்தாலும் வெளியே சொல்லமாட்டாள். ஏனெனில் தன் பிள்ளைகளின் குடும்ப ஒற்றுமை இதனால் குறைந்து போகும் என்று அவள் பயந்தாள்.

''ஏம்ப்பா ரூபா? உனக்கு வேற சோலியே இல்லையா? எப்பப் பார்த்தாலும் பொம்பளைப் புள்ளையை வம்பிழுத்துக்கிட்டு. போய் வேற வேலை இருந்தாப் பாரு'' என்று அதட்ட மட்டுமே செய்வாள்.

''ஏன் பாட்டி? என் அத்தை மகள் ரத்தினத்தை வம்பிழுப்பதைத் தவிர வேற வேலை எனக்கு முக்கியமா என்ன?'' என்று பாட்டியையும் வாயடைத்து விடுவான் அவன்.

''என்னடா அத்தை மகள் ரத்தினம் என்று ரைமிங் டயலாக்கெல்லாம் கொடுக்கிறே?''

''டயலாக் இல்லண்ணா. என் அத்தை மகள் எனக்கு ரத்தினம் தானே.''



''என்ன வினயா. இவன் இப்படிச் சொல்றான். நீ வினயான்னு தானே எனக்குத் தெரியும்.''

''சும்மா இருங்கத்தான். அவன் தான் உளருறான்னா நீங்களும் அவனுடன் சேர்ந்துக்கிட்டு...''

''ஹலோ மேடம். அவன் இவன்னு சொல்ற வேலையெல்லாம் வேண்டாம். சார் இப்போ காலேஜ் போயாச்சு. இன்னும் இரண்டு மூன்று வருஷத்தில் கல்யாணத்துக்குக் கூட நான் ரெடி. தெரியுதா? அதனால மரியாதை கொடுத்துப் பேசணும்.''

ரூபனின் பேச்சில் சிலையாகிப் போனது வினயா மட்டும் தான். கண்ணனோ ''டேய் போதும்டா. உன் பெருமையைக் கொஞ்சம் நிறுத்து. எனக்கு காது வலிக்குது'' என்று காதைப் பொத்திக் கொண்டு சிரித்தான். ''என்ன வினயா இன்னும் இரண்டு வருஷத்தில் கல்யாணத்தை வெச்சுக்கலாம் தானே.''

''ரூபா கேலிப்பேச்சை இத்தோடு விடு. இது என்ன பேச்சு.''

''ஏண்ணா. நான் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதா.''

''தாராளமாய் பண்ணிக்கடா. ஆனால் அதையெல்லாம் பேச ஒரு வயசு வேணாம்.''

''ஒரு வயசுலயே கல்யாணப் பேச்சை பேசணுமா? எனக்குத் தெரியாமல் போச்சேண்ணா?''

''டேய் வாலு. உனக்கு இருக்கிறது வாயா இல்ல கால்வாயாடா! திறந்தா மூடவே மாட்டேங்கிறதே? ஒரு வயசுன்னா கல்யாண வயசுடா.''

''ஒரு வயசு கல்யாண வயசா? உங்களுக்கு என்னண்ணா ஆச்சு.''

''ஹா... ஹா... ஹா... டேய் நீ இருக்கியே உன்னை என்ன செஞ்சால் தகும். ஒரு குறிப்பிட்ட வயசு வரணும்னு சொன்னேன்டா.''

''சரிண்ணா. சீரியஸாகக் கேட்கிறேன். அந்தக் குறிப்பிட்ட வயசுல நான் கேட்கிற பொண்ணை எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பீங்களா?''

''என்னடா நீ? இவ்வளவு தீர்மானமாய் பேசுறதைப் பார்த்தா ஏதோ இருக்கிற மாதிரித் தெரியுதே? என்னடா அது?''

''அதுவாண்ணா... அது வந்து...''

''அத்தான் இவன் பேச்சையெல்லாம் கேட்டுக்கிட்டு நீங்களும் உட்கார்ந்திருக்கிறீங்களே? எழுந்திரிங்க. அத்தையும் மாமாவும் கூப்பிடுறாங்க'' என்று வேகமாக இடைமறித்த வினயாவின் பார்வை பயத்துடன் ரூபனின் மேல் பாய்ந்தது. அவளுக்கு ரூபனின் திட்டம் நன்றாக புரிந்தது. ரூபன் கேட்டுக் கண்ணன் எதையும் இல்லை என்று சொல்ல மாட்டான். அதே சமயம் வினயா ரூபனை வேண்டாம் என்று சொல்லிவிட்டாலும், கண்ணனும் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டான். ஒன்று வினயா தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அல்லது இருவருக்குமே கிடைக்கக் கூடாது என்று ரூபனின் எண்ணம் வினயாவிற்குத் திகிலூட்டியது. அவள் ரூபனின் முகத்தைக் கெஞ்சலும் பயமுமாகப் பார்த்தாள்.



என்றுமில்லாத அன்று ரூபன் பேசிய பேச்சும் வினயா அவனைப் பார்த்த பயந்த பார்வையும் கண்ணனின் மனதில் ஆடிப் பதிந்தது. அவன் புருவங்களின் மத்தியில் யோசனையுடன் ஒரு முடிச்சு விழுவதைப் பார்த்த வினயாவின் கண்கள் கலங்கின. அவள் எது நடக்கக்கூடாது என்று நினைத்துப் பயந்தாளே அது நடந்து விட்டதை இருண்ட கண்ணனின் முகம் காட்டிக் கொடுத்தது.

கண்ணனின் மனதில் வினயாவின் மேல் சந்தேகம் வரவில்லை. அவள் அவன் மேல் கொண்டிருந்த காதலின் ஆழத்தை அவன் நன்றாக அறிவான். வார்த்தைகளினால் காதலை அவள் சொல்லாவிட்டாலும் அவள் கண்கள் பேசும் கோடானுகோடி காதல் மொழிகளை அவன் இதயம் அறியும். அந்தக் காதல் அவளுக்கு தன் மேல் மட்டுமே உண்டு என்பதை அறிந்த அவனது ஆண்மை கர்வத்தின் பூரிப்பிலிருந்தது. ஆனால் அவளின் பார்வை ரூபனிடம் சொல்லிய பயம் கலந்த செய்தி என்ன என்று அறிந்து கொள்ள அவன் விரும்பினான்.

''என்ன வினி? என்ன விசயம்?''

''என்ன வினயா. அந்த விசயத்தை நான் அண்ணனிடம் சொல்லி விட்டவா?''

விஷமத்துடன் பளபளத்த ரூபனின் விழிகள் வினயாவிற்கு மேலும் அச்சமூட்டியது.

''அது, அது வந்து அத்தான்... ஒண்ணுமில்லை அத்தான். நீங்க வாங்க. மாமா கூப்பிடுறாங்க...'' என்று படபடத்த வினயாவைப் பார்த்த கண்ணனின்

புருவங்கள் மேலும் உயர்ந்தன. அவளை வெறித்துப் பார்த்துவிட்டு மடமடவென்று வெளியே சென்றவன் அதன் பின் அவளைப் பார்க்க வரவில்லை. இரண்டு வாரங்களில் பாரினிற்குப் படிக்க சென்றுவிட்டான். ஊருக்குப் போகும்போது கூட அவளிடம் அவன் சொல்லிக்கொள்ளவில்லை.

## 15

''வேதவல்லி, வேதவல்லி'' என்று இரைந்து கொண்டே வீட்டுக்குள் வந்த கணவரைப் பார்த்து முறைத்தாள் வேதவல்லி.

''இங்கே தான் இருக்கிறேன். ஏன் அடுத்த தெருவில் இருக்கிறவளைக் கூப்பிடுறதைப் போல் ஏலம் போடுறீங்க.''

''ஏண்டி நான் கூப்பிடுறது உனக்கு ஏலம் போடுறதைப் போலவா இருக்கு. அறைஞ்சேன்னா பல்லு பேந்திடும்.''

''ஆமாமாம் நீங்க, அறைஞ்சு பேக்குறதுக்குத் தான் நாங்க பல்லை வைத்திருக்கோம். தேவையில்லாமல் பேசுனீங்கன்னா பாருங்க.''

''பேசுனா என்னடி செய்வ. வாயெல்லாம் ரொம்பத் தான் நீளுது. நாக்கை அறுத்திருவேன் பார்த்துக்க.''

''ஆமா பல்லில் இருந்து இப்ப நாக்குக்கு வந்துட்டீங்களாக்கும். அதையும நீங்க அறுக்கிறதுக்காக நாங்க வளர்க்கலை.''



''நாங்க அறுக்கிறதுக்காடி நீ நாக்கை வளர்த்து வைச்சிருக்கிற. என் கழுத்தை நீ அறுக்கிறதுக்குத் தான வளர்த்திருக்க.''

''இங்க பாருங்க. இதுக்கு மேல பேசினா நான் மனுசியா இருக்க மாட்டேன் ஆமா.''

''இப்ப மட்டும் நீ மனுசி மாதிரியா இருக்கிற.''

''அப்புறம் நான் பேய் மாதிரியா இருக்கேன்?'' கோபத்துடன் கண்களை முழித்துப் பார்த்து பற்களைக் கடித்தப்படி கேட்ட மனைவியை மேலும் கீழும் பார்த்த பலராமன் கடகடவெச் சிரித்தார்.

''அச்சு அசலா பேய் மாதிரித்தாண்டி இருக்க.''

''நல்லா வந்திரும் வாய்ல. ஏதோ மரியாதைக்காக பேசாமல் இருந்தால் ரொம்பத்தான் துள்ளுறீங்க. இப்ப எதுக்கு என்னைக் கூப்பிட்டு இத்தனை எகத்தாளம் பண்ணுறீங்க.''

''நீ பண்ணுன ரகளையில் பேசவந்த பேச்சே மறந்துருச்சுடி.''

''ஞாபகம் வர்றப்ப கூப்புடுங்க. இப்ப எனக்கு வேற சோலியிருக்கு'' என்று திரும்பிய மனைவியை நிறுத்தினார் பலராமன்.

''சொல்றதைக் கேட்டுட்டுப் போடி.''

''சொன்னாத்தானே கேக்கறதுக்கு.''

''நீ சொல்ல விட்டால்தானேடி.''

''விடாமல் வாயை மூடியா வச்சுருக்கேன்.''

''உஷ்... அப்பா... இப்பவே கண்ணைக் கட்டுதே அம்மா ரூபாவதி கொஞ்சம் தண்ணி கொண்டு வாம்மா என்றவாறே சோபாவில் அமர்ந்தார் பலராமன்.

''என்னப்பா? எதுக்கு இத்தன சண்டை காலங்க ாத்தால'' என்றபடி தண்ணீர் சொம்பை நீட்டிய மகளை பார்த்து புன்னகைத்தார் தந்தை.

''உன் அண்ணன் கண்ணன் பாரினிலிருந்து வரு கிறாண்டாம்மா. அதைச் சொல்லக் கூப்பிட்டது தான் குத்தமா போச்சு உங்க அம்மாவுக்கு.''

''என்ன அண்ணன் வர்றாரா.''

''கண்ணன் வர்றானா'' என்ற இருவரின் பார்வையு ஒன்றுடன் ஒன்று அர்த்தத்துடன் கலந்தது.

''என்னம்மா? யாரு வர்றாங்க?'' என கேட்டுக் கொண்டே வந்த ரூபனைப் பார்த்து ரூபாவதி, ''கண்ணன் தான் வர்றாங்க'' என்றாள்.

''என்ன?'' என்றபடி அப்படியே நின்று விட்டான் ரூபன்.

''அதற்குள்ளாகவா படிப்பு முடிஞ்சிருச்சு.''

ஆமாண்டா. வருசம் போனதே தெரியலை. இப்பத் தான் போன் வந்துச்சுன்னு உன் பாட்டி சொன்னாங்க அதைச் சொல்லலாமின்னு கூப்பிட்டதுக்குத் தான் உன் அம்மா இவ்வளவு நேரம் சண்டையிழுத்துட்டாள் போட்ட சண்டையில எனக்குப் பசியே வந்துருச்சு ரூபாவதி சமையல் ஆச்சான்னு போய் நீ பாரு. நான் குளிச்சிட்டு வந்துருறேன்'' என்று கூறியவாறே மாடி யேறிப் போனார் பலராமன்.



அவர் போவதைத் திரும்பிப் பார்த்து உறுதி செய்து கொண்ட ரூபன் தாயின் பக்கம் திரும்பி,

''என்னம்மா அதுக்குள்ள வந்துட்டான்'' என்றான்.

''வந்தால் என்னடா. எல்லாவற்றிற்கும் நேரம் வந்துருச்சுன்னு வச்சுக்கோ. உனக்கு வயது பத்தாது?'' என்றாள் வேதவல்லி.

''அம்மா வயசு, அறிவு எல்லாம் கூடித்தான் இருக்கு. நீங்க கவலைப்படாதீங்க.''

''எனக்கென்னடா கவலை. எள்ளுன்னு சொல்லும் முன்பு எண்ணெயா நிக்கிற உன்னைப் பெத்த நான் எதுக்குக் கவலைப்படணும். கவலைப்பட வேண்டியது அந்த சிவராமனும், பார்வதியும். அப்புறம் அந்த வினயாக்குட்டியும் தான். நானில்லை'' என்ற தாயைப் பார்த்துப் பெருமையாகச் சிரித்தான் மகன்.

ஆனால் வேதவல்லிக்கோ பெருமையோ கர்வமோ உண்மையில் ஏற்படவில்லை. சொல்லப்போனால் அவள் உள்ளத்தில் அப்பொழுது பெரும் புயல்தான் அடித்துக் கொண்டிருந்தது. மனம் கலக்கத்திலும் குழப் பத்திலும் ஆழ்ந்தது. அதற்குக் காரணம் இல்லாமில்லை. ரூபனும் மற்றவர்களும் நினைப்பது போல் வினயா ஒன்றும் அப்பாவியில்லை என்று வேதவல்லிக்கு நன்றாகத் தெரியும். அவள் மிகுந்த புத்திசாலி என்பதும், கண்ணன் மேல் அவள் கொண்டிருந்தது வெறும் காதல் மட்டும் அல்லாமல், அந்த மீராவைப் போன்ற அளவில்லா அன்பும் பக்தியும் கொண்ட தெய்வீக உறவு என்பதையும் அவள் நன்கு அறிந்திருந்தாள். வினயா

கண்ணனைத் தவிர வேறு ஒருவரையும் மனத்தாலு நினைக்க மாட்டாள் என்ற உண்மையையும் அவ தெரிந்தே மகனைத் தூண்டி விட்டுக் கொண்டிருந்தா அவள் ஒருவரையும் மணக்காமல் போனாலு போகட்டும். ஆனால் தன் மைத்துனனின் மகன் மட்டு ஆவலோடு வாழக்கூடாது என்ற எண்ணம் ஒன்றுதா அவள் மனதில் இருந்தது.

இதனால் தன் மகனின் வாழ்க்கையும் வீணா விடுவேமா என்ற அச்சமும், பயமும் துளியும் அ ளுக்குக் கிடையாது. ஏனெனில் ரூபன் வினயாவின் மீ கொண்டிருந்தது பொறாமையும், துவேஷமும் மட்டு தான் என்பதை அவள் நன்கு அறிவாள். வினயாவை போலவே கண்ணனும் வேறு ஒரு பெண்ணை ம தாலும் நினைக்க மாட்டான். எனவே இந்த குடு பத்திற்கு வரும் முதல் வாரிசு தன் மகனின் மூலமே வரவேண்டும் என்றும் இந்த குடும்பத்தின் சொத்துக்க அனைத்திற்கும் தன் மகனும், அவனின் வாரிசுமே ஏகபோக உரிமைக்காரர்களாக இருக்க வேண்டும் என்று வேதவல்லி ஆசைப்பட்டாள். ஏனெனில் கண்ணன் ரூபனைத் தன் உயிராக நினைப்பதுடன் அவன் குழந்தைகளை தன் பிள்ளைகளாக ஏற்றுக் கொள்வான் என்றும் அவள் நம்பினாள்.

ஆனால் வேதவல்லி அறியாத ஒன்றும் இருந்தது எந்த ஆண்மகனும் தன் காதலியை அடுத்த ஆண் மகனுக்கு விட்டு தரமாட்டான் என்பதையும், அவன் தன் சொந்தத் தம்பியாயினும், உயிராகவே இருப்பினும் தனக்கு உரிமையான பெண்ணிடம் அடுத்தவனை



அணுகக் கூட அனுமதிக்க மாட்டான் என்பதையும் அவள் அறியவில்லை. அதிலும் கண்ணன் எவ்வளவு அன்பானவோ அவ்வளவு எண்ணங்களில் உறுதியானவனும் கூட. அவன் வினயாவை தன் காதலியாக மட்டும் இல்லை உயிராக எண்ணி வாழ்பவன். அவள் நிழலைக் கூட அடுத்தவரைத் தீண்ட அனுமதிக்காதவன். கனவும், நினைவும், வாழ்வுமாய் அவளைத் தன் மனதில் வைத்துப் போற்றுபவன். அவளுக்காகவே வாழ்பவன். அவளை அவனுக்காக காதலிப்பவன். எனவே வினயாவின் மேல் ஒரு துரும்பை கூட அடுத்தவர் கிள்ளிப் போடவும் அவன் அனுமதிக்கமாட்டான். வினயாவின் பெற்றவர்கள் கூடத் தனக்கு அடுத்து தான் அவள் மீது உரிமையுள்ளவர்கள் என்ற எண்ணம் கொண்டவன் கண்ணன். ஆனால் கண்ணனின் பாட்டியான அலமேலம்மாளுக்குக் கண்ணனின் இந்தக் குணம் நன்றாகத் தெரியும்.

அவள் நடக்கும் எதையும் வெளியில் சொல்லாமல் இருப்பதற்கும் தன் பேரன் மேல் அவள் வைத்திருக்கும் இந்த நம்பிக்கை தான் காரணம். கண்ணனின் மன உறுதியும், வினயாவின் மேல் அவள் கொண்டிருக்கும் அன்பின் ஆழமும் அலமேலம்மாளிற்கு நன்கு தெரியும். எனவே தன் இளைய பேரனான ரூபனால் தன் பேத்திக்கு எந்த தீங்கும் வரமுடியாது என்று அவள் உறுதியாக நம்பினாள்.

மேலும் மென்மையான தன் பேத்தியைத் தன் கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்கும் நல்ல கணவனாகத் தன் பேரன் கண்ணன் மட்டுமே இருக்கமுடியும் என்ற அசைக்க முடியாத எண்ணமும் அலமேலம்மாளிற்கு

உண்டு. ஏனெனில் வினயா எவ்வளவு புத்திசாலியோ, அவ்வளவு மென்மையான உணர்வுகளை கொண்டவள். தன் மனக் காயத்தை அவள் யாரிடமும் கூறமாட்டாள். தனக்குள்ளேயே மறுகினாலும் அடுத்தவர்களுக்கு தெரிய விடமாட்டாள். அவளின் இந்த சுபாவமே அவ ளுக்கு எதிரியாகும் என்று அலமேலம்மாள் கனவிலும் எண்ணவில்லை.

# 16

வழக்கத்திற்கு மாறாக அன்று அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டது வினயாவிற்கு. என்றும் போல அன்றும் கண் விழித்ததும் எதிரேயிருந்த ஏழுமலை யானின் படத்தைப் பார்த்தவளுக்கு மனமெல்லாம் பூப்பூத்தது போல் சந்தோஷம் பொங்கியது. தன் சந்தோஷத்திற்கான காரணம் புரியாமல் திகைத்தாலும் அந்த மகிழ்ச்சியைக் கண்மூடி அனுபவித்தபடி சில நிமிடங்கள் கட்டிலிலேயே அமர்ந்திருந்தாள்.

பின் எழுந்தவள் ஹாலைத் தாண்டி பால்கனிக்கு வந்து எதிரேயிருந்த பங்களாவை கண் நிறையப் பார்த்தாள். இன்னும் சில தினங்களில அந்த பங்களாவில் கண்ணன் இருப்பான் என்ற நினைவே அவளுடைய ஆனந்தத்தை அதிகரித்தது.

''என்ன வினி? இன்னிக்கு சூர்யன் மேற்கில் உதித்ததா? இவ்வளவு சீக்கிரத்தில் எழுந்துட்டே?'' என்று வினவியபடி வந்த பாரிஜாதம் வினயாவின் கையில காபிக் கோப்பையைத் திணித்தாள்.



''சீக்கிரம் குடிச்சுட்டுக் குடு. எனக்கு தலைக்கு மேல வேலையிருக்கு.''

''என்னம்மா அவசரம். அப்பா வாக்கிங் முடிச்சுட்டு வந்துட்டாராக்கும். போய் வரவேற்கணுமா?''

''போடி அரட்டை. குடிச்சுட்டுக் காபிக் கப்பை உள்ளே கொண்டு வந்து வை.''

''போம்மா, எவ்வளவு தூரம் கப்பை எடுத்துட்டு வர்றது. ஃபைவ் மினிட்ஸ் நில்லேன். உன் கையிலேயே கொடுத்துறேன்.''

''ஏண்டி நாளைக்கு கல்யாணம் பண்ணிக் கொண்டு போற வீட்டில் காபி கப்பை தூக்க வேலைக்கு ஆள் வைக்கச் சொல்லுவ போல.''

''அதையெல்லாம் அப்ப நானே பார்த்துக்கிறேன். இப்ப நீ கப்பை புடி தாயே'' என்று காலி கப்பை தாயின் கரங்களில் திணித்து விட்டு சிட்டாகப் பறந்தாள் மகள்.

''இவளுக்கு எல்லாமே விளையாட்டுத்தான். என் னைக்கு பொறுப்பு வரப் போகுதோ?'' என்று பெருமூச்சு விட்டபடி நகர்ந்தாள் பாரிஜாதம்.

வேகமாக கீழே வந்த தோட்டத்திலிருந்த ஊஞ்சலில் அமர்ந்து அதே வேகத்தில் காலை ஊன்றி தள்ளினாள். காற்றில் ஆடிய ஊஞ்சலில் கண்களை இறுக்க மூடியபடி அமர்ந்திருந்தவளின் இதழ்கள் தன்னை அறியாமல் முணுமுணுத்தன.

''அடிப்பெண்ணே பொன்னூஞ்சல்

ஆடும் இளமை

வண்ணங்கள் தோறும் இயற்கை
உல்லாசம் உற்சாகம் வாழ்வில்
உண்டானதே சுகம் கோடியல்லவே
பண்பாடுமே மனம் பாடுகின்றதே...''

கண்களை திறந்தவளுக்கு அப்பொழுது தான், தான் தோட்டத்தில் அமர்ந்திருப்பது உறைத்தது. இதழ்களை மடித்துக் கள்ளத் தனமாக கடித்துக் கொண்டாள். பின்னந் தலையில் தன்னைத் தானே தட்டிக் கொண்டாள்.

''உனக்கு என்னவாயிற்று வினயா? ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? இன்று எதற்கு இந்தக் கொண்டாட்டம்?'' என்று தன்னையே கேட்டுக் கொண்டவளுக்கு காரணம் புரியவில்லை. ஆனால் மனம் மட்டும் அடங்காமல் ஆர்ப்பரித்தது. வாய் மறுபடியும் மனதோடு சேர்ந்து பாடத் துவங்கியது.

''கண்ணன் வருவான்
கதை சொல்லுவான்
வண்ணமலர் தொட்டில் கட்டித்
தாலாட்டுவான்
குழலெடுப்பான் பாட்டிசைப்பான்
வலம்புரிச் சங்கெடுத்துப்
பாலுட்டுவான்...''

கண்கள் மயங்க மனம் கிறங்கப் பாடியவள்,

''இன்னமும் பாலை அடுத்தவர்தான் ஊட்டணுமா. நீயாகக் குடிக்க இன்னும் பழகலியா?'' என்ற குரலைக் கேட்டதும் அதிர்ந்து கால்களை அவசரமாகத் தரையில் ஊன்றி ஊஞ்சலை நிறுத்தித் திரும்பிப் பார்த்தாள்.



பார்த்தவளின் கண்கள் பார்த்தபடியே இருந்தன. ஊஞ்சலை இறுகப் பற்றியபடி நின்றவளின் கரங்கள் நடுங்கின. கீழ் உதட்டை பற்களால் அழுத்திக் கடித்தபடி சிலையாக நின்றுவிட்டாள் வினயா.

வெண்ணிற நைட்டியில் கருஞ்சிவப்பு ரோஜாக்கள் மலர்ந்திருக்க, விரிந்திருந்த கூந்தல் இடுப்புக்கும் கீழே தோகை போல் விரிந்திருக்க பளிங்குக் கன்னங்கள் எதிர்பாராத அதிர்ச்சியில் சிவந்திருக்க சந்தனச் சிலையாய் எதிரே நின்றிருந்தவளைக் கண்சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான் எதிரே நின்று கொண்டிருந்த கண்ணன்.

ஆறடி உயரமும், அகன்ற தோள்களும், கூரான நாசியும், பாரின் தந்த சிவப்பு நிறமும் கொண்ட கண்ணன் கால்களை அகலமாக விரித்தபடி கைகளைக் குறுக்கே கட்டிக்கொண்டு அவளையே பார்த்தபடி நின்றிருந்தான். அவனின் பார்வையில் அவளைப் பார்த்த சந்தோசமும் அவளைப் பாராதிருந்த தாபமும் மாறி மாறித் தோன்றியது.

எதிர்பாராமல் கண்முன்னே தன் அத்தானைப் பார்த்து விரிந்த கண்களை இமைக்காமல் கண்ணனைப் பாத்துக் கொண்டிருந்த வினயாவின் கண்களிலிருந்து கண்ணீர் தானா வழிந்தோடியது. கண்ணீரைத் துடைக்கவும் தோன்றாமல் மந்திரத்தில் கட்டுண்டவளைப் போலத் தன்னைப் பார்த்து கொண்டிருந்த வினயாவின் தோற்றத்தை கண்ட கண்ணனின் கைகள் தானாக விரிந்தன அவளை நோக்கி.

''வினிக்குட்டி...'' என்றபடி அவளை பார்த்து அடியெடுத்து வைத்தவனை,

''வாப்பா கண்ணா! என் ராஜாக்குட்டி'' என்ற பாரிஜாதத்தின் பாசமான குரல் தடுத்தது.

''ஆமாம் அத்தை... இதோ வர்றேன்...'' என்ற கண்ணன் வினயாவை அழுத்தமாக ஒருமுறை பார்த்து விட்டுத் திரும்பி வேகமாக வீட்டிற்குள் விரைந்தான்.

எவ்வளவு நேரம் வினயா அப்படியே நின்றிருந்தாளோ அவளுக்கு தெரியாது. மெதுவாகத் தன்னுணர்வுக்குத் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டாள். கண்ணன் வந்துவிட்டான் என்ற எண்ணம் மறைந்த அவளுடைய சந்தோசத்தை அதிகம் ஆக்கியது. அதிலும் அவன் அந்தப் பழைய பாசத்துடன் கைகளை விரித்து அவளை அழைத்த தோற்றம் அவள் மனதில் ஒரு அழகான ஓவியமாக நிலைத்தது. இந்தச் சித்திரம் அவளது வாழ்நாளுக்கும் மறையாது என்று எண்ணித் தனக்குள் சிரித்தபடி வீட்டுக்குள் மெதுவாக நுழைந்தாள்.

''என்னப்பா கண்ணா! எப்ப வந்தே? படிப்பெல்லாம் நல்லபடியா முடிஞ்சதா?'' உள்ளே பாரிஜாதம் மருமகனின் அருகில் அமர்ந்து கேள்விகளால் அவனைத் துளைத்து கொண்டிருந்தாள்.

''இப்பத்தான் வந்தேன் அத்தை. நேராக உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். இன்னும் வீட்டுக்குப் போகலை'' என்ற கண்னின் விழிகள் வினயாவைப் பார்த்து உனக்காத்தான் வந்தேன் என்பதை அவளுக்கு உணர்த்தியது. அத்தை, மாமா, வேலையாட்கள் என்று! அனைவருக்கும் அவரவர் கேள்விகளுக்குத் தகுந்த பதில்களை அளித்துக் கொண்டிருந்த கண்ணனின் கண்கள் மட்டும் வினயாவின் மீதே நிலைத்திருந்தது. அவனது பார்வையை



வினயாவும் உணர்ந்து கொண்டு தான் இருந்தாள். ஆனால் அவனது பார்வைக்கு பதில் பார்வையை தர விடாமல் நாணம் அவனது பார்வைக்கு பதில் பார்வையை தரவிடாமல் நாணம் அவளை தடுத்துக் கொண்டிருந்தது. எனவே இலேசாக விழியுயர்த்தி அவனைப் பார்ப்பதும் பின் விழிகளை திருப்பிக் கொள்வதுமாக அவள் தன்நிலை மறந்து நின்று கொண்டிருந்தாள்.

''என்ன வினிக்குட்டி. உன் கண்ணன் அத்தானைப் பார்த்தும் அங்கேயே நிக்குற. இப்ப வந்து உட்கார்.''

''இல்லைம்மா. நான் இதோ குளிச்சிட்டு வர்றேன்'' என்றபடி ரூமுக்குள் ஓடிய வினயாவை பார்த்த கண்ணனின் புருவங்கள் சுளித்தன.

''சரி அத்தை. நானும் நம்ம வீட்டுக்குக் கிளம்பறேன். அம்மாவையும், அப்பாவையும் இன்னும் பார்க்கலை.''

''காலை டிபனுக்கு இங்கே வந்துரு கண்ணா.'' இன்னைக்கு எல்லோருக்கும் இங்கு தான் சாப்பாடு.''

''சரிங்க அத்தை, வர்றேன் மாமா'' என்றவன் வேகமாக வெளியே விரைந்தான்.

## 17

ஆறு வருடங்கள் என்பது மிகப்பெரிய இடைவெளி தான். ஆனால் கண்ணனுக்கு அந்த இடைவெளி மிகவும் தேவைப்பட்டது. அவனுக்கு தன்னைப் பற்றியே ஒரு முடிவுக்கு வர அந்த இடைவெளி அவசியமாக இருந்தது. ஏனெனில் அதுவரை அவன் வினயாவைத் தன்

உலகமாக உயிராக எண்ணி வாழ்ந்து வந்தானே தவிர அதற்குமேல் அவனது உலகத்தைப் பற்றி சிந்திக்க வில்லை. என்று வினயா ரூபனைப் பார்த்துப் பயந்து விழிகளில் கெஞ்சினானே அன்று தான் அவர்களைப் பற்றிய அடுத்தகட்ட வாழ்க்கையைப் பற்றி அவன் சிந்திக்கவே ஆரம்பித்தான். அதைப் பற்றிச் சிந்திக்கவே ஆரம்பித்த பின்தான் வினயாவைத் தான் எவ்வளவு காதலிக்கிறோம் என்ற உண்மையே அவனுக்கு உறைத்தது.

அதுவரை அன்பு பாசம் என்றே எண்ணி வந்தவனின் மனம் அன்று தான் வினயாவின் மேல் அளவில்லாத காதலைத் தான் கொண்டிருப்பதை உணர்ந்தது. அதை உணர்ந்த அடுத்த கணமே அவளை அள்ளி அணைக்கவும், தனக்குள் புதைத்துக் கொள்ளவும் துடித்த அவன் ஆண்மையை அடக்க அவன் பெரிதும் முயற்சி பண்ணியும் அது அவனால் முடியாமல் போயிற்று. தன் தாபம் மேலும் மேலும் கூடுவதை கையாலாகமல் உணர்ந்து துடித்துக் கொண்டிருந்தான்.

வினயாவின் மேல் அவனுக்கு அனைத்து உரிமை களும் உள்ளதை அவன் நன்கு அறிவான். ஆனால் அந்த உரிமையினால் அவளக்குத் தன் மேல் காதல் மலர்வதை அவன் மனம் ஏற்கவில்லை. தன்னைப் பார்த்ததும் வினயாவின் விழிகளும் முகமும் மலர்வது பாசத்தினாலா, காதலினாலா, அவன் உறுதியாகத் தெரிந்து கொள்ள எண்ணினான். ஆனால் அது எப்படி யென்பதைச் சிந்திக்கச் சிந்திக்க அவனுக்கு தலையே வெடித்துவிடும் போல் தோன்றியது. அன்று ரூபனை



வினயாவின் விழிகள் பார்த்தது பயத்தினாலா அல்லது அவனை எச்சரிக்கவா என்று கூட அவன் மனம் குழம்ப துவங்கியது. ஏனெனில் வினயாவிற்கும் தனக்கும் உள்ள வயது வித்தியாசம் அதிகம் என்பதை என்றுமில்லாமல் அவன் அறிவு என்று அவனுக்கு அறிவுறுத்தியது. வினயா அப்பொழுது பதினொன்றாம் வகுப்புத் தான் படித்துக் கொண்டு இருந்தாள். பாசத்தினால் தன்மேல் அவள் அன்பு கொண்டு இருந்ததை காதல் என்றுதான் தான் தவறாக எண்ணிக் கொண்டோமோ என்று அவன் மனம் அவனைக் கேள்வி கேட்டது. தலையைக் கைகளினால் தாங்கிக்கொண்டு படுக்கையில் சரிந்து அமர்ந்தவன் அன்று இரவு சாப்பிடக் கூடக் கீழே போகவில்லை.

இரவு முழுவதும் யோசித்த அவனுக்கு ஒரு வழிதான் தென்பட்டது. அது வினயாவை விட்டு அவன் சிறிது காலம் விலகிப் போவது. அவன் சிறிது காலம் அவளைப் பார்க்காமல் இருந்தால் அவள் கண்ணன் மேல் கொண்டிருப்பது உறுதியான காதல்தானா அல்லது வெறும் பாசம்தானா என்று அறிந்து கொள்ள முடியும் என்று அவன் நம்பினான். ஏனெனில் எப்படி கண்ணன் வினியாவை உயிருக்குயிராக காதலிக்கிறானோ அப்படி வினயாவும் தன்னைக் காதலிக்கிறாள் என்று அவன் உள் உணர்வு ஆழமாக நம்பியது. ஆனால் அவன் அறிவும், ஆண்மையும் அதை உண்மைதானா என்று சோதிக்க விரும்பியது. அப்படி அவள் கண்ணனை உயிராகக் காதலித்தால் இந்த இடைவெளியானது தன்னைப்போல அவளுக்கும் தன் மேலுள்ள .காதலை அதிகரிக்கச் செய்யும் என்று எண்ணினான். எனவே தான் அவன்

அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் படிப்பைக் காரணம் காட்டிப் பாரீனுக்கு பறந்து போனான். வினயாவை நேரில் பார்த்தால் தன் மனம் மாறி விடும் என்று கண்ணன் பயந்ததும் அதற்கு ஒரு காரணம்.

அதன்படியே இந்த ஆறு வருடங்களிலும் ஊருக்கு வரவே இல்லை அவன் பெற்றவர்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை விட வினயாவை பார்க்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு அதிகமிருந்தது. ஆனால் அதனை அடக்கிக் கொண்ட கண்ணன் அவன் கவனத்தப் படிப்பில் அதிகமாகச் செலுத்தி படிப்பில் கோல்டு மெடலையும் வாங்கி விட்டான். என்றைக்கு அவன் படிப்பு முடிந்ததோ அதன்பின் அவனது மனத்தை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. வினயாவின் மேல் அவனுக்கிருந்த கட்டுக்கடங்காத காதலை அவளுக்கு உணர்த்தி விட அவன் துடித்தான். அவளது அருகாமையை அவனது ஆண்மை உணரத் துடித்தது. அவளை தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அவனை உடனே ஊருக்குச் செல்லத் தூண்டியது. அதன் காரணமாகவே பட்டம் வாங்கிய கையோடு ஊருக்கு பறந்து வந்தான். அவனுடன் வந்த நண்பர்கள் ஏர்போர்ட்டில் இறங்கியதுமே,

"மச்சான்ஸ், நம்ம எல்லோருமே இரண்டு நாள் இங்க தான் தங்கறோம். பேச்சிலர்ஸ் லைப்பை என்ஜாய் பண்ணிட்டு அப்புறம் தான் ஊருக்குப் போறோம் சரியா" என்றபடியே ஸ்டார் ஹோட்டலுக்கு விரைந்தனர். ஆனால் அவன் மட்டும் அவர்களுடன் கலந்து கொள்ளாமல் எஸ்கேப் ஆகி காரைப் பிடித்து அதிகாலையே ஊருக்கு வந்து விட்டான். பூஞ்சோலைக்குள் கார்



நுழைந்ததுமே அவன் கண்கள் முதலில் தேடியது அத்தை வீட்டைத்தான். அத்தை வீட்டில் முன்பு காரை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கியவன் அப்படியே நின்று விட்டான். எதிரே தெரிந்த காட்சி அவனைச் சிலையாக நிற்கச் செய்துவிட்டது. வீட்டிற்குள் வினயா ஊஞ்சலில் அமர்ந்து ஆடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டே அங்கேயே சிறிது நேரம் நின்றவனின் பார்வை அவளை அளவெடுத்தது.

ஆறு வருடங்களில் வினயாவின் தோற்றம் மிகவும் மாறியிருந்தது. குழந்தைத்தனமான வினயாவின் தோற்றம் மாறி செம்பவளம்பாவையாக, எழிலான மங்கையாக உருமாறியிருந்தாள் வினயா. அவளின் இந்த தோற்றத்தில் தன் மனம் தடுமாறுவதையும் அவள் மேல் தனக்கிருந்த காதல் கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதையும் ஆனந்தத்துடன் உணர்ந்தவனின் கால்கள் தன்னையறியாமல் அவளை நோக்கி நகரத் தொடங்கியது. சத்தமில்லாமல் அவள் பின்னே வந்து நின்றவனின் காதுகளில் அவள் கண்ணனை மையமாக வைத்துப் பாடிய பாடல் கேட்டவுடன் அப்படியே இன்பத்துடன் நின்று விட்டான்.

அவன் குரல் கேட்டு திரும்பிய வினயாவின் கண்களில் தோன்றியது அவள் மேல் அவள் கொண்டிருந்த அளவில்லாத காதல் தான் என்பதை நன்றாக உணர்ந்த பின் தான் அவன் தன் காதலை வெளிப்படுத்தும் விதமாகக் கைகளை வினயாவை நோக்கி நீட்டினான். ஆவலுடன் தன் கைகளில் அவள் அடைக்கலமாவாள் என்று ஆசையுடன் எதிர்பார்த்த வேலையில் தான் பாரிஜாதம் கூப்பிட்டு விட்டாள். வேறுவழி இல்லாமல்

அவளை நோக்கிச் சென்றவனின் மனம் மட்டும் வினயாவையே சுற்றியே இருந்தது. அவள் உள்ளே வர மாட்டாளா என்ற ஏக்கத்துடன் வாசலைப் பார்த்தபடியே அத்தை மாமாவுடன் பேசிக் கொண்டிருந்தவனின் பார்வை அவளைக் கண்டவுடன் அவளை விட்டு அகல மறுத்தது. அவளின் ஒவ்வொரு அசைவும் பெண்மையின் மென்மையை அவனுக்கு உணர்த்தியது.

தன் வினயா இவ்வளவு அழகா என்று அவன் மனம் ஆச்சிரியப்பட்டது. அவள் அருகாமையை தன் மனம் ஏக்கத்துடன் விரும்பியதைத் தவிப்புடன் உணர்ந்தான். வினயாவின் கண்களில் தெரிவது மட்டற்ற காதல்தான் என்று மனமார உணர்ந்து வானத்தில் மிதந்தாள். ஆனால் பாரிஜாதம் அழைத்தும் அவள் அருகில் வராதது கண்டவுடன் அவனது அனைத்து உணர்வுகளும் ஏமாற்றத்துடன் சுருங்குவதை வேதனையுடன் உணர்ந்தவனின் மனம் மறுபடியும் குழம்பத் துவங்கியது. அதற்குமேல் அங்கே இருக்கப் பிடிக்காமல் கண்ணனும் திரும்பி விட்டான். தன்னுடைய காதலி தன்னை மட்டுமே விரும்புவதைத் தெரிந்து கொள்ளத் துடித்த அவனது ஆண்மனம் துடித்தது. எதற்கும் கலங்காத இரும்பு உள்ளம் கொண்ட கண்ணன் வினயாவின் மேல் தனக்கிருந்த அளவில்லாத காதலை வெளிப்படுத்தும் வகையறியாமல் திகைத்து நின்றான்.

## 18

அந்தப் பெரிய ஹாலின் மையத்தில் போடப்பட்டிருந்த வெல்வெட் சோபாவில் அமர்ந்திருந்த சிவராமன்



வாசலில் கார் வந்து நிற்கும் ஓசையைக் கேட்டதும் திரும்பிப் பார்த்தார்.

''யாருங்க அது?'' கணவரிடம் காபிக் கோப்பையைக் கொடுத்தவாறு கேட்ட பார்வதி நிமிர்ந்து பார்த்தாள்.

''ஏய், நம்ம கண்ணன் வந்துட்டாண்டி.''

''அட ஆமா, கண்ணா என்னய்யா இது? ஒரு போன் கூடப் பண்ணாமல் வந்து நிக்கிறே?''

''ஏம்மா போன் பண்ணினால் தான் உள்ளே விடுவியா?''

''இது என்னடா அர்த்தமில்லாத கேள்வி. இந்த ஆறு வருஷமா உன்னைப் பார்க்கத்தான இந்தக் கண்ணு தவமிருக்கு.''

''தவத்துக்கான பலனை தரவே வந்தேன் தாயே! என்ன வரம் வேண்டுமோ கேள் தருகிறேன்'' என்றபடி ஒரு கையை உயர்த்தி அபிநயம் பிடித்த மகனின் தோள் தட்டிச் சிரித்தாள் பார்வதி.

''ஏண்டா படவா. அப்பன் நான் ஒருத்தன் குத்துக் கல்லாட்டம் இங்க உட்கார்ந்திருக்கிறது உனக்குத் தெரியலையா?''

''என்னய்யா நீங்க? இந்த அம்மா உங்களிடம் என்னை பேசவிட்டால் தானே? அவங்களுக்கு நம்மைப் பார்த்துப் பொறாமைப்பா! அதான்...'' என்றபடியே குனிந்து தன் கால்களை தொட்டு வணங்கிய மகனைத் தன்னோடு இறுக்கிக் கட்டிக் கொண்டார் சிவராமன்.

''இப்பத்தாண்டா இந்த வீட்டுக்கே உசிர் வந்திருக்கு. இனிமே நீ திரும்பி பாரீன் போகமாட்டாயே'' என்றாள் பார்வதி.

''அம்மா தாயே. காலம் பூராவும் படிச்சுக்கிட்டே இருக்கிற அளவுக்கு உன் மகன் புத்திசாலி இல்லம்மா ஏதோ இதைப் படிக்கவே தலையாய தண்ணி குடிக்க வேண்டியதாய் போச்சு.''

''போடா போக்கிரி. நீ புத்திசாலி இல்லைன்னா இந்த உலகத்துல வேற யாரு புத்திசாலி.''

''அப்படியாம்மா சேதி. அப்ப இன்னும் ஒரு மாசத்தில நான் மறுபடியும் பாரின் போயி படிக்கவா. அப்ப உனக்கு நிம்மதியாயிருக்குமா?''

''இது என்னடா பேச்சு. பாரின் போயித்தான் [illegible] புத்திசாலின்னு நிருபிக்கணுமா? உன் அப்பா இத்தனை தொழிலை தனியாக் கவனிக்கக் கஷ்டப்பட்டுக்கிட் டிருக்காரு. அதையெல்லாம் இனிமே நீ பார்த்துக்க. அது போதும்.''

''ஏண்டி! இப்பத்தான் அவனே வீட்டுக்குள் நுழைந்து இருக்கான். அதுக்குள்ள நீ ஆரம்பிச்சுட்டே.''

''நான் அப்பவே சொல்லலை. இந்தத் தாய்குலத் துக்கே பொறாமை அதிகம்ப்பா. நம்மை நிம்மதியாகவே இருக்க விடாது.''

''ஆமாண்டா நாங்க பொறாமை பிடிச்சவங்க தான் நீங்க ஒண்ணும் எங்களைத் தேடவேண்டாம்.

''இப்படிச் சொன்னா எப்படிம்மா. இதெல்லாம் சும்மா உட்டாலங்கடிம்மா. நீ என் செல்ல அம்மாயில்ல. நீயே கோபித்துக் கொண்டால் நான் என்னம்மா செய்ய?'' என்றபடி தாயின் தாவாங்கட்டையைப் பிடித்து கெஞ்சிய மகனைப் பார்க்க சிரிப்பு வந்தது பார்வதிக்கு



''ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரிக் கொஞ்சுறான் பாரு போடா போ!'' என்றவாறு அவனை அணைத்து நெற்றியில் முத்தமிட்டவளின் மனது சந்தோசத்தில் பூரித்தது.

''யாருடா அது என் மருமகளைக் கொஞ்சுறது?'' என்றபடி உள் அறையிலிருந்து கேட்டுக் கொண்டே வெளியே வந்த அலமேலம்மாளைப் பின்னாலிருந்து கண்களைப் பொத்திய கண்ணன்,

''யாருன்னு சொல்லுங்க பார்ப்போம்?'' என்றான்.

''இந்த உலகத்திலேயே என் மகனுக்கு அடுத்து என் மருமகளைக் கொஞ்சுற தைரியம் என் பேரன் உன் ஒருத்தனுக்குத் தான் இருக்கு.''

''இதுதான் என் புத்திசாலி பாட்டி. எப்படிக் கண்டு பிடிச்சாங்க பார்த்திங்களா தாத்தா.''

''ஆமா, உன் பாட்டியின் புத்திசாலித் தனத்தைப் பத்தி எனக்குத் தான தெரியும்.''

''போதும். போதும். என் புத்திசாலித்தனத்தைப் பற்றி குறை சொல்ற அளவுக்கு நீங்க புத்திசாலியாக்கும். கொஞ்சம் விட்டால் ஒரேயடியால்ல ஏளனம் பேசுவீங்க? போயி சோபால உட்காருங்க'' என்று கண்களால் சாடைக் காட்டிய அலமேலம்மாளுக்கு கட்டுப்பட்டவரைப் போல அமைதியாய் போய் சோபாவில் அமர்ந்தார் திருப்பதி.

இந்த வயதிலும் மனைவியின் பேச்சுக்குக் கட்டுப் படும் மாமனாரைக் கண்களால் கணவரிடம் சுட்டிக் காட்டிய பார்வதிக்குப் பதில் பார்வையைச் சளைக்காமல் கொடுத்தார் சிவராமன்.

"ஏன் ராசா இவ்வளவு லேட்டாயிருச்சு? கருக்கலிலேயே வந்துருவேன்னு சொன்னியே?" என்று பேரனைக் கேட்டுக் கொண்டே சோபாவில் கணவருக்கு அருகில் அமர்ந்த அலமேலம்மாளின் தோளைக் கட்டிக் கொண்டான் கண்ணன்.

"இவன் இன்னிக்கு வர்றான்னு உங்களுக்கு முன்னமே தெரியுமாம்மா? ஏண்டி பாட்டிக்கு மட்டும் வர்றேன்னு சொன்னியாக்கும்."

"சும்மா நிப்பாட்டுடா. பிள்ளை வர்ரான்னு சொன்னானே. எப்ப வர்றான்னு இவன் செல்போனுக்கு போன் போட்டுக் கேட்போம்ன்னு உனக்காத் தோணனும். அதை விட்டுட்டு என் பேரனை அரட்ட வந்துட்டான்."

"நல்லா கேளுங்க பாட்டி. என் பாட்டி எனக்குப் போன் பண்ணினாங்க. நான் சொன்னேன். நீங்க கேக்கலை நான் சொல்லலை."

"நல்ல பிள்ளை போ நீ. இரு காபி போட்டு எடுத்திட்டு வர்றேன். பேச்சு ஞாபகத்துல இதுகூட மறந்துட்டு நிக்கிறேன் பாரு" என்றபடி நகர்ந்த பார்வதியை தடுத்தது கண்ணனின் குரல்.

"இல்லம்மா. நான் அத்தை வீட்டில் காபி குடிச்சுட்டுத் தான் வந்தேன்."

"அதானே நினைச்சேன். என் பேரன் எப்படி அத்தை வீட்டுக்குப் போய் எல்லோரையும் பார்க்காமல் இங்கே வருவான்னு" அந்த எல்லோரையும் என்ற வார்த்தையை அழுத்திச் சொன்ன அலமேலம்மாளின் பார்வை பார்வதியை அர்த்தத்துடன் பார்த்தது. அந்த பார்வை



சொல்லிய அர்த்தத்தைப் புரிந்து கொண்ட பார்வதி மகிழ்ச்சியுடன் மாமியாரைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"ஆமாம் பாட்டி. நான் நேரே அத்தை வீட்டுக்கு போய் அங்க எல்லோரையும் பார்த்துட்டுத்தான் இங்க வர்றேன்."

"காலை டிபனாவது உனக்குப் பிடிச்ச மாதிரி சமையல்காரம்மாவைச் செய்யச் சொல்லிட்டு வர்றேன்டா."

"இல்லம்மா. மாமா காலை டிபனுக்கு நம்ம எல்லோரையும் அங்க வரச் சொல்லிட்டாங்க. ஸோ, நம் எல்லோருக்கும் பிரேக்பாஸ்ட் அங்கதான் இன்னைக்கு."

"சரிடா, நீ போய்க் குளிச்சிட்டுக் கொஞ்சம் ரெஸ்ட் எடு. நான் உன் லக்கேஜையெல்லாம் உன் ரூமில் கொண்டு வந்து வைக்க சொல்றேன்."

"ஓகேம்மா. ரூமெல்லாம் கிளினாகத்தான் இருக்கு."

"உன் ரூம் ஒரு வாரமா உனக்காகத் தான் ரெடியா காத்திருக்கு கண்ணா. போ, போய் நிம்மதியாய் ரெஸ்ட் எடு."

"ரைட் பாட்டி. நான் பிரஷ்ஷாயிட்டு ஒன் அவர்ல வந்துருறேன் சரியா?" என்றவாறு எழுந்து மாடியேறினான் கண்ணன்.

ரூமிற்குள் நுழைந்து கதவடைத்து ஏஸியை ஆன் பண்ணிவிட்டு படுக்கையில் சரிந்த கண்ணனின் மனதில் வினயாவின் உருவம் மறுபடியும் வலம் வரத் துவங்கியது.

அவள் மெதுவாக நடந்து வந்து டைனிங் டேபிளில் சாய்ந்து நின்று அவனைப் பார்த்தது. அவன் கை அவள்

தலைமுடியை கோதியது. கால் விரல் நகங்களால தரையில் கோலமிட்டபடி தலையை குனிந்தது. ஓரக் கண்ணால் அவன் பார்வையை உணர்ந்து கன்னங்கள் சிவந்தது. கைகள் நடுங்க அவனைப் பார்த்தபடி தண்ணீர் குடித்தது. அந்த தண்ணீரும் துளித்துளியாய் அவள் சிவந்த இதழ்களின் ஓரம் வழிந்தது. அவள் அவசரமாக நாணத்துடன் அதைத் துடைத்தது என்று வினயாவின் ஒவ்வொரு செயலும் கேமராவின் ஒவ்வொரு பிரேம் போல அடுத்தடுத்து அவன் மனக்கண்ணில் வலம் வரத் துவங்கியது. கண்ணன் சொல்லவொண்ணாத கிறக்கத்துடன் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். இதற்குமேல் தன்னால் தாங்க முடியாது என்று எண்ணிக் கொண்டவனின் மனம் இன்றே தன் காதலை அவளுக்கு உணர்த்தி விட துடித்தது.

## 19

"கண்ணா, கண்ணா... என்னப்பா தூங்கிட்டியா கண்ணா, கண்ணா" கதவைத் தட்டியபடி பார்வதி மெதுவாகக் குரல் கொடுத்தாள்.

தாயின் குரலைக் கேட்டுத் தடுமாறியபடி எழுந்த கண்ணனின் கண்கள் வால்கிளாக்கில் நேரத்தைப் பார்த்து திகைத்தது.

"ஐய்யோ இவ்வளவு நேரமாகவா கனவு கண்டுக்கிட்டிருந்தோம்."

வேகமாக கதவைத் திறந்த கண்ணனின் கசங்கிய கோலத்தைப் பார்த்த பார்வதியின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.



"என்ன கண்ணா? டிரஸ் மாத்தாமல் நீ என்னிக்கும் படுக்க மாட்டியே. இன்னிக்கு என்ன அப்படியே படுத்து தூங்கியிருக்க. உம்புக்கு எதுவும் முடியலையா."

"இல்லைம்மா. கொஞ்சம் டயர்டா இருந்துச்சு. அதான் அப்படியே படுத்துட்டேன்."

"நாம வேணும்னா இன்னொரு நாள் அத்தை வீட்டில் போய்ச் சாப்பிட்டுக்கலாம். நீ படுத்து நல்லா ரெஸ்ட் எடு."

"இல்லம்மா ஐ ஆம் ஆல்ரைட். ஜஸ்ட் ஃபைவ் மினிட் குளிச்சிட்டு வந்துடுறேன்."

"அதனால என்னப்பா, மெதுவாகவே குளிச்சிட்டு வா. ஒண்ணும் அவசரமில்லை" என்றபடித் திரும்பினாள் பார்வதி.

வேகமாகக் குளியலறைக்குள் நுழைந்த கண்ணனின் மனம், 'அவசரம் உனக்கில்லைம்மா. எனக்குத்தான் வினயா காலேஜ் போறதுக்குள்ள அங்க போகணுமில்ல' என்று கூவிக் கொண்டது.

வேகமாகக் குளித்து முடித்து உடைமாற்றிக் கொண்ட கண்ணன் பெர்ப்யூம்மை கையில் எடுத்து கொண்டே கண்ணாடியில் தெரிந்த தனது பிம்பத்தைப் பார்த்துக் கொண்டான். கிரீம் கலர் டீஷர்ட்டும், பிளாக் கலர் ஜீன்சும் தன் அழகிற்க்கு மேலும் அழகு ஊட்டுவதைப் பார்த்து திருப்தியுடன் புன்னகைத்துக் கொண்டாள்.

காதல் என்ற ஒரு உணர்வு தான் மனிதனை எவ்வளவு சிறுபிள்ளைத் தனமாக ஆக்கிவிடுகிறது. எவ்வளவோ புத்திசாலியான கண்ணன், எந்த பிரச்னைக்கும்

நொடியில் தீர்வு கண்டு விடும கண்ணன் யாரையும் புத்திசாலித்தனத்துடன், துணிச்சலுடன் எதிர்கொள்ளும் கண்ணன் அந்த ஊரில் உள்ள பெண்கள் மட்டுமில்லாது பாரினிலும் கூடப் படித்த பெண்கள் அனைவரும் ஹீரோவாகப் பார்க்கும் கண்ணன் ஒரு பெண்ணிடம் தன் காதலை வெளிப்படுத்தத் தயங்கி நிற்பது அவனுக்கே வேடிக்கையாக இருந்தது. இத்தனைக்கும் அவன் காதலிப்பது அவனது சொந்த அத்தை மகளை. சிறு வயதில் இருந்து தான் தூக்கி வளர்த்த தன் சொந்த முறைப் பெண்ணான வினயாவை.

''கண்ணா ரெடியாயிட்டயா? போகலாமாப்பா. அப்பாவுக்கு பேக்டரிக்குப் போக நேரமாயிருச்சுப்பா.''

''இதோ வந்துட்டேன்மா'' என்றபடியே படியிறங்கி வந்த மகனைப் பார்த்த பார்வதிக்கும் சிவராமனுக்கும் பெருமையில் உள்ளம் பூரித்தது.

தன் மகன் ஒரு முழுமையான ஆண்மகனாக பார்ப்பவர் மயங்கும் பேரழகனாக வளர்ந்த நிற்பதைப் பார்த்த பார்வதி தன் கண் பட்டுவிடக்கூடாதே என்று அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''போகலாமாப்பா?''

''போகலாம் ராஜா... வா'' என்றபடியே மகனின் தோளில் கைகளைப் போட்டுக் கொண்டு பேசியபடியே தங்கையின் வீட்டிற்குள் நுழைந்தார் சிவராமன்.

''வாங்கண்ணா, வாங்கண்ணி, வாய்யா கண்ணா'' என்று வாசலிலேயே காத்திருந்த பாரிஜாதம் ஓடிவந்து அண்ணியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.



அண்ணனின் அருகில் போகாமல் ஓடிவந்து தன் கைகளைப் பற்றிக் கொண்ட பாரிஜாதத்தைப் பார்க் கையில் பார்வதியின் உள்ளம் தாய்மையில் பூரிப் படைந்தது. அவள் ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்து பாரிஜாதத்தின் இடையை அணைத்துக் கொண்டாள்.

''நல்லா இருக்கியா பாரிஜாதம். எதிர்த்தாப்புல இருந்தும் தினமும் உன்னை வந்து பார்க்க முடியாமல் வேலை சரியா இருக்கு. தப்பா நினைக்காதே.''

''என்னண்ணி இது. உங்களைப் போயி நான் என் னைக்குத் தப்பா நினைச்சிருக்கேன். அதான் அண்ணன் டெய்லி வந்து என்னைப் பார்த்துக்கிறாங்களே.''

''உன் அண்ணனுக்கு உன்னைப் பார்க்க வரலைன்னா பொழுதே புலராதே.''

''ஆண்டவன் புண்ணியத்தில் இந்த பாசம் என்னைக் கும் குறையாமல் உறவு நீடிக்கணும். அண்ணி தெய்வத் திடம் நான் தினமும் வேண்டும் வேண்டுதல் இது தான்.''

''கவலைப்படாதே பாரிஜாதம். நம் உறவு என்னைக் கும் நீடிச்சு நிலைச்சு இருக்கும். அதுக்கான காலம் வந்துடுச்சு'' என்று கூறிய அண்ணியை அணைத்துக் கொண்டாள் பாரிஜாதம்.

''நானும் அந்த நினைப்புலதான் உயிர் வாழறேன் அண்ணி. உள்ள வாங்க'' என்றபடி பார்வதியின் கைகளை பிடித்தபடி வீட்டிற்குள் நுழைந்தாள்.

''வாங்க மாப்பிள்ளை'' ஹாலில் சோபாவில் அமர்ந் திருந்த ஹரிசந்தர் இரண்டு கைகளையும் நீட்டியபடி வரவேற்றார்.

"ஆமாம் மாமா" என்றான் கண்ணன். "நீங்க மருமகன்ப்பா. என் அப்பா தான் என்னிக்கும் எனக்கு மாப்பிள்ளை" ஹரிசந்தரின் விரித்த கைகளை உரிமையுடன் பிடித்துக் கொண்டார் சிவராமன்.

இதை பார்த்து சிரித்தபடியே மாமாவின் அருகில் சோபாவில் அமர்ந்த கண்ணனின் கண்கள் வினயாவை தேடியது. டைனிங் டேபிளில் இருந்த உணவுப் பாத்திரங்களை சரியாக அடுக்கும் பாவனையில் நின்று கொண்டிருந்த வினயாவும் அப்பொழுது அவனைத் தான் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த கண்ணன் யாரும் அறியாத வண்ணம் ஒரு புருவத்தை மட்டும் உயர்த்தி "என்ன?" என்ற பாவனையில் அசைத்தான். அவனின் இந்த செய்கையால் குபீரெனக் கன்னங்கள் சிவக்க வெட்கத்துடன் தலையை வேகமாகக் குனிந்து கொண்ட வினயா கீழ்க்கண்ணால் "ஒன்றுமில்லை" என்று அவனைப் போலவே பாவனையில் பதிலளித்தாள்.

சிறியவர்களின் இந்தப் பார்வை பரிமாற்றத்தைப் பாராததுப் போலப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த பெரியவர்களின் ஆனந்தத்தைக் கலைப்பது போல காற்றில் கிரீச்சிட்டது ஒரு குரல். அனைவரும் அதிர்ந்து திரும்பிய போது அங்கே ரூபன் நின்று கொண்டிருந்தான்.

"கண்ணான்னா! எப்ப வந்தே? எனக்கு ஒரு போன் பண்ணிக்கூட வந்திருக்கேன்னு சொல்லலை" என்றபடி வந்து கண்ணனின் அருகில் அமர்ந்தவனின் பார்வை



வினயாவை நோட்டமிட்டது. அவளின் சிவந்த கன்னங்களும் கண்ணனை அவள் பார்த்த பார்வையையும் கண்ட ரூபனின் முகம் கறுத்தது. யாரும் அறியாத வண்ணம் சட்டென முகத்தை மாற்றிக் கொண்ட ரூபன் கண்ணனைப் பார்த்துப் பாசத்துடன் சிரித்தான்.

# 20

"சரிங்கண்ணி வாங்க எல்லோரும் சாப்பிடலாம்" என்று அழைத்த பாரிஜாதம்,

"செவ்வந்தி எல்லாத்தையும் டைனிங்டேபிளில் கொண்டு வந்து வை" என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள்.

வேகமாக ஓடிவந்த செவ்வந்தி "நம்ம வினயா அம்மாவே எல்லாத்தையும் எடுத்து கொண்டு வந்து வைச்சுட்டாங்கம்மா" என்றாள்.

"அடடே என் பொண்ணுக்கு எப்பல்லேருந்து இவ்வளவு பொறுப்பு வந்துச்சு. இன்னிக்கு மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டப்போகுது மாப்பிள்ளை."

"சும்மா இருங்க மாப்பிள்ளை. என் மருமக என்னைக்கும் பொறுப்பான புள்ளைதான். அது புண்ணியத்தில் மழை பெய்தால் நாட்டுக்கு நல்லது தானே."

"அதுவும் சரிதான் மாப்பிள்ளை. வாங்க வாங்க என் பொண்ணுக்கு கோபம் வர்றதுக்குள்ள போய்ச் சாப்பிடலாம்" என்று டைனிங் டேபிளுக்கு விரைந்த இரண்டு மாப்பிள்ளைகளையும் பார்த்துச் சிரித்தபடியே தொடர்ந்தனர் மற்றவர்கள்.

''வினயா எல்லோருக்கும் அந்த வெள்ளிப் பிளேட்டை எடுத்து வைம்மா'' என்றாள் பாரிஜாதம்.

''எதுக்கும்மா வெள்ளித் தட்டையெல்லாம் வெளியே எடுக்குற. நாம என்ன அந்நியமா அசலா.''

''எங்கண்ணனுக்கு தங்கத் தட்டுலயே சாப்பாடு போடணும்கிறதுதான் என் ஆசை. அட்லீஸ்ட் வெள்ளித் தட்டிலாவது போடுற தகுதியை அந்த ஆண்டவன் எனக்குத் குடுத்துருக்கானே.''

''இப்ப என்னடி அதுக்கு. நாளைக்கு உன் மருமகனுக்கு தங்கத் தட்டுல சாப்பாடு போடு. யாரு அத வேணாம்னு சொன்னா?'' என்றபடி இடைமறித்தாள் அலமேலம்மாள்.

''அம்மா உன் வாக்கு பொன்னாகட்டும். நான் அதுக்குக் குடுத்து வைச்சிருக்கேனான்னு என் அண்ண னும் அண்ணியும் தான் சொல்லணும்.''

''என்னம்மா இப்படிச் சொல்லிட்டே. உன் விருப்பத் துக்கு என்னிக்கு இந்த அண்ணன் குறுக்கே நின்னிருக் கேன். உன் இஷ்டம் எப்படியோ அப்படியே நடக்கும்மா. இப்படிப் பெரிய வார்த்தையெல்லாம் பேசாதே'' என்ற படி கண்களைத் துடைத்துக் கொண்ட சிவராமனின் கரங்களை பாசத்துடன் பிடித்துக் கொண்டார் ஹரிசந்தர்.

''உங்களின் இந்த பாசத்துக்கு நான் என்னிக்கும் கட்டுப்படுவேன் மாப்பிள்ளை'' என்றார் உணர்ச்சியுடன்.

பெரியவர்களின் இந்த பேச்சின் முழு பரிமாணத் தையும் உணர்ந்து கொண்ட கண்ணனும் வினயாவும் ஒருவரையொருவர் புதுச் சொந்தத்துடன் பார்த்துக் கொண்டனர்.



''சரிசரி, சோத்தைப் போடுற எண்ணமிருக்கா? டயலாக் கெல்லாம் பேசி முடிச்சு ஒரேயடியா நைட்டே சாப்பிட் டுக்கலாமா?'' அத்தையைப் பார்த்து முறைத்தான் ரூபன்.

''போடா சேட்டை. சரியான சாப்பாட்டு ராமன்டா நீயி'' சிரித்தபடியே சாப்பாடை வைத்த பாரிஜாதத்தை நிமிர்ந்து பார்த்தான் ரூபன்.

''என்னத்தை இது ஒரு மருமகனை டா போட்டுக் கூப்பிடுறீங்க. நீங்கதான் எங்களுக்குத் தங்கத் தட்டில சாப்பாடு போடப் போறீங்களாக்கும்.''

''என்னப்பா ரூபா இப்படிச் சொல்ற. உன் அத்தை சொன்ன சொல்லைக் காப்பாத்துற பரம்பரையில பிறந்து, காப்பாத்துற பரம்பரையில வாக்கப்பட்டவய்யா. சொன்னதைச் செய்றேன்னா இல்லையான்னு நீ அப்பப் பாரு.''

''எப்ப என்ன நடக்குப்போகுதுன்னு நானும் பார்க்கத் தானே காத்திருக்கேன் அத்தை'' என்று பொதுவாகச் சொல்லிய ரூபன் மெதுவாகத் திரும்பி வினயாவைப் பார்த்தான். அவன் வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வினயாவின் முகம் வெளிறுவதைப் பார்த்தவன் திருப்தியுடன் சாப்பிடத் துவங்கினான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அலமேலம்மாள் மெதுவாக பேத்தியின் அருகில் நெருங்கி அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்,

''எங்கெங்கோ இடி விழுது. இவன் தலையில வந்து விழுக மாட்டேங்குது. நீ கவலைப்படாதே கண்ணு. இவன் நாற வாயெல்லாம் உன் வாழ்க்கையை ஒண்ணும் பண்ணாது. சந்தோஷமா இரு'' என்றாள்.

பாட்டியின் வார்த்தை கொடுத்த நம்பிக்கையில் பழைய சந்தோஷம் மீண்டது வினயாவிற்கு.

"கண்ணா... முதல்லி ஸ்வீட்டைப் போட்டுக்கப்பா. வினயா உனக்காக பால் கொழுக்கட்டையை தானே பண்ணியிருக்கா. சாப்பிட்டுப் பாரு."

"பரவாயில்லையே அத்தை. வினி சமைக்கவெல்லாம் ஆரம்பிச்சுட்டாளா?"

"அடப்போண்ணா. இவ சமையலைச் சாப்பிடு ரிஸ்க்கை எல்லாம் எடுக்காதே. வெரி டேன்சரஸ்" என்றான் ரூபன்.

"என்ன ரூபா இது. இப்படியெல்லாம் மனம் நோகப் பேச எப்ப கத்துக்கிட்ட. வினி எப்படி சமைத்தாலும் நாம அதை அமிர்தம் போல நினைக்க வேண்டாமா" ரூபனைக் கடிந்து கொண்ட கண்ணன் பார்த்த பார்வையில் பூவாக மலர்ந்தாள் வினயா. முன்னால் விழுந்த மின்னலைத் தூக்கிப் பின்னால் போட்டுக் கொண்டவள் ஓடிவந்து பால் கொழுக்கட்டையைக் கரண்டியில் அள்ளிக் கண்ணனின் தட்டில் வைத்தாள்.

"என்னமோ போண்ணா. நீ சொல்றதால இனி நானும் அப்படியே நினைச்சுக்கிறேன்" என்று அதிலும் ஒரு இக்கன்னாவுடன் பேச்சை முடித்தான் ரூபன்.

தட்டில் இருந்த பால் கொழுக்கட்டையை ருசித்துக் கொண்டிருந்த கண்ணன் ரூபனின் பேச்சை சட்டையே பண்ணவில்லை. தனக்காக வினயா சமைத்தாள் என்ற ஒரு சொல்லிலேயே கொழுக்கட்டையின் சுவை கூடி விட்டதை போல உணர்ந்தவன் ஒரு நொடியில தட்டில் இருந்ததைக் காலி பண்ணிவிட்டு,



"இன்னும் கொஞ்சம் வை வினி..." என்ற வினயாவை அழைத்தான் அவன்.

இதுதான் சாக்கென்று ஓடிவந்து அவனருகில் நின்று கொண்டவளின் மேலிருந்து எழுந்த சுகந்தமான நறுமணம் கண்ணனின் மனதைக் கிறங்கடித்தது. ஆழமாக மூச்சை இழுத்து அந்த வாசனையை மனம் எல்லாம் நிறைத்துக் கொண்டான் கண்ணன்.

கண்ணனின் மனமறிந்து வேண்டியதை அருகிலேயே நின்று பரிமாறினாள் வினயா. ஒவ்வொரு பாத்திரத்தையும் குனிந்து அவள் எடுக்கையில் அவன் கைகளுடன் உரசிய வினயாவின் கரங்களின் குளிர்ச்சி கண்ணனை என்னவோ செய்தது.

"ஏன் இப்படி மேலே வந்து விழற வினயா? கொஞ்சம் தள்ளித்தான் நில்லேன்" என்று ஏறக்குறைய கத்துவது போல அலறினான் ரூபன்.

"ஏண்டா இப்படி இருக்கிற. வரவர உன் அலுச்சாட்டியம் அளவில்லாமல் போயிட்டிருக்கு. நீ இங்கே வா வினி" என்று வினயாவின் கைகளை பற்றி இன்னும் அருகே இழுத்துக் கொண்ட கண்ணனின் மனம் மயக்கத்தில் ஆழ்ந்தது. இப்படியே அவள் அருகிலேயே இருந்து விட மாட்டோமா என்று அவன் உள்ளம் துடித்தது.

## 21

"என்னடா வினி! இன்னைக்குக் காலேஜ் போகலியா? லேட்டாகலே?" கைகளைத் கழுவிக்கொண்டே மகளைப் பார்த்துக் கேட்டார் ஹரிசந்தர்.

"போகணும்பா இதோ சாப்பிட்டதும் கிளம்பிவிடு வேன்."

"சீக்கிரம்மா. எனக்கும் மாமாவுக்கும் டவுனில கொஞ்சம் வேலையிருக்கு. நாங்க சீக்கிரம் போகணும். நீயும் அதுக்குள்ள கிளம்பினாத்தானே உன்னைக் காலேஜில் விட்டு விட்டு நாங்க போகமுடியும்."

"இதோப்பா... ஒன்மினிட்ல ரெடியாகிறேன்."

"என்னம்மா இது சாப்பிடாம எப்படி?"

"இருக்கட்டும்மா. டிபன் பாக்ஸ்ல வைச்சுக்குடுங்க பிரேக்ல சாப்பிட்டுக்கிறேன். அப்பாவுக்கு லேட்டாகு சுன்னு சொல்றாங்கள்ள. நீங்க எடுத்து வைங்க. நான் போய் டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்திடுறேன்" என்று வேகமாக தன் ரூமிற்குள் விரைந்தாள் வினயா.

"இன்னிக்கு வேணும்னா நான் வினியைக் கொண்டு போய்க் காலேஜ்ல டிராப் பண்ணிட்டு வரவா மாமா?" என்று கேட்ட கண்ணனைக் கேள்வியாகப் பார்த்தார் ஹரிசந்தர்.

"நீயே இப்பத்தான் ஊரிலிருந்து வந்துருக்கிறே. உனக்கும் ரெஸ்ட் வேண்டாமா? இருக்கட்டும்பா நானே டிராப் பண்ணிக்கிறேன்."

"இல்லை மாமா. ஒரு முக்கியமான பிரண்டைப் பார்க்க வெளியில் போக வேண்டியிருக்கு. நானே வினயாவை காலேஜ்ல விட்டுட்டுச் சாயந்திரம் வர்றப்ப கூட்டிட்டும் வந்துடுறேன். நீங்க உங்க வேலையை அவசரமில்லாம முடிச்சுட்டு வாங்க."



"அப்படி எந்தப் பிரண்டைப் பார்க்கப் போறப்பா."

"பாரினில் என்கூட அவன் தம்பி படிச்சான்ப்பா. அவன் அண்ணனுக்குக் கொடுக்கச் சொல்லி சில திங்க்ஸ் வாங்கிக் கொடுத்திருக்கான். அவங்க வீடு மதுரையில இருக்கு. அதான் நான் என் காரை எடுத்துட்டுப் போய் இந்தத் திங்க்சையெல்லலாம் அவன் கிட்டக் கொடுத்துட்டு வரணும். போயிட்டு வந்திர்றேன்பா."

"சரிப்பா. தாராளமாய்ப் போயிட்டு வா. எங்களுக்கும் ஒரு வீடு வாங்குற விஷயமாய் இன்னிக்கு பூரா அலைச்சல் இருக்கும். நீ வினயாவைப் பார்த்துக்கிட்டா நாங்க ஃபிரியா வேலையை முடிச்சுட்டு வருவோம். சரிங்க மாப்பிள்ளை கிளம்பலாமா."

"ம் சரி போகலாம். பாரிஜாதம் போயிட்டு வரேன்" என்றபடி கிளம்பினார் ஹரி சந்தர்.

"சரி அத்தை, வினியை ரெடியாகச் சொல்லுங்க. நான் ஒரு டென் மினிட்ஸ்ல காரை எடுத்துட்டு வர்றேன்" என்ற கண்ணன் ரூபனை அழைத்துக் கொண்டு வேகமாக அவன் வீட்டிற்குச் சென்றான்.

"அடடே கண்ணா. வாப்பா வா. சித்தப்பா வீட்டுக்கு வர்றதுக்கு உனக்கு இப்பதான் வழி தெரிஞ்சுதா? ஆயிரம்தான் ஒரே ரத்தம்னாலும் உங்க ஆளுங்களுக்கே அத்தைன்னா உசத்தி தான்" என்று வரவேற்ற சிற்றன்னையை கட்டிக் கொண்டான் கண்ணன்.

"என்ன சித்தி இப்படிச் சொல்லிட்டிங்க. நம்ம வீட் டுக்கு நான் வர்றதுக்கு எந்த நேரம்னு இருக்கா என்ன?"

"அந்த மட்டிலும் இதுவும் உன் வீடு. இங்க இருக்கிறவங்களும் உன் குடும்பம் தான்ற நினைப்பு உனக்கு இருக்கே? அது போதும்பா எங்களுக்கு. வா வந்து இப்படி உட்காரு. ஏய் ரூபாவதி இங்க யாரு வந்திருக்கான்னு பாரேன்" மைத்துனர் மகனை உபசரித்தபடியே உட்பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தாள் வேதவல்லி.

"அண்ணா" என்றவாறே புயல் போல் ஓடிவந்து மடியில் விழுந்தாள் ரூபாவதி.

"ஏய் சின்னக்குட்டி, என்னடா? எப்படியிருக்கே? படிப்பெல்லாம் முடிஞ்சுருச்சில்ல. பெரிய மனுசியா வளர்ந்துட்டே" என்று கேள்வி மேல் கேள்வியாக கேட்டவாறு மடியில் விழுந்த தங்கையின் தலையைப் பாசத்துடன் தடவிக் கொடுத்தான் கண்ணன்.

"போண்ணா. நீங்க ஒண்ணும் என்கிட்டப் பேச வேண்டாம். வந்ததும் என்னைப் பார்க்கணும்னு உங்களுக்குத் தோணலேல்ல. அந்த வினயா தான் எப்பவும் உங்களுக்கு உசத்தி" என்றவாறு தலைநிமிர்ந்த ரூபாவதியின் கண்கள் கலங்கியிருந்தன. ரூபாவதிக்கு வினயாவின் மேல் தான் சிறிதளவு பொறாமை உண்டு. ஆனால் கண்ணன் என்றால் அவளுக்கு உயிர். உடன்பிறந்த ரூபனிடம் கூட இல்லாத பாசம் கண்ணன் மேல் அவளுக்கு உண்டு.

"இல்லடா பாப்பா. டிராவல் பண்ணினது கொஞ்சம் டயர்டா இருந்தது. அதுதான் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு பிரேக்பாஸ்ட் முடிச்சிட்டு அப்படியே உன்னைப் பார்க்க வந்துட்டேன். இதுக்குப் போய்க்



கோச்சுக்கலாமா?" என்றவாறு தங்கையின் கைகளை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டான் கண்ணன்.

கண்ணனின் இந்தச் செய்கையைக் கண்ட ரூபாவதியின் உள்ளம் பாசத்தில் பூரித்தது. இந்தப் பாசம் தான் ரூபனைவிடக் கண்ணனை அவள் உயர்வாக எண்ணக் காரணம்.

"சரி சித்தி. நான் ஒரு பிரண்டைப் பார்க்கப் போகணும். கிளம்பட்டுமா?"

"என்னண்ணா நீ? இப்பதான் வந்த அதுக்குள்ளே கிளம்பறேன்ற. அதெல்லாம் முடியாது. நீ இன்னிக்குப் புல்லா இங்கதான் இருக்கனும்."

"இல்லடாம்மா. ஒரு முக்கியமான வேலை இருக்கு. நான் அதை முடிச்சுட்டு ஈவ்னிங் வந்துடுவேன். நாளைக்கு புல்லா உன் கூடவே இருக்கேன் சரியா?" என்று தங்கையை சமாதானப்படுத்தி விட்டு சித்தியிடம் தலையசைத்து விடைபெற்றான் கண்ணன்.

## 22

வெள்ளை நிற போர்டு கார் போர்டிகோவில் வேகமாக வந்து கிரீச்சிட்டு நின்றது.

"அத்தை வினி ரெடியா" காரிலிருந்து இறங்காமலே தலையை மட்டும் வெளியே நீட்டிக் கேட்டவாறு நிமிர்ந்த கண்ணனின் பார்வை விரிந்தது.

"நான் அப்பவே ரெடி அத்தான். நீங்க தான் லேட்" என்று சிரித்தவாறு துப்பட்டாவை விசிறி மேலே

போட்டுக் கொண்டு ஓடி வந்த வினயாவை வைத்த கண் வாங்காமல் பார்வையாலேயே பருகிக் கொண்டிருந்தான் கண்ணன்.

கருநீல நிறப்பட்டில், பிஸ்கட் வண்ணத்தில் எம்பிராய்டரி செய்த சுடிதாரும், பிஸ்கட் வண்ணப்பட்டில் பேண்ட்டும், அதே பிஸ்கட்டும் கருநீலமும் கலந்த டிசைனில் துப்பட்டாவும் அணிந்து நீண்ட கூந்தலை தலையின் மேல்பகுதியில கிளிப் குத்தி, கீழே நீண்ட பின்னலாக பின்னலிட்டு நுனியில் கருநீல பேண்டினால் கட்டி இருந்தாள் வினயா. தோள்களின் இருபுறமும் சரிந்த முல்லை மலர்ச்சரத்தைக் கைகளினால் பின்னால் தள்ளிவிட்டுக் கொண்டு நிமிர்ந்தவள் கண்ணனின் பார்வையைக் கண்டு வெட்கத்தினால் கன்னம் சிவந்தாள். தன் பார்வையால் வெட்கப்பட்டு சிவந்த அவள் கன்னத்தை இன்னும் ஆசையுடன் பார்வையிட்டான் கண்ணன்.

''என்னத்தான். கார்க் கதவைத் திறக்கும் உத்தேசம் இருக்கிறதா? இல்லையா'' வினயாவின் குரலில் கேலியும் வெட்கமும் கலந்து ஒலித்தது.

''உனக்கு கார்க் கதவைத் திறந்து விடுவதை விட எனக்கு வேற என்ன வேலை? இந்த ஜென்மம் முழுவதும் இதற்காகவே நான் வாழ்வேனே'' என்றபடி முன்னிருக்க கதவைத் திறந்து விட்டான் கண்ணன்.

வேகமாக உள்ளே அமர்ந்த வினயா கதவை ஓங்கிச் சாத்தினாள்.

''கண்ணாடியையும் ஏற்றிக்கொள். ஏசியை ஆன் பண்ணப் போகிறேன்.''



''எதுக்குத்தான் வேஸ்டா. அதான் காத்து குளிர்ச்சியாத்தான் இருக்கு.''

''சொல்வதைச் செய்'' என்றவாறு கண்களை மூடி மூச்சை ஆழ்ந்து உள்ளே இழுத்து சுவாசித்தான் கண்ணன். வினயாவின் மேலிருந்து எழுந்த சுகந்தமான மனம் அந்த கார் முழுவதும் பரவி அவன் உள்ளத்திலும் நிறைந்தது.

அவள் மேலிருந்து எழுந்த சுகந்தம் அவன் ஆண்மையைத் தட்டி எழுப்பியது. யாராலும் கிளர்ச்சியுறாத அவன் உள்ளம் அவளால் கிளர்ச்சியுற்றது. அவளை இறுக்கி அணைத்துக் கொள்ளத் துடித்த அவன் கைகளை மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக் பொண்டு அவளைத் திரும்பிப் பார்த்தான். பார்த்தவனின் இதழ்கள் ரகசியமாகக் கிறக்கத்துடன் புன்னகைத்தான்.

ஏனெனில் வினயாவும் அதேசமயத்தில அவன் மீதுள்ள கிளர்ச்சியினால் கண்களை லேசாக மூடி இதழ்களை சிறிது மடித்துக் கடித்தவாறு சீட்டில் சாய்ந்து அமர்ந்து சாலையை வெறித்துக் கொண்டு இருந்தாள். அவளின் ஒவ்வொரு அசைவும் அவன் மேல் அவள் கொண்டிருந்த காதலை அதிகரித்துக் கொண்டிருந்தது.

ஸ்டியரிங்கைப் பிடித்திருந்த அவனது ஒருகரம் மெதுவாக நீண்டு அவள் கரத்தைப் பற்றியது. அவன்கரம் பட்டதுமே நடுங்கிய அவள் கரங்களின் மென்மை அவளை என்னென்னவோ செய்தது.

''வினி...'' கண்ணனின் குரல் கிரக்கத்துடன் வெளி வந்தது.

"ம்..."

"வினி... உன்னைத்தான் கூப்பிட்டேன்."

"ம்..."

காரை மெதுவாகச் சாலையோரம் நிறுத்திய கண்ணனை நன்றாக திரும்பி அமர்ந்தான்.

விரிந்த அவனது இரு கரங்களும் அவளை அணைக்கத் துடித்தன. நாணிச் சிவந்த வினயா இருந்த இடத்தை விட்டு அசையாமல் அமர்ந்திருந்தாள். தாபத்துடன் அவளை இழுத்துத் தன்னோடு அணைத்துக் கொண்ட கண்ணனின் உடல் விம்மியது. இந்த நொடி தன் வாழ்நாளிலே மறக்க முடியாத ஒரு நொடி என்று அவன் எண்ணிக் கொண்டான். முதல் ஸ்பரிசம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் மறக்க முடியாத ஒரு பொக்கிஷமான உணர்வு. அதிலும் கண்ணன் வினயாவைத் தன் உயிராக எண்ணிக் கொண்டே இருந்தவன். அவளது காதலுக்காக இரவும் பகலும் தவியாய்த் தவித்துக் கொண்டே இருந்தவன். அந்த காதலி கனிந்து, காதலியைத் தன்னுள் இறுக்கி அணைத்துக் கொண்டிருந்த அவன் உள்ளம் அலைகடலாய்த் துடித்தது.

கண்ணனின் இதழ்கள் மெதுவாய்த் தன்மீது சாய்ந்து கொண்டிருந்த வினயாவின் தோள்களில் பதிந்தது. அந்த இதழ்கள் தந்த சிலிர்ப்பில் கூச்சத்துடன் கிறங்கிக் கண்ணனை மேலும் இறுக்கத் தழுவிக்கொண்டாள் வினயா. கண்ணன் கரங்கள் பரவிப் படர்ந்து அவளைத் தன்னுள் இறுக்கிக் கொண்டது. மெதுவாக அவள் தலையைத் தொட்டுத் திருப்பியவனின் தலை அவள்



இதழ்களை நோக்கி குனிந்து இதழோடு இதழ் பதித்தது. பொங்கிப் பெருகிய அலையினால் அடித்துச் செல்லப் பட்ட வினயா அவன் கழுத்தைக் கட்டி இழுத்தவாறு காரின் இருக்கையில் சரிந்தாள். அவள் மேல் வேகமாகப் பரவிப் படர்ந்த கண்ணன் அவள் கழுத்தினில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு கிறங்கிக் கிடந்தான். மெதுவாக தன்னுணர்வுக்குத் திரும்பிய இருவரும் விலகி அமர்ந்தனர்.

"இப்பொழுது புரியுதா? நான் கண்ணாடியை ஏன் ஏற்றச் சொன்னேன்னு?" கலைந்திருந்த வினயாவின் முடியைச் சரி செய்த கண்ணனின் குரல் கேலியுடன் ஒலித்தது.

"அப்ப எல்லாம் பிளான் பண்ணித்தான் செய்தீங்களா?"

"கண்ணாடியை ஏற்றியது மட்டும் தான் நான் பிளான் பண்ணியது தாயே... மற்றதெல்லாம் தானாக நடந்தது தான் என்னை நம்பு."

மற்றது எது என்று தெரிந்திருந்த வினயா நாணத்துடன் இதழ்களைக் கடித்துக் கொண்டாள்.

"அடிக்கடி இப்படி உதடுகளைக் கடித்தால் இந்தக் காரும் அடிக்கடி நின்று விடும் பரவாயில்லையா?"

கடித்திருந்த இதழ்களை விடுவித்த வினயா "உங்களைப் போய் நம்பி என்னை அனுப்பிய என் அம்மாவை சொல்லனும்" என்றாள்.

"என் அத்தை புல் பர்மிஷனோடுதான் உன்னை என்னோடு அனுப்பினாங்க தெரியுமா?"

''பொய்க்கோலி அத்தான். இங்கு நடந்தது தெரிந்தால் அம்மா உங்களைச் கொன்னுடுவாங்க தெரியுமா.''

இங்கே என்னம்மா நடந்தது. எனக்கொன்னும் தெரியாதே. என்ன நடந்ததுன்னு உனக்கு ஏதாச்சும் தெரியுமா வினி...?'' கேலியுடன் தலை சாய்ந்து வினவிய கண்ணன் மெதுவாக தலைசாய்ந்து வினயாவின் கன்னத்தில் முத்தமிட்டான்.

''ஐயோ அத்தான். ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க. எதன் மேலாச்சும் மோதிடப் போறீங்க.''

''வேணும்னா காரை ஓரமாய் நிறுத்தட்டுமா. கொஞ்சம் பேசிட்டு அப்புறம் ரோட்டைப் பார்த்து ஓட்டறேன்.''

''நீங்க ரொம்பக் கெட்டுப் போயிட்டீங்க அத்தான். முன்னெல்லாம் எப்படி நல்ல பிள்ளையா இருந்தீங்க.''

''முன்னெல்லாம் நான் உனக்கு வெறும் அத்தான் தான். ஆனா இப்ப நீ எனக்கு பாதி பொண்டாட்டி. வீட்டில் பெரியவங்க பேசினதைக் கேட்டல்ல.''

''ம்... முழுப் பொண்டாடடி ஆனதுக்கு அப்புறம் தான் என்னைத் தொடணும் தெரியுமா? அதுக்கு முன்னாடி இப்படித் திருட்டு தனமெல்லாம் வேணாம்.''

''போடி போ. இப்பத்தான் இந்தத் திருட்டுத்தனமெல்லாம் முழு பொண்டாட்டி ஆனதுக்கு அப்புறம் பாரு அந்தக் கதையே வேற. இதெல்லாம் அதுக்கு முன்னாடி தூசு'' என்ற கண்ணன் வினயாவின் கன்னம் தட்டிச் சத்தமாகச் சிரித்தான்.

''காலேஜ் வந்துருச்சு அத்தான். சிரிப்பை நிப்பாட்டிக் குங்க'' என்றவாறு கார் கதவை திறந்தவளைப் பார்த் தான் கண்ணன்.



''வினி...''

''என்னத்தான்'' கதவை திறந்து வைத்தபடி குனிந்து பார்த்தாள் வினயா.

''தேங்க்ஸ்... எதுக்குன்னு கேக்காத. எல்லாத்துக்கும்.''

''பிரண்ட்ஸெல்லாம் பார்க்கறாங்க அத்தான். அப்புறம் கேலி பண்ணுவாங்க. நீங்க கிளம்புங்க பை.''

''வினி...''

''என்னத்தான்.''

''ஐ லவ் யூ டி'' கூறியவன் கார்க் கதவை அறைந்து சாத்திவிட்டு வேகமாகக் காரைக் கிளப்பிக் கொண்டு போய் விட்டான்.

கார் போன திசையையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த வினயாவிற்கு மாலை உடனே வந்து விடாதா என்றிருந்தது. மெதுவாகத் திரும்பி அவளை நோக்கிக் கையசைத்த தோழிகளை நோக்கி போனாள்.

மாலையில் வினயாவைக் கூப்பிட வந்த கண்ணனின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படிந்திருந்தன. அவன் புருவங்கள் இரண்டும் முடிச்சிட்டு இருந்தன. கண்ணனின் முகம் நிமிர்ந்து பார்த்த வினயாவின் விழிகளில் கேள்வி தோன்றியது.

''என்னத்தான். ஏன் இப்படி மூடு அவுட் ஆனது போல இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லை. நீ முதலில் காரில் உட்கார்.''

''நான் காரில் ஏறாமல் பின்ன வீட்டிற்கு நடந்தா போவேன்?'' சலுகையாக கேட்டவாறு காரில் அமர்ந்த

வினயாவின் உள்ளம் சுருங்கியது. காலையில் அவன் காண்பித்த நெருக்கம் அவள் நெஞ்சை விட்டு அகலாத ஓவியமாய் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. பகல் முழுவதும் பேசாமல், மதிய உணவைக் கூட உண்ணப் பிடிக்காமல் எப்பொழுது மாலை வரும். கண்ணன் முகத்தையும் அவன் குரலையும் கேட்போம் என்று ஆசையுடன் காத்துக் கொண்டிருந்தாள். வந்த கண்ணனோ ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசாமல் காரை ஓட்டுவதிலேயே கவனமாக இருந்தான்.

## 23

"இந்தா வினி. இதைப்பிடி" கண்களில் நிறைந்த நீரைக் கண்ணன் அறியாமல் மறைத்தபடி சாலையை வெறித்துக் கொண்டிருந்த வினயாவிடம் ஒரு கையால் காரை ஓட்டியபடி மறுகரத்தினால் காரின் முன்பக்கம் இருந்த சிறிய பெட்டியை எடுத்து நீட்டினான் கண்ணன்.

"என்னத்தான் இது...?" என்றபடி பெட்டியைத் திறந்தவளின் விழிகள் வியப்பில் விரிந்தது.

"பீட்சாவா அத்தான். அதுவும் பட்டர் பிளேவரில் இது எனக்குப் பிடிக்கும்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும்னு என்னைவிட வேறு யாருக்குத் தெரியும்?"

"அது உண்மைதான் அத்தான். என்னைப் பற்றி என்னை விட உங்களுக்குத் தான் அதிகம் தெரியும்."



"அதோட என் கணிப்பு சரின்னா நீ மதியம் லஞ்ச் சாப்பிட்டிருக்க மாட்டே சரியா?"

"அதென்னவோ தெரியலைத்தான். இன்னிக்கு எனக்கு சாப்பிடவே புடிக்கலே. ஆனா இப்போ சரி பசி" என்றவாறு பிட்சாவின் ஒரு பீஸை விரல்களால் பிடித்து எடுத்துக் கடித்தவளின் இதழ்களில் ஓரமாய் பட்டர் வழிந்தது.

வேகமாகக் காரை நிறுத்தியவன் தன் பேண்ட்லிருந்து கைக்குட்டையை எடுத்து அவள் தலை திருப்பித் துடைத்துவிட்டான்.

"என்ன பொண்ணு நீ. ஆளுதான் வளர்ந்திருக்க. ஒரு பீட்சாவை சிந்தாமல் சாப்பிடத் தெரியாதா?"

"என் கண்ணத்தான் என்கூட இருக்கும் போது எனக்கு எதுவுமே தெரியாதே?" கேலியாகத் தலை சாய்த்துச் சிரித்தாள் வினயா.

"அது என்ன கண்ணத்தான்? உனக்கு நான் ஒரே அத்தான் தானே? ரூபனைக் கூட நீ எப்பொழுதும் பெயர் சொல்லித் தானே கூப்பிடுவே?" கோபமாகக் கேட்டவன் காரைக் கிளப்பி சாலையில் பறக்க விட்டான்.

அவனின் கோபத்தை உணர்ந்த வினயா மெதுவாக நகர்ந்து அவன் மணிக்கட்டிற்குள் தன் கைகளை நுழைத்துக் கட்டியவாறு அவன் தோளில் தன் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

வினயாவின் இந்தச் செய்கையினால் கோபம் குறைந்த கண்ணனின் மனதில் தென்றல் இதமாய் வீசியது.

"உங்களுக்கு என்னத்தான் ஆச்சு? ஏன் இப்படி ஒரு கேள்வியை என்னைப் பார்த்துக் கேட்டீங்க. உங்கள் பெயரைச் சொல்லும் ஆசையினால் தான் நான் அப்படிச் சொன்னேனே தவிர எனக்கு அத்தான்னா அது நீங்கள் மட்டும் தான்."

"ஏன் ரூபனும் உனக்கு அத்தான் தானே? என்ன நீ தான் அவனை அப்படிக் கூப்பிடுறது இல்லை..."

"அத்தான்னு கூப்பிடுறது வெறும் உறவை மட்டும் சொல்லும் சொல்லல்ல அத்தான். என் உயிருக்கு நெருக்கமான உங்களை மட்டும் குறிக்கும் சொல்."

"என்னடி புதிர் போடுற. அத்தான்னா அது உறவு முறைதானா?"

"இல்லை. என்னைப் பொறுத்தவரை அது என் உயிரில் கலந்த உங்களைக் குறிக்கும் சொல். என் வாழ்நாளில் நான் அப்படிக் கூப்பிட்ட ஒரே மனிதர் நீங்கள் மட்டும் தான். இனி நான் அப்படிக் கூப்பிடப் போகும் ஒரே மனிதரும் நீங்கள் மட்டும்தான்."

தீர்மானமாய்க் கூறியவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. தன் சட்டையில அவள் கண்ணீரின் ஈரத்தை உணர்ந்த கண்ணன் மறுபடியும் அவசரமாகக் காரை நிறுத்திவிட்டு வேகமாக அவள் தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

தாங்கமுடியாத வேதனையுடன் கண்களை இறுக்க மூடியபடி விம்மி அழுது கொண்டிருந்த அவளை இழுத்து தன்னோடு அணைத்துக் கொண்டு அவள் தலையில் மெதுவாக முத்தமிட்டான் கண்ணன்.



"எனக்கு என்ன ஆச்சுன்னே தெரியலை வினி? என்னை மன்னிச்சுடு. இனி உன்னைக் காயப்படுத்துற மாதிரி எந்த வார்த்தையும் பேச மாட்டேன்."

"ம்..."

"என்ன வினி இது. நான் தான் ஸாரி கேட்டுட்டேன் இல்ல. இன்னும் அழுதுகிட்டே இருந்தா எப்படி. நீ அழுகையை நிறுத்திட்டுத் தள்ளி உட்காரு. ரோட்டில் போகிறவர்கள் எல்லாம் வேடிக்கை பார்க்கப் போகிறார்கள்."

"ஆமாம் காலையில் மட்டும் ரோட்டில் போகிறவர்கள் பார்த்திருக்க மாட்டார்களாக்கும். அப்ப மட்டும் இந்த நினைப்பே வரல?" என்றவளின் குரலில் காலையில் அவன் உடலில் தோன்றிய தாபம் மீண்டும் அதே வேகத்துடன் கூடியது. அவளைத் தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டவனின் இதழ்கள் மீண்டும் அவள் இதழ்களைத் தேடியது. அவனைத் தேட வைக்காமல் வினயாவின் இதழ்கள் அவன் இதழ்களோடு இணைந்தது. பரவல் படர்ந்த அவன் கைகளுக்குள் முழுமையாகத் தன்னை புதைத்துக் கொண்டாள் வினயா. சிறிது நேரத்தில் விடுவித்தவனின் முகத்தில் பழைய உல்லாசம் மீண்டிருப்பதைப் பார்த்த வினயா நிம்மதியுடன் நகர்ந்து அமர்ந்து கொண்டாள்.

"இந்த புதுமாடல் காரெல்லாம் நமக்குச் செட்டாகாது வினயா. முதலில் அப்பாவிடம் இதை கொடுத்துவிட்டு அவரின் அம்பாசிடரை வாங்கிக் கொள்ள போகிறேன்."

"ஐயோ என்னத்தான் டேஸ்ட் உங்களுக்கு. போர்டு காரை உங்களுக்கு பிடிக்கலையா?"

"போர்டு காரெல்லாம் பிடிச்சுதான் இருக்கு. இந்த சீட்தான் பிடிக்கலை."

"என்னது சீட்டைப் பிடிக்கலியா. என் உட்கார கம்போர்ட்டபிளாத்தான இருக்கு?"

"மக்கு மக்கு. இங்க பார் நான் இந்த சீட்டில். நீ அந்த சீட்டில். இரண்டு பேருக்கும் நடுவுல எவ்வளவு கேப் இருக்கு. இதுவே அம்பாசிடர்னா ஒரே சீட்டா கேப்பில்லாம இருக்கும். அத்தானுக்கு அதுதானம்மா வசதியா இருக்கும்."

"சரியான கிரிமினல்தான் நீங்க. மூளை எப்படி எல்லாம் வேலை செய்யுது பாருங்க."

"பின்னே எவ்வளவு கஷ்டப்பட்டு நகர்ந்து வந்து உன்னைக் கட்டிப் பிடிக்க வேண்டியிருக்கு. இதுவே அந்தக் கார்னா உன்னை உன் மடியில் படுக்க வைச்சுக் கிட்டேல்ல காரை ஓட்டலாம். நினைச்சுப்பாரு. எப்படி இருக்கும் என்று..." கிறக்கத்துடன் கண்களை மூடினான் கண்ணன்.

அவன் தொடையில் அழுத்தமாக கிள்ளினாள் வினயா.

"இமேஜினேசனெல்லாம் அப்புறம் பண்ணிக்கலாம். முதலில் கண்ணை திறந்து ரோட்டைப் பார்த்து ஓட்டுங்க. ஒழுங்காக என்னை வீட்டிற்கு கொண்டு சேர்க்கும் எண்ணம் இருக்கிறதா? இல்லையா?"

"நானெங்கம்மா கண்ணை மூடுறேன். அது கிறக்கத்தில் தானாக முடிக்குது. நானென்ன செய்ய?"



"மூடும் மூடும். ஏன் மூடாது? அழிச்சாட்டியம் பண்ணாமல் வண்டியை ஓட்டுங்கத்தான். எனக்கு பயமாக இருக்கு.

"கண்ணனிருக்க பயமேன். என்மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா கண்ணே?"

"சரியா போச்சு போங்க. என் பயமே நீங்க கார் ஓட்டுற அழகைப் பார்த்துத் தானே."

"ஐயகோ. இந்த அநியாயத்தைக் கேட்க ஆளில்லையா. ரேஸில் கார் ஓட்டி மெடல் வாங்கின என்னை பார்த்து ஒரு சிறுமி சந்தேகப்பட்டாளே. இதைக் கேட்க நாதியில்லையா? என்ன கொடுமை சார் இது?" என்று அப்பாவியாகக் கூச்சலிட்ட கண்ணனை பார்த்து வயிறு வலிக்க சிரித்தாள் வினயா.

"போதும் போதும் அத்தான். எனக்கு சிரிச்சதுல மூச்சே விட முடியலை."

என் கண்மணி என்காதலி எனைப் பார்த்ததும்

சிரிக்கின்றதே சிரிக்கின்றதே

நான் சொன்ன ஜோக்கைக் கேட்டு நாணமோ

நான் நகைச்சுவை மன்னன் இல்லையோ?

"ஏன் அத்தான் பாட்டைக் கொலை பண்றீங்க...?" என்று வாய் கேட்டாலும் வினயாவின் கண்கள் அவனை ரசிப்பதை காட்டிக் கொடுத்தது. மெதுவாக தலையைச் சாய்த்து மெல்லிய குரலில் அவளும் பாடினாள்.

என் மன்னவன் என் காதலன் எனைப் பார்த்ததும்

ஓராயிரம் கதை சொல்கிறான் கதை சொல்கிறான்

அம்மம்மா இன்னும் கேட்கத் தோன்றுதே

நான் ரசிக்கின்ற கன்னியல்லவோ?

பாட்டை முடித்தவளின் பார்வை காதலுடன் அவன் மேல் படர்ந்தது.

''உன் குரல் ரொம்ப அழகாயிருக்கு வினி'' என்று பாராட்டியவனின் மனம் வினயாவின் ஒவ்வொரு பரிமாணத்தையும் பார்த்து வியப்பில் ஆழ்ந்தது.

வினயா அவன் பார்த்து வளர்ந்த குழந்தையைப் போலில்லாமல் இன்று தான் அவளை முதன் முதலாகப் பார்ப்பதைப் போல் உணர்ந்தான் அவன்.

''வீடு வந்திருச்சு அத்தான். நாளைக்கும் இதே போல என்னைக் காலேஜ்ல டிராப் பண்ண வர்றீங்களா?''

''இன்னிக்குப் போலவா.''

''ஆமா இன்னிக்குப் போலத்தான்'' என்று சாதாரணமாகப் பதிலளித்தவள் கண்ணனின் பார்வையில் முகம் சிவந்தாள்.

''போக்கிரி அத்தான் இன்னிக்கு போலன்னா டிராப் பண்ணியதை மட்டும் தான் சொன்னேன்.''

''நானும் வேற ஒண்ணுமே சொல்லலியே தாயே. அதைத் தான் கேட்டேன்.''

''கேட்டீங்க கேட்டீங்க. நீங்கள் வாயால கேட்காமல் விட்டதைத் தான் உங்க கண்கள் சொல்லிடுச்சே.''

''வெரிகுட் வினி. கண்ணில் கூடப் பேசுவாங்களோ. எனக்கு இது தெரியாதே?''



''உங்களுக்கா தெரியாது? விட்டால் நீங்க இந்த உலகத்தையே வித்திருவீங்க அத்தான்'' சிரித்துக் கொண்டே காரை விட்டு இறங்கிய வினயா,

''உள்ளே வாங்கத்தான்'' என்றாள்.

''இல்லைல்ல வினி. நாளைக்கு வர்றேன்னு அத்தை கிட்டே சொல்லிடு.''

''சரிங்கத்தான்...'' என்று திரும்பிய வினயாவை கண்ணனின் அழுத்தமான குரல் தடுத்து நிறுத்தியது.

''வினி.''

''என்னங்கத்தான்.''

''இதைப்பிடி'' என்றபடி அவள் கரங்களில் மல்லிகை சரத்தைக் கையில் திணித்தவன் அவளை கண்ணோடு கண் ஊடுருவிப் பார்த்தான்.

''என்னத்தான் வேணும்.''

''வீட்டுக்கு வா...'' அவளைப் பார்த்து அழுத்தமாகக் கூறியவன் வேகமாகக் காரைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான். கார் சென்ற திசையைப் பார்த்த வினயாவின் விழிகள் திரும்பி அவள் கைகளிலிருந்த மல்லிகை மொட்டுக்களின் மேல் நிலைத்தது.

''இந்த அத்தானுக்கு என்னவாயிற்று...?''

## 24

''வினயா... ஏய்... வினயா! ஏண்டி அங்கேயே அப்படி நிக்கிறே? உள்ளே வா'' என்ற பாரிஜாதத்தின் குரல் வினயாவை இந்த உலகத்திற்கு இழுத்து வந்தது.

"அம்மா இப்படிக் கத்தறீங்க. இதோ வந்துவிட்டேன்."

"நானாடி கத்தறேன், கூப்பிடக் கூப்பிடத்தான் பிரமை பிடிச்சது போல நின்னுக்கிட்டிருந்தே. ஆமா கையில என்ன பூவா?"

"ஆமாம்மா. அத்தான் கொடுத்தாங்க" என்றவள் நீட்டிய அன்னையின் கரங்களில் பூவைக் கொடுத்தாள் வினயா.

"ரொம்ப அழகா நெருக்கமாகக் கட்டியிருக்காங்க. யாரு கண்ணனா வாங்கிட்டு வந்தான்?"

"அத்தான்னா வேற யாரும்மா? நீயும் என் அத்தானை மாதிரியே கேள்வி கேக்கிற" சலித்துக்கொண்டே தோளிலிருந்த பேக்கை கழற்றி வேலைக்கார செல்வந்தியிடம் நீட்டினாள் வினயா.

செல்வந்தி அந்த இடத்தை விட்டு போகும் வரை பேசாமல் இருந்த பாரிஜாதம், அவள் அகன்றதும் வினயாவைத் தன் அருகில் சோபாவில் இழுத்து அமர்த்தி அவள் முகத்தை கேள்வியுடன் பார்த்தாள்.

"யாரு கண்ணனா கேட்டான்? என்ன கேட்டான்."

"ஆமாம் அவங்கதான் கேட்டாங்க."

"என்ன கேட்டான்னு கேட்டேன்" அதட்டலாக வினவிய பாரிஜாதத்தை வியப்புடன் பார்த்தாள் வினயா.

"வாய் தவறி கண்ணனத்தான்னு சொல்லிட்டேன்மா. நான் ஒருத்தன் தானே உனக்கு அத்தான். என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுறேன்னு கேட்டார்."

"நீ என்ன சொன்னே?"



"போம்மா அதையெல்லாம் நீ ஏன் கேட்கிற? என்னமோ சொன்னேன் போ" என்று முகம் சுளித்த வினயாவின் தலையைத் தடவிக் கொடுத்தது தாயின் கரம்.

பாரிஜாதத்தின் உள்ளத்தில் இனம் புரியாத பயம் தோன்றியது. என்னவோ நடக்கப் போகிறது என்று அவள் உள்மனம் எச்சரித்தது. அவள் வினயாவைத் தன்புறமாய்த் திருப்பி அவள் கண்களை நேராகப் பார்த்தாள்.

"வினயா, அம்மா சொல்வதைக் கவனமாகக் கேள். காலையில் கண்ணன் நன்றாகத்தானே உன்னிடம் பேசினான்?"

"ஆமாம்மா. நன்றாகத்தான் பேசினாங்க" மகளின் சிவந்த கன்னம் அன்னையின் கேள்விக்குப் பதிலளித்தது.

"பின் சாயந்திரம் மட்டும் ஏன் அப்படிக் கேட்டான்?"

"தெரியலைம்மா. அதுதான் எனக்கும் குழப்பமா இருந்தது. ஆனால் அத்தான் ஈவ்னிங் என்னைக் கூப்பிட வந்தப்பவே மூடு அவுட்டாத்தான் இருந்தாங்க."

"சரி இப்போ ஏன் வீட்டுக்குள் வராமல் போனான். நீ அவனைக் கூப்பிடலையா."

"நான் கூப்பிட்டேன்மா. ஆனால் நீ வீட்டுக்கு வான்னு சொல்லிட்டு போயிட்டாங்க."

"உன்னையா வரச் சொன்னான்."

"ஆமாம்மா. ஆனால் எனக்குத்தான் அங்கே போக சங்கடமாயிருக்கு. அத்தை மாமாவைப் பேச

பண்ணிட்டுப் போய் அத்தான் கூடப்பேச கூச்சமாயிருக்கும்மா.''

''கண்ணன் உன் கூடப் பிரியா பேசணும்னுதான் உன்ன அங்க கூப்பிட்டிருக்கான்...?''

''ஆமாம்மா. ஆனா... அம்மா நான் போகவா? வேண்டாமா? இல்லைன்னா அத்தானை இங்க வரச்சொல்லி போன் பண்ணவா?''

''வேண்டாம் வினி. அப்படிச் செய்யாதே. நான் கேட்கும் கேள்விக்குத் தெளிவாகப் பதில் சொல்லு. உனக்கு கண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டம்தானே? மறைக்காமல் வெட்கப்படாமல் பதில் சொல். இது உன் வாழ்க்கையின் முக்கியமான தருணம் என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு தெளிவாக பதில் சொல்'' தவிப்புடன் கேட்ட தாயை திடமாக நிமிர்ந்து பார்த்தாள் வினயா.

''எனக்கு அத்தானை மட்டும் தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டம் அம்மா'' உறுதியுடன் வெளிவந்தது வினயாவின் குரல்.

ஆண்டவனின் வரப்பிரசாதம் தாய். ஒரு பெண்ணிற்கு தன் மனதிலிருக்கும் எண்ணங்களை ஒளிவு மறைவின்றித் தாயிடம் மட்டும் தான் பகிர்ந்து கொள்ள முடியும். தன் மகளின் உணர்வுகளைச் சொல்லால் சொன்னாலும், மனதில் நினைத்தாலும் ஒரு உண்மையான அன்புள்ள தாயினால் அனைத்தையும் உணர்ந்து கொள்ள முடியும். மகளின் உணர்வுகளை மட்டுமல்ல அவளுக்கு துன்பம் வரப் போவதையும் கூடத்



தாயுள்ளத்தால் கண்டு கொள்ள முடியும். உண்மையான அன்புள்ள தாயினாலேயே இவ்வளவையும் கண்டு கொள்ள முடியும் என்றால், பாரிஜாதம் வினயாவைத் தன் உலகமாக எண்ணி வாழ்பவள். அவளால் மகளின் சிறு அசைவைக் கொண்டு கூட அவளின் மனத்தினை உணரமுடியும். அவள் கண்களின் பார்வையைக் கொண்டே வினயா நினைப்பதை நடத்தி முடிப்பவள் அவள். மகள் ஆசைப்பட்ட அனைத்தையும் அவளுக்கு கொடுத்து மகிழ்ந்த பாரிஜாதத்திற்கு மகள் ஆசைப்பட்ட வாழ்க்கையை அவளுக்கு கொடுக்க முடியுமா என்ற சஞ்சலம் வந்தது. அவள் உள்மனம் காலை, மாலை இரண்டிற்கும் இடைப்பட்ட நேரத்தில் என்னவோ நடந்து இருக்கிறது என்று அழுத்தமாக நினைத்தது.

எனவே அவள் குரல் அச்சத்துடன் வெளிவந்தது. ''வினியாக்குட்டி அம்மா சொல்வதைக் கேள். கண்ணனின் மேல் நீ கொண்டிருக்கும் அன்பு எத்தகையது என்பதை அவனுக்கு தெளிவாக நீ தான் உணர்த்த வேண்டும்.''

''போம்மா. அத்தானுக்கு என் மேல் உள்ள அன்பினை அவங்க சொல்லாமல் நான் உணரவில்லையா? என் அன்பினை மட்டும் நான் சொல்லித்தான் அத்தான் புரிஞ்சுக்குவாங்களா?'

''இது ஈகோ பார்க்கும் விஷயமில்லை வினி...''

''இது ஈகோ இல்லைம்மா நம்பிக்கை. நான் அத்தான் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை. நான் சொல்லா விட்டாலும் அத்தான் என்னைப் பற்றி நன்றாக புரிந்து வைத்திருப்பார் என்ற நம்பிக்கை.''

''நீ சொல்வது சரிதான் வினயா. ஆனால் ஒவ்வொரு ஆணுக்கும் அவன் விரும்பும் பெண் தன் வாயால் அவன்மேல் அவள் கொண்டிருக்கும் அன்பினை சொல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும். அதற்கு கண்ணனும் விதிவிலக்கு இல்லைன்னு எனக்கு தோணுது.''

''இல்லம்மா நீங்க தப்பாப் புரிஞ்சிக்கிட்டிருக்கீங்க.''

''நான் கண்ணனைச் சரியாப் புரிஞ்சுக்கணும்ற அவசியம் இப்போது இல்லை வினி. நீ அவனைச் சரியாக புரிஞ்சுக்கிட்டு அதுக்கு தகுந்தாற்ப்போல நடக்க வேண்டிய நேரம் இது.''

''என்னம்மா சொல்றீங்க? ஏன் இவ்வளவு சீரியஸாகப் பேசறீங்க? நீங்க நினைக்கிற மாதிரி என்றும் தப்பா நடக்காதும்மா.''

''இல்லை வினி. அம்மா சொல்வதைக் கேளு. நீ போயி குளிச்சிட்டு டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வா. மாமா வீட்டுக்குப் போகலாம்.

''அப்பா வர்ற நேரமாச்சேம்மா. அப்பா வர்ற நேரம் நீங்க எங்கயும் போக மாட்டீங்களே.''

''அப்பா வர லேட்டாகும்னு போன் பண்ணிட்டாங்கம்மா. நீ போய் நிம்மதியாக கிளம்பு. நாம ரெண்டு பேருமே சேர்ந்து மாமா வீட்டுக்கு போயிட்டு வரலாம்.''

''சரிம்மா. இதோ ஒன் மினிட்ல ரெடியாயிடுறேன்'' என்றபடி அன்னையின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுச் சிட்டாகப் பறந்தாள் மகள்.



பாரிஜாதத்தின் உள்ளம் மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தது. அவளுக்கு மகளின் திருமணத்தை உடனே நடத்திவிட வேண்டும் என்று தோன்றியது. இன்று இரவே ஹரிசந்தரிடம் இதைப் பற்றிப் பேசவேண்டும் என்று எண்ணிக் கொண்டாள் அவள்.

''அம்மா ராத்திரிக்குப் பலகாரம் என்னம்மா செய்யட்டும்'' சமையல்கார செவ்வந்தியின் குரல் பாரிஜாதத்தின் சிந்தனையைக் கலைத்தது.

''நைட்டுக்கு லைட்டா எதையாச்சும் பண்ணு செவ்வந்தி. ஐயா மதியம் வெளியில் சாப்பிட்டிருப்பாங்க அதனால் நைட்டுக்கு ஹெவியா எதுவும் வேணாம்.''

''லைட்டான்னா என்னம்மா, வெளிச்சமா ஏதாச்சும் பலகாரம் பண்ணவா? வெளிச்சமான்னா வெள்ளையாவா அம்மா.''

''ஐயோ செவ்வந்தி எத்தனை தடவை உனக்கு சொல்லியிருக்கேன். லைட்டான்னு சொன்னா ஈஸியாய்ச் செரிமானம் ஆகுற மாதிரி பலகாரம் பண்ணுன்னு அர்த்தம். எத்தனை வருஷமா இங்க வேலை செய்யுற. இது கூட ஞாபகம் வைச்சுக்க முடியலியா?''

''கோச்சுக்காதீங்கம்மா. படிக்காத என் மரமண்டைக்கு அடுப்பங்கரையை விட்டா வேற ஒண்ணும் தெரிய மாட்டேங்குதே. இப்ப இட்லியும், சட்னி சாம்பாரும் செய்துடவா?''

''சரி அப்படியே செய்துடு. அத்தோடு கொஞ்சம் இட்லிப்பொடியும் நெய்யும் கலந்து வைச்சுடு. உங்க ஐயாவுக்கு அது இல்லாம இட்லி உள்ள போகாது. எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டாரு.''

''ஐயா உடம்பு கல்லைத் தின்னாலும் செரிக்கிற உடம்பும்மா. நீங்க அவுக உடம்பைப் பத்திக் கவலைப் படாதீங்க'' என்றபடியே சமையலறைக்குள் நுழைந்து பாத்திரங்களை உருட்ட ஆரம்பித்தாள் செவ்வந்தி.

மெதுவாக எழுந்து வாசலுக்கு வந்த பாரிஜாதம் ''முனியா இங்க வா'' என்று தோட்டக்காரனை அழைத்தாள்.

''இதோ வந்துட்டேன்மா'' எஜமானியின் குரலைக் கேட்ட முனியன் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே விட்டு விட்டு ஓடி வந்தான்.

''நானும் பாப்பாவும் பெரியண்ணன் வீடு வரைக்கும் போயிட்டு வர்றோம். ஐயா வந்தாங்கன்னா சொல்லிரு. அப்புறம் அந்த மஞ்சள் ரோஜாச் செடிக்கு உரம் வைக்கச் சொன்னேனே வெச்சியா. பூவெல்லாம் சின்னதாய் பூக்குது பாரு.''

''அதைத்தான்மா செஞ்சுட்டிருந்தேன். இதே இப்ப முடிஞ்சுரும்'' என்றபடி நகர்ந்தான் அவன்.

## 25

''அம்மா போகலாமா'' மகளின் குரலைக் கேட்டுத் திரும்பிய பாரிஜாதத்தின் கண்கள் மகளை அள வெடுத்தது.

ரோஜா வண்ணப் பட்டுப் பாவாடையில் பச்சைப் பார்டருக்கு ஏற்றாற் போலப் பச்சைப் பட்டில் தாவணியும் பாவாடையின் கலரிலேயே தைத்த



பிளவுசுமாக அன்று தான் மலர்ந்த பூவைப் போல மாசு மருவில்லாத அழகோடு நின்று இருந்தாள் வினயா. தளர்வாகப் பின்னலிட்ட கூந்தல் இடையைத் தாண்டி நீண்டு தொங்கியது. கண்ணன் வாங்கி வந்த மல்லிகைச் சரத்தை கையில் எடுத்த பாரிஜாதம் மகளின் தலையில பாந்தமாக அதை வைத்து விட்டாள். தோளின் இருபுறமும் வழிந்த மல்லிகை சரத்தின் மனத்தில் மயங்கி நின்றாள் வினயா.

''போகலாமாடா வினி? உன் அழகைப் பார்த்து என் கண்ணே பட்டிரும். இன்னிக்கு உனக்குச் சுத்திப் போடணும்.''

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சும்மா.''

''காக்கைக்கு எப்படியோ தெரியாது. ஆனால் எனக்கு என் பொண்ணு பொன் குஞ்சுதான் வா'' என்றவாறு மகளின் கைகளைப் பிடித்துக் கொண்டே அண்ணனின் வீடு நோக்கி கிளம்பினாள் பாரிஜாதம்.

''வாசலில் தோட்டக்காரனிடம் ஊர்க்கதைப் பேசிக் கொண்டிருந்த அலமேலம்மாளின் விழிகள் மகளையும் பேத்தியையும் பார்த்து வியப்பில் விரிந்தது.''

''யாரு பாரிஜாமா? வாம்மா கண்ணு வா. கூப்பிடு தூரத்துல அண்ணன் வீடு இருந்தாலும் இப்படி விருந்தாளி போல எப்பவாவது வர்ற. வாவா. அடி என் வினயா செல்லம் நீயும் வாம்மா. பார்வதி யாரு வந்திருக்காங்கன்னு பாரு'' மகளையும் பேத்தியையும் பார்த்த சந்தோஷத்தில் தலைகால் புரியாமல் சிறு குழந்தை போல குதுகலத்துடன் வீட்டிற்குள் இருந்த மருமகளை அழைத்தாள் அலமேலம்மாள்.

அலமேலம்மாளின் குரலைக் கேட்ட பார்வதி பதட்டத்துடன் வாசலுக்கு ஓடி வந்தாள்.

''என்னத்தை என்னாச்சு? ஏன் இப்படிச் சத்தமாக் கூப்பிடுறீங்க? ஏதாவது வேணுமா? கவலையுடன் மாமியாரைக் கேட்டவள் தாமதமாகத்தான் பாரிஜாதம் வந்திருப்பதை உணர்ந்தாள்.

''பாரிஜாதம் வாம்மா வா. இப்பத்தான் அண்ணன் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதா? உள்ளே வா. ஏன் இங்கேயே நிக்கிற? வினயாகுட்டி நீயும் உள்ளே வாடா'' என்றவாறு இருவரையும் அணைத்தபடி உள்ளே அழைத்து சென்றாள் பார்வதி.

''உட்காரு பாரிஜாதம். இதோ ஒரு நிமிஷத்துல உனக்கு பிடிச்ச டிபனை செய்யச் சொல்றேன். நீயும் உட்காருடா வினயா. உனக்கும் என்ன வேணும்னு சொல்லு. ஏய் மல்லிகா இங்க வா'' என்று பரபரத்த பார்வதியின் கைகளைப் பற்றித் தன் அருமே அமர வைத்துக் கொண்டாள் பாரிஜாதம்.

''ஒண்ணும் வேணாம் அண்ணி. இப்பத்தான் வீட்டுல டிபன் சாப்பிட்டு வந்தோம். வெறும் காபி மட்டும் கொடுங்க போதும்.''

''இதோ ஒரு நிமிஷத்துல கொண்டாறேன் இரு'' என்றவாறு எழுந்து ஓடினாள் பார்வதி.

''என்னம்மா பாரிஜாதம். திடீரென்று அண்ணன் வீட்டு ஞாபகம் வந்திருக்கு.''

ஹாலில் அமர்ந்து அனைத்தையும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்த திருப்பதி மெதுவாக மகளிடம் வினவினார்.



''வந்த பிள்ளையை வான்னு கேட்காம, இது என்ன கேள்வி'' என்று நொடித்த அலமேலம்மாவை பார்வையால் அடக்கினாள் அவர். என்றுமில்லாமல் தன்னை அடக்கிய கணவரை புதிராகப் பார்த்த அலமேலம்மாள் அமைதியாக மகளைப் பார்வையிட்டார்.

''என்னடா? என் கேள்விக்கு பதில் சொல்லவே இல்லையே நீ.''

''ஒண்ணும் பெரிசா காரணமெல்லாம் இல்லப்பா. என் மனம் ஏனோ ரொம்ப அலைபாயுது. வினயாக் குட்டியின் கல்யாணத்தைப் பத்தி ரொம்பக் கவலையாக இருக்குப்பா.''

''சீச்சீ. நாங்க இருக்கையிலே நீ கண்ணு கலங்கி நிக்கலாமா தாயி. இந்த அப்பபன் உயிரைக் குடுத்தாவது உன் ஆசையை நிறைவேத்தி வைப்பேன். கவலைப் படாதேம்மா.''

''இவருக்கு வரவர எப்படிப் பேசுறதுன்னு கூட தெரியல பாரேன். விளக்கு வச்ச நேரத்துல அச்சாணியமா பேசிகிட்டு இதுக்கு நீங்க வாயை மூடிக்கிட்டுப் பேசாம இருக்கிறதே மேல்.''

''நெருப்புன்னா வாய் வெந்துடாது அலமேலு. என்னைத் திட்டுறத விட்டுட்டு உன் மகளின் மனக் கவலையை தீர்க்கிற வழியை பாரு.''

''என் மகளுக்கு மனக்குறைன்னு ஒண்ணு நாம இருக்கிற வரைக்கும் வராது. அப்படி வந்தால் நாம இருக்கிறதுல அர்த்தமே இல்லைன்னு அவளுக்கு நல்லாத் தெரியும்.''

''என்னம்மா நீங்களும் அப்பாவை மாதிரியே பேசறீங்க. என் மனதில் குறையெல்லாம் எதுவுமில்லை. ஒரு சின்ன மன சஞ்சலம். அதுவும் உங்களைப் பார்த்ததும் மறைஞ்சிருச்சு போதுமா?''

''என்னாச்சு அம்மாவும் பொண்ணும் சீரியஸா எதையோ பேசிக்கிட்டிருக்கீங்க போல'' கையில காபியுடன் வந்த பார்வதி சிரித்துக் கொண்டே டம்ளரை இருவரிடமும் நீட்டினாள்.

''உங்களுக்கு தெரியாமல் என்னண்ணி ரகசியம். சாதாரணமாகத்தான் பேசிகிட்டிருந்தோம்.''

''அம்மா போலாமா? கையில் பூஜைக் கூடையுடன் வந்த மல்லிகா மரியாதையுடன் பார்வதியிடம் கேட்டாள்.

''என்னண்ணி கோவிலுக்கா கிளம்பறீங்க?''

''நீ வர்றதுக்கு முன்னாடி கிளம்பினேன் பாரிஜாதம். இப்ப என்ன இன்னிக்கு போகலேன்னா நாளைக்குப் போய்க்கிறேன். மல்லிகா பூஜைக் கூடையை சாமி ரூமில் கொண்டு போய் வச்சுட்டு நீ வேலையைப் பாரு'' என்று உத்தரவிட்டாள் பார்வதி.

இல்லண்ணி நீங்க கோவிலுக்கு போயிட்டுவாங்க. சாமி கும்பிடக் கிளம்பிட்டு தடங்கலா நிக்கக்கூடாது.''

''அப்படின்னா நீயும் வர்றியா சேர்ந்து போயிட்டு வரலாம். நாம சேர்ந்து வெளியே போய் எத்தனை நாளாய்சு?''

''இல்லண்ணி வினயாவைக் கண்ணன் வரச் சொல்லிச்சாம். என்னான்னு கேட்டுட்டு போகலாமுன்னு தான் வந்தோம்.''



''அதுக்கென்ன அது அவங்க அத்தானோட பேசிக் கிட்டு இருக்கட்டும். நாம போயிட்டு சீக்கிரமா வந்துடு வோம் வா.''

''அண்ணி தான் இவ்வளவு தூரம் கூப்பிடுதுல்ல. நீ போயிட்டு வா பாரிஜாதம். நானும் உன் அம்மாவும் இங்க இருந்து பார்த்துக்கிறோம்'' என்றார் திருப்பதி.

''ஆமாம்மா நாங்க இருக்கையில் நீயேன் தயங்கி மயங்கி நிக்கனும்? எல்லாத்தையும் நாங்க பார்த்துக்கு றோம். நீ கவலைப்படாமல் போய் ஆண்டவனை தரிசித்துவிட்டு வா'' என்றாள் அலமேலம்மாள் அர்த்தம் பொதிந்த குரலில்.

''சரிம்மா போயிட்டு வர்றேன். வினயாக்குட்டி இருக் கியா... வந்துட்றேன்...'' என்று மகளிடம் விடைபெற்றுக் கொண்டு அண்ணியுடன் கிளம்பினாள் பாரிஜாதம்.

''அத்தான் எங்கே பாட்டி.''

''உன் அத்தான் அவன் ரூமில் தான் இருக்கான். இரு கூப்பிடுறேன். கண்ணா... கண்ணா'' என உரக்க கூப்பிட்டாள் அலமேலம்மாள்.

''ஏன் பாட்டி இப்படிக் கத்தறீங்க. நான் இங்கதான் இருக்கேன்'' என்றபடி மாடியில இருந்து எட்டிப் பார்த்த கண்ணன் திகைத்தான்.

''ஹேய் வினி. எப்ப வந்த? நேரே மேலே வரவேண் டியது தானே? ஏன் கீழேயே உட்கார்ந்துட்ட. வா... வா... உனக்காகத்தான் வெயிட் பண்ணிக்கிட்டிருந்தேன்.''

''போம்மா அத்தான் கூப்பிடுறானுல்ல.''

"நீங்களும் வாங்க பாட்டி."

"ஏன் பாட்டியில்லாமல் வந்தா நான் உன்னைக் கடிச்சா தின்னுடுவேன். என்னவோ என் ரூமுக்கே வராதவள் போல இவ்வளவு தயங்குற... கமான் வினி."

"புள்ளையை ரொம்பத்தான் மிரட்டாதே ராசா. பயப்படுதுல்ல. நீ போ கண்ணு. நானும் மேலே வந்துட்டால் உன் தாத்தாவுக்கு பேச்சுத் துணைக்கு ஆள் வேணும்ல. நீ போயிட்டு வா."

"ம்..." காதில் போட்டிருந்த ஜிமிக்கிகள் இரண்டும் கன்னத்தில் உரச தலையாட்டிவிட்டு மாடி ஏறி வந்தவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டே நின்றிருந்தான் கண்ணன்.

தலையில் அவன் வாங்கித் தந்த மல்லிகையைச் சூடிக் கொண்டு ஒரு தேவதையின் அழகோடு அவனருகே வந்தவளைப் பார்த்தவனின் மனது பெருமையால் பூரித்தது. இத்தனை அழகும் தனக்கே உரிமையானது என்ற எண்ணத்தில் அவனது ஆண்மை கர்வமுற்றது.

## 26

"உள்ளே வா வினி..." அழைத்த கண்ணனின் குரலைத் தொடர்ந்து அவன் அறைக்குள் நுழைந்த வினயாவின் பார்வை அறையைச் சுற்றி வந்தது.

"என்ன வினி... ரூம் பிடிச்சிருக்கா?"

"நான் சின்ன வயதிலிருந்து பார்த்த ரூம்தானே அத்தான். பிடிக்காமல் போகுமா?"



"சிறு வயதில் பிடித்தது எல்லா வயதிலும் பிடிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை வினி. உனக்குப் பிடிக்கலைன்னா நீ தாராளமாக என்னிடம் சொல்லு. அது எதுவாக இருந்தாலும் உன் இஷ்டப்படி மாற்றி நான் அமைப்பேன். என்னை நீ நம்பலாம்" கண்ணனின் குரலில் இருந்த இரண்டு அர்த்தம் கொண்ட தொனியை இனம் கண்டு கொண்ட வினயா நிமிர்ந்து அவனை நேராகப் பார்த்தாள்.

"நான் ஹரிசந்தரின் மகள் அத்தான். என் வாயில் இருந்து பொய் என்றும் வராது. அதோடு நான் ஒரு ஜமீனின் இளவரசியும் கூட. எனக்குப் பிடிக்காத ஒன்றை செய்யச் சொல்லி என்னை யாராலும் கட்டாயப் படுத்தவும் முடியாது. அன்பு ஒன்றுதான் இந்த வினயாவை கட்டுப்படுத்தும். அந்த ஒரே அன்பும் உங்கள் மீது நான் கொண்டதாக தான் இருக்கும் அத்தான்" பெண் சிங்கத்தின் நிமிர்வுடன் எதிரே நிற்கும் வினயாவைப் புதிதாகப் பார்ப்பவன் போல் பார்த்தான் கண்ணன்.

"என் மீது உனக்கு அவ்வளவு அன்பு உண்டா வினி?"

"அதில் உங்களுக்குச் சந்தேகமா அத்தான்."

"ம்ப்ச்... என் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லவே தெரியாதா உனக்கு?"

"உங்களுக்கு இப்பொழுது என்ன தெரிய வேண்டும். நீங்களும் நேரடியாகக் கேட்கலாமே அத்தான்."

"நேரடியாகக் கேட்க வார்த்தையில்லாமல் தான் தவிக்கிறேன் வினி" அவளுக்கு முதுகு காட்டித் திரும்பி தோட்டத்தை வெறித்தான் கண்ணன். மெதுவாக நடந்து

வந்து அவனுடன் நின்று தோட்டத்தை பார்த்த வினயாவின் இதழ்கள் மெல்லிய குரலில் பாடத் துவங்கியது.

''திருமண மலர்கள் தருவாயா
தோட்டத்தில் நான் வைத்த-பூச்செடியே
தினம் ஒரு கனியை தருவாயா
வீட்டுக்குள் நான் வைத்த மாதுளையே
மலர்வாய் மலர்வாய் கொடியே
கனிவாய் கனிவாய் கனியே''

என்று பாடிய வினயாவின் பார்வை சிறுவயதில் அவர்கள் இருவரும் இணைந்து நட்டு வைத்த பூச்செடியை சுட்டிக் காட்டியது.

''வினி... மை டியர்...'' வேகமாக இழுத்து அணைத்துக் கொண்டவனின் அணைப்பில் ஆசையுடன் அடங்கினாள் வினயா.

''உங்கள் மீது நான் கொண்டிருக்கும் அன்பின் மீது உங்களுக்கு சந்தேகமா?'' நடுங்கும் மனதுடன் கேட்டாள் வினயா.

அதைக் கேட்டவன் அவள் தோள்களைப் பற்றி தள்ளி நிறுத்திய கண்ணனின் குரலில் வெறுமை நிறைந்து இருந்தது.

''அன்பு... அன்பு... அன்பு... இந்த அன்புக்கு என்ன பெயர் வினயா? என்ன அர்த்தம்? என்மேல் நீ கொண்டிருக்கும் அன்பின் பெயர் பாசமா அல்லது காதலா? இந்த கேள்விக்குத் தயவு செய்து பதில் சொல் வினயா... ஏனென்றில் இந்த கேள்விக்கான பதில்



தெரியாமல் தான் நான் பாரினுக்கு ஓடினேன். ஆறு வருடங்களாக இரவும் பகலும் இந்தக் கேள்விக்கான பதில் என்னவாக இருக்கும்என்று எண்ணியே துடித்துக் கொண்டு இருந்தேன். இப்பொழுதும் இந்த கேள்விக்கான பதில் தெரியாமல் தான் தவித்துக் கொண்டிருக்கிறேன். சொல் வினயா... நீ கொண்டிருக்கும் அன்பின் பெயரென்ன? சொல்லு?'' உன்மத்தம் பிடித்தவன் போல் தன் தோள்களைப் பற்றி குலுக்கிக் கொண்டு இருந்த கண்ணனின் கரங்களைப் பற்றித் தன் கன்னங்களில் வைத்துக் கொண்ட வினயா அவன் கண்களுக்குள் ஊடுறுவிப் பார்த்தாள்.

''என் அன்புக்குப் பெயர் காதல் அத்தான். அது உங்களுக்கு புரியாமலா என்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் பாரின் போனீர்கள்?''

''நான் மட்டும் சந்தோஷமாகவா போனேன்? ஒரு பைத்தியக்காரனைப் போல் அல்லவா சுற்றிக் கொண்டு இருந்தேன்.

''ஏன் அத்தான்? நீங்கள் என் மீது வைத்திருந்த காதலை நீங்கள் சொல்லாமலேயே நான் புரிந்து கொண்டேன்? என் காதலை மட்டும நீங்கள் எப்படிச் சந்தேகப் பட்டீர்கள்?''

''சந்தேகப்படவில்லை வினி. சஞ்சலப்பட்டு விட்டேன். நான் தூக்கி வளர்த்த பெண் நீ. எனக்கும் உனக்கும் இடையிலிருந்தது வயது வித்தியாசம் என் மனதை சஞ்சலப்படுத்தியது.''

மெதுவாக அவனைக் கட்டிலில் அமர்த்திய வினயா தானாகவே அவன் தோள்களைக் கட்டிக் கொண்டு

மடியில் சரிந்தாள். அவள் இதழ்கள் அவன் காதோரம் பாடியது.

பாவாடை அணியும் வயதில்
கயிறு கட்டி விட்டவன் எவனோ
தாலி கட்ட வந்தவன் அவனே...
உறவானவன்
கொலுசில் உள்ள ஓசையைக் கொண்டே
மனதில் உள்ள பாவை சொல்வான்
மலர்கின்ற மலரைப் போன்று...
பதமானவன்
உறவெல்லாம் ஒன்றாய் ஒன்றாய்க் கூடியவன்.

அவன் தலையை சாய்த்து செல்லமாக முட்டினாள் வினயா.

''என் வினிக்குட்டி...'' ஆவேசத்துடன் அவள்மேல் சரிந்த கண்ணன் மனதிலுள்ள சஞ்சலமெல்லாம் மறைந்து விட அவள் மேல் படர்ந்து இறுக்கிக் கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் அறிந்துக்கொண்ட சொந்தத்துடன் அணைத்துக் கொண்டார்கள். கண்ணனின் கைகள் புதிய சொந்தத்துடன் பரவி வினயாவிற்குச் சொர்க்கத்தைக் காட்டின. கிறங்கியவனாய் தன் மீது சரிந்திருந்த வினயாவின் நெற்றியால் முத்தமிட்ட கண்ணன் எல்லை மீறாமல் அவளை விட்டு விலகி எழுந்து நின்றான்.

''வா, வினி கீழே போகலாம். இனிமேல் இங்கே இருக்க எனக்கே பயமாக இருக்கிறது.''



''எதுக்கு பயமாம்.''

''என்னால் முடியலடி. அப்புறம் எல்லை மீறிய பிறகு என்னைக் குறறம் சொல்லக்கூடாது. அதனால் ஜாக்கிரதையாக இருவரும் கீழே போய் விடலாம்.''

''மீறினால் தான் என்னவாம்? நான் ஒன்றும் உங்களை குற்றம் சொல்ல மாட்டேன். இங்கயே இருக்கலாம்.''

''வேணாம்டி. மனுசனை உசுப்பேத்தாதே. நான் இந்த ஆட்டத்துக்கே வரலை. நீ முதல்ல எந்திரி. நாம கீழேயே போகலாம்.''

''சரியான பயந்தாங்கொள்ளி அத்தான் நீங்க.''

''யாரைப் பார்த்துடி பயந்தாங்கொள்ளின்னே.''

''ஏன் உங்களைப் பார்த்துத்தான்.''

''என் தைரியத்தைக் காட்டினேன்னா நீ தாங்க மாட்டே பேசாம எந்திரிச்சுரு.''

''எங்க வீரத்தை காட்டுங்க. அதையும் தான் பார்க்கலாம்.''

''உன்னை... இருடி... இப்ப வர்றேன்'' என்ற கண்ணன் சாத்தியிருந்த கதவுக்கு தாள் போட்டுவிட்டு கட்டிலில் பாய்ந்தான். பாய்ந்தவனின் கரங்களில் மாட்டிக் கொள்ளாமல் கட்டிலின் மறுபக்கம் புரண்டு எழுந்து கொண்ட வினயா அவனுக்கு பலிப்புக் காட்டிச் சிரித்தாள்.

''இப்பத் தெரியுதாடி உனக்கு யாரு பயந்தாங்கொள்ளி என்று. ஆம்பளை சிங்கம்டி நாங்க.''

''ஆமாமாம். இந்த சிங்கம்தான் எனக்கு பயந்துக்கிட்டு பாரினுக்கு ஓடிச்சாக்கும்.''

''அது... அது... அது அப்போ...''

''உக்கும்... இது... இது... இப்போவாக்கும்'' கைகளால் வாயைப் பொத்துக்கொண்டு கலகலவெனச் சிரித்தவளைப் பார்த்தவனுக்கும் சிரிப்பு வந்தது.

''சரி சரி நக்கல் பண்ணியது போதும். மாமன் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு நல்ல பிள்ளையாய் கீழே போ'' என்றவனின் பின்னால் பார்வையால் தேடினாள் வினயா.''

''என்னடி தேடுற.''

''இல்ல மாமான்னு சொன்னீங்களே. மாமா வந்துட்டாராக்கும் பார்த்தேன்.''

''அடிப்பாவி என் அப்பாவையே எனக்குப் போட்டியாக்குறயா? பயங்கர டேன்ஜரான ஆளுதான் நீ'' என்று காதைத் திருகிய கண்ணனின் கன்னத்தில் ஆசையுடன் முத்தமிட்ட வினயா கதவைத் திறந்துக் கொண்டு கீழே போனாள்.

## 27

வினயாவின் பின்னாடியே மாடிப்படி இறங்கி வந்த கண்ணனைப் பார்த்த அலமேலம்மாளும் திருப்பதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தனது இரு பேரப்பிள்ளைகளின் ஜோடி பொருத்தத்தையும் பார்த்த அலமேலம்மாள் மானசீகமாக அவர்களுக்கு திருஷ்டி கழித்தாள்.



''வாடா வினியாச் செல்லம். அத்தான்ட்ட பேசிட்டியா?''

''அதெல்லாம் நல்லாப் பேசினாள் பாட்டி. வேணும்னாலும் அவகிட்டயே கேளுங்களேன்'' என்ற கண்ணனைப் பார்வையாலேயே சுட்டாள் வினயா.

''அடச் சும்மாயிரு ராசா... என் பேத்திக்கு அளவில்லாமல் பேசவெல்லாம் வராது. அளவோடத்தான் எதையும் பேசுவாள்'' அலமேலம்மாளின் மேல் சலுகையாகச் சாய்ந்து கொண்ட வினயா கண்ணனுக்குப் பலிப்பு காட்டினாள்.

''என்னது அளவோடுத்தான் பேசுவாளா. பாட்டி இது நியாமேயில்லை. ரூமுக்குள்ள இவ பேசுன பேச்சு என்ன... இப்ப ஒண்ணுமே தெரியாத புள்ளைபோல நிக்குறது என்ன சான்ஸே இல்ல பாட்டி. உங்க பேத்தி கண்டிப்பா நடிகையர் திலகம் தான்.''

''என் பேத்தி இளவரசிய்யா. அது எதுவாக இருந்தாலும் நேரடியாக பேசிரும். நடிக்கவெல்லாம் அதுக்கு தெரியாது'' பேத்தியின் கன்னம் வழித்து முத்தமிட்டாள் அலமேலம்மாள்.

''நீங்க இப்பச் சொன்னது மட்டும் உண்மைதான் பாட்டி. உங்க பேத்தி எனக்கும் இளவரசிதான்'' பேரனின் விழிகளில் மின்னிய காதலையும், பேத்தியின் நாணத்தையும் பார்த்த பெரியவர்களின் நெஞ்சம் குளிர்ந்தது.

''பாட்டி இதைக் கொஞ்சம் பாருங்க'' தன் கைகளில் கண்ணன் வைத்த சிறிய பெட்டியைத் திறந்து பார்த்த அலமேலம்மாள் திகைத்தாள். அந்த சிறிய அழகான

பெட்டிக்குள் வேலைப்பாடுகள் நிறைந்த இரண்டு அழகிய வளையல்கள் இருந்தன. அவற்றைக் கைகளில் எடுத்துப் பார்த்த அலமேலம்மாள் அவற்றின் வேலைப்பாட்டில் மனம் லயித்துப் பார்வையிட்டாள். சின்னச் சின்ன இதழ்களாய் வெண்ணிற கற்கள் மலர்ந்திருக்க நடுவில் பெரிய சிவப்பு நிறங்கள் ஒளிர அழகாக விரிந்திருக்கும் மலர் போன்ற அமைப்பைச் சற்றி பச்சைக் கற்கள் பதித்த கொடிகளும் இலைகளும் பின்னிய டிசைனில் கண்ணைப் பறிக்கும் அழகோடு மின்னியது வளையல்.

"இது யாருக்கய்யா ராசா?"

"எல்லாம் உங்க பேத்திக்கு தான் வேற யாருக்கு?"

"என்னோட இன்றைய சம்பாத்தியத்தில் வைரம் வாங்க முடியுமா பாட்டி? சாதாரணக் கல் தான்."

"உன்னோட தகுதிக்கு வைரமெல்லாம் பெரிசா ராசா? என்ன இப்படிப் பேசிட்ட?"

"இல்ல பாட்டி. இப்போ எனக்கு இருக்கும் சொத்தும் அந்தஸ்தும் அப்பாவும் தாத்தாவும் எனக்காக உருவாக்கியது. நான் வினிக்கு என்னுடைய சொந்த உழைப்பில் வரும் காசில் தான் பரிசு கொடுக்க ஆசைப்படுகிறேன். பாரினில் பார்ட் டைம் ஜாப் பார்த்து சேர்த்து வைத்த காசில வாங்கின வளையல் பாட்டி இது."

"பாட்டி அத்தானின் உழைப்பில் வந்த இந்த வளையல் எனக்கு வைர வைடூரியத்தை விட உயர்வானது. அவரது அன்பை குறைச்சலாய் பேசாதீங்க" கோபத்தில் சிவந்த வினயாவின் முகத்தைத் தன்புறம் திருப்பிய



அலமேலம்மாள் "என் பேரனின் உழைப்பும் அன்பும் எனக்கும் பெரியது தான் வினிச்செல்லம். வாய்த் தவறி அப்படிக் கேட்டுட்டேன்" என்றவள் கண்ணனின் பக்கம் திரும்பி,

"ஆமா ராசா. இதை நீயே வினயாவிடம் கொடுத்து இருக்கலாமே? ஏன் என்கிட்டக் கொடுத்து கொடுக்கச் சொல்ற."

"என் வினிக்கு காலமெல்லாம் நான் பரிசு கொடுத்து கொண்டேயிருப்பேன் பாட்டி. ஆனால் நான் முதன் முதலாக அவளுக்கு கொடுக்கும் தங்கத்திலான பரிசு இது. இதை பெரியவங்க நீங்க ரெண்டு பேரும் என் சார்பில் அவளுக்கு கொடுத்தா உங்க ஆசீர்வாதத்தால எங்க சொந்தம் மேலும் வளரும்னு எனக்குத் தோணுச்சு பாட்டி அதான்."

பேரன் சொல்லிய வார்த்தைகளின் பொருளைப் புரிந்து கொண்ட அலமேலம்மாள் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

"உன் பாட்டி சரியான லூசுடா கண்ணா. இந்த நேரத்தில் கண்ணீர் விடுகிறார் பார். முதலில் கண்ணைத் துடைடி" என்று கோபத்துடன் அதட்டினார் திருப்பதி.

"இல்லைங்க. என் பேரன் சொன்னதை கேட்டீங்களா? வினிக்கும் அவனுக்கும் உள்ள சொந்தம் வளருமாமில்ல. என் ராசா உங்க ரெண்டு பேருக்கும் நடுவில சொந்தம் இனிமேல் தான் வளரணுமா? வினயா இந்த மண்ணுல பிறந்த நிமிசத்துல இருந்தே உங்க சொந்தம் வளர ஆரம்பிச்சிருப்பா. உங்கள் இருவரின் சொந்தமும்

இந்த ஜென்மத்தில் மட்டுமில்ல ஏழேழு ஜென்மத்துக்கும் தொடர்ந்து வரும்யா? ஏன்னா என் பேத்தி உன்மேல வைச்சிருக்கிற அன்பு அப்பேர்ப்பட்ட மகத்துவமானது. அதுக்கு விவரம் தெரிஞ்ச நாள்ள இருந்து அது மனசில நீ மட்டும்தான்யா இருக்க. பெத்தவங்க கூட உனக்கு அப்புறம் தான் அதுக்கு. வினயாவின் அன்பு ஒன்றே போதும் உங்க சொந்தம் காலத்துக்கும் நிலைச்சு இருக்கிறதுக்கு. நீ முதன் முதலாக வாங்கி கொடுக்கிற நகையை உன் கையாலேயே அதுக்கு போட்டு விடு ராசா. அப்பத்தான் அது மனசு குளிரும்'' என்றவாறு கண்ணனின் கைகளில் வளையல்களைத் தந்தாள் அலமேலம்மாள்.

தன் உயிராகத் தான் நினைத்த கண்ணனே புரிந்து கொள்ளாத தன் காதலை முழுமையாகப் புரிந்துவைத்து இருந்த அலமேலம்மாளுவை கட்டி அணைத்த வினயாவின் உடல் குலுங்கியது.

''சீச்சீ. என்னடா இது? என் செல்லமில்லையா? இந்த நல்ல நேரத்தில் நீ அழலாமா? இனிமேல் உன் கண்ணுல கண்ணீரே வரக்கூடாது? அதுதான் அத்தான் உன்னை புரிஞ்சுக்கிட்டாங்கள்ள? கண்ணைத் துடைத்து விட்டு அத்தானிடம் வளையல்களைப் போட்டுக் கொள். என்ன ராசா பார்த்துக்கிட்டே நிக்கிற? அதப்போட்டுவிடு'' என்று அதட்டிய அலமேலம்மாள் பேத்தி அறியாவண்ணம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நீட்டிய கண்ணனின் கைகளில் தன் கரத்தைக் கொடுத்த வினயாவின் உள்ளம் மகிழ்ச்சியில் பூரித்தது.



தன் அத்தான் தனக்கு அணிவிப்பது வெறும் வளையல் மட்டுமல்ல அவனது உள்ளம் என்று எண்ணிய அவள் தன் வாழ்நாள் முழுவதும் இந்த வளையல்களை பொக்கிஷம் போல் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளத்தில் உறுதிமொழி எடுத்துக் கொண்டாள்.

''சரி பாட்டி நான் வீட்டுக்குக் கிளம்பறேன். அம்மா வந்தா அவங்களை வரச்சொல்லிடுங்க.''

''ஏண்டா கண்ணு அதுக்குள்ள கிளம்பற. அம்மா வரவும் சேர்ந்து போகலாம் இரு.''

''இல்ல பாட்டி படிக்க வேண்டியது நிறைய இருக்குது. அதோட அப்பாவும் வந்துவாங்களா நான் கிளம்பறேன்.''

''இரு வினி. இருட்டிருச்சில்ல. நானும் கூடவந்து உன்னை வீட்டுல விட்டுட்டு வர்றேந்'' என்றபடியே தானும் அவளும் கிளம்பினான் கண்ணன்.

## 28

காம்பவுண்டு சுவர் தாண்டும் வரை இருவருமே அமைதியாக நடந்து கொண்டு இருந்தனர். இருவரின் மனதுமே இருவேறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தது.

''வினி...'' கண்ணனின் குரல் உறுதியுடன் வினயாவை அழைத்தது.

''சொல்லுங்கத்தான்.''

''நான் நாளைக்குச் சென்னைக்குப் போறேன்.''

''என்னத்தான் இது? இப்பத்தான் ஊரிலிருந்து வந்தீங்க? அதுக்குள்ள திரும்பவும் ஊருக்குப் போகணுமா.''

''நான் சொல்றதை முழுசாக் கேளு வினி. இதுவரை உன் அத்தான் வெட்டியாக இருந்தது போதும். நாளைக்கு நான் சென்னைக்குப் போறதே சொந்தமாக ஒரு தொழில் தொடங்கும் விசயமாகத்தான். அதனால மறுத்து எதுவும் சொல்லிவிடாதே.''

''மறுப்பெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் நமக்கிருக்கும் தொழிலைத் தனியாக பார்க்க முடியாமல் மாமா சிரமப்படுறாங்க. இதிலே நீங்க இன்னொரு தொழிலை வேறு தொடங்கணுமான்னு யோசனையா இருக்கு. அதான்...''

''உன் மாமா பார்க்கும் தொழில்கள் எல்லாம் அவர் சுயமாக உருவாக்கியது. அதன் மூலம் அவர் அவருடைய பொண்டாட்டி பிள்ளைகளை நல்ல முறையில் வாழவைத்தார். நான் சம்பாதித்து என் பொண்டாட்டியை நல்லா வைச்சுக்க வேண்டாமா? நாளைக்கு என் பிள்ளைக்கு நானும் கொஞ்சமாவது சொத்து சேர்த்து வைக்க வேண்டாமா? அதுமட்டுமில்ல வினி, இனி மேல் உனக்கு ஒரு பூ வாங்கிக் கொடுத்தாலும் அது என் சொந்த உழைப்பில் வந்த காசில்தான் வாங்க வேண்டும் என்பது தான் என் விருப்பம்.'

''நீங்கள் நினைப்பது செய்வது என்று எல்லாமே நமது எதிர்கால வாழ்க்கையைத் தானே அத்தான். இனி நான் தடுக்க மாட்டேன். நீங்க நல்லபடியாப் போயிட்டு வாங்க.''



''சரி வினி, வீடு வந்துருச்சு. நீ உள்ளே போ. நான் இப்படியே கிளம்பறேன்'' என்றவாறு திரும்பியவன் வீட்டின் உள்ளே சோபாவில் சட்டமாக கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்த ரூபனைப் பார்த்துப் புருவத்தை உயர்த்தினான்.''

''இவன் எதுக்கு இந்நேரத்தில் இங்க வந்திருக்கான்.''

''அதுக்கு நேரம் காலமெல்லாம் தெரியாது அத்தான். சரியான அறுவை கேஸ். இப்ப பார்த்து அம்மா அப்பா ரெண்டு பேருமே வீட்டில் இல்லையே.''

''சரி வா அத்தை வரும் வரை நான் இங்க இருந்துட்டு போறேன்.''

செருப்பை கழட்டி விட்டு இருவரும் சிரித்துப் பேசிய படியே வீட்டினுள் நுழைவதைப் பார்த்த ரூபனின் கண்களில் பொறாமை கொழுந்துவிட்டு எரிந்தது.

''இருட்டின நேரத்தில் வெளியே எங்க போன வினயா'' அதட்டலாக கேட்ட ரூபனைப் பார்வையால் அடக்கினான் கண்ணன்.

''பார்த்தால் தெரியலை. எங்க வீட்டுக்குத்தான் வந்திருந்தாள்.''

''அவ எங்க போனாள்னு சொன்னால்தான் தெரியும் அண்ணா. பார்த்தால் தெரியாது'' நக்கலாக வெளி வந்தது ரூபனின் குரல்.

''சொல்ல வேண்டியவங்களுக்குச் சொல்வாள்'' அமைதியாக பதிலளித்த கண்ணன் ரூபனை என்றுமில்லாத கோபத்துடன் முறைத்துப் பார்ப்பதை வினயா வியப்புடன் பார்த்தாள். அவள் உள் மனம் இருவருக்கும்

இடையில் விரும்பத்தகாத என்னவோ ஒன்று நடந்துள்ளது என்று எச்சரித்தது. அவள் கண்ணனின் கைகளைப் பற்றி மெதுவாக அழுத்தி சோபாவில் அமரச்செய்து அருகில் அமர்ந்து கொண்டாள். அவளின் இந்த செய்கையினால் ரூபனின் கண்களில் தெரிந்த பொறாமைத் தீ மேலும் கொழுந்து விட்டெரிந்தது. அவன் வினயாவை உறுத்துப் பார்த்தபடி அமர்ந்திருந் தான்.

''வாப்பா ரூபா எப்ப வந்த. ஏன்டா வினயா நான்தான் வந்துருவேன்ல? அதுக்குள்ள ஏன் கிளம்பி வந்துட்ட'' என்று கேட்டவாறே உள்ளே வந்த பாரிஜாதம் மகளின் நெற்றியில் குங்குமத்தை பூசிவிட்டு மருமகன்கள் இருவரிடமும் நீட்டினாள். நீட்டிய கைகளிலிருந்த குங்குமத்தை கண்ணன் மட்டும் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டான்.

''ஏன்ப்பா ரூபா. சாமி பிரசாதம் எடுத்து நெற்றியில் வைத்துக் கொள்.''

''இருக்கட்டும் அத்தை.''

''சரிவிடு. நீ எப்ப வந்த?''

நான் எப்பவோ வந்துட்டேன் அத்தை. ஆனால் வீட்டில் தான் ஒருவரும் இல்லை.''

''இல்லப்பா அண்ணன் வீடு வரைக்கும் போயிட்டு வரலாம்னு போயிருந்தேன். அண்ணி கோயிலுக்குக் கூப்பிட்டாங்க அதான் சேர்ந்து போயிட்டு வர்ரேன்.''

''எங்க வீடும் கூட உங்களுக்கு அண்ணன் வீடு தானே அத்தை?'' ரூபனின் குரலைக் கேட்ட



பாரிஜாதத்தின் மனதில் எச்சரிக்கை மணி ஒலித்தது. அவள் ஒன்றும் சொல்லாமல் புன்னகைத்தாள். ஒரு ஜமீன்தாரைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட ஜமீன் தாரினி அவள். அவள் முன் நின்று பேசும் யாரையும் ஒரு கணத்தில் எடைபோட்டு விடும் புத்திசாலி அவள். வீடும், கணவரும், குழந்தையுமே உலகமாய் வாழ்ந் தாலும், வீட்டிலிருந்துக் கொண்டே பாக்டரியிலும், ஹோட்டலிலும், தோட்டத்திலும் வேலை பார்க்கும் அனைவரின் குண இயல்புகளையும் அறிந்து கொண்டு, அனைவரைப் பற்றிய விவரங்களையும் விரல் நுனியில் வைத்திருக்கும் மனைவியின் புத்திசாலித்தனத்தில் ஹரிசந்தரே வியந்து போவார். யாரை எந்த வேலையில் வைக்க வேண்டும். எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று அவளிடம் கேட்காமல் அவர் முடிவெடுக்க மாட்டார். பாரிஜாதம் எதுவும் பேசாமல் புன்னகைத்தாள் என்றால் அதன் பின்னால் ஓராயிரம் அர்த்தம் புதைந் திருக்கும் என்பதை உணர்ந்திருந்தும் வினயாவின் கைகள் பயத்தில் சில்லிட்டது.

''என்னத்தை நான் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதிலே சொல்லவில்லை? பதில் சொல்ல முடியவில்லையா?'' அத்தையின் குண இயல்புகளைப் புரிந்து கொள்ளாத ரூபன் நக்கலுடன் கேள்வி கேட்டான்.

அதற்கு பதில் சொல்லாத பாரிஜாதத்தின் பார்வை வினயாவை கண்டிப்புடன் பார்த்தது.

''படிக்கணுன்னு தானே வீட்டுக்குச் சீக்கிரம் திரும்பி வந்த? உன் ரூமுக்குப் போயி படிக்கிற வேலையைப் பார் வினயா.''

பதில் சொல்லாமல் ரூமிற்கு விரைந்தாள் வினயா. பாரிஜாதத்தின் குணத்தினை நன்கு அறிந்து வைத்திருந்த கண்ணனோ வாயைத் திறக்கவே இல்லை. அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

''என்னத்தை நீங்கள் இன்னும் என்...''

''கேள்விக்கு பதில்தானே ரூபா. சொல்கிறேன் இரு'' அதட்டலாக வெளிவந்த ரூபனின் குரலை இடைமறித்து பாரிஜாதத்தின் அமைதியாக குரல்.

''அப்படியென்ன பதில் சொல்ல முடியாத கேள்வியை நீ கேட்டுவிட்டாய். எனக்கு உங்க வீடும் அண்ணன் வீடு தான்றது நீ சொல்லித்தான் தெரியணும்னு அவசியமில்லை.''

''பின்னே ஏன் நீங்க எங்க வீட்டுக்க ஒருமுறை கூட வினயாவைக் கூட்டிட்டு வரலை?''

''என் மகளை எங்கே எப்படிக் கூப்பிட்டுக் கொண்டு போகணும் என்று எனக்குத் தெரியும் ரூபா. அதை நீ எனக்குச் சொல்லித்தரத் தேவையில்லை.

''அப்படி தேவையில்லைன்னு சொல்றவங்க எல்லோரையும் தேவையில்லைன்னு இல்ல நினைக்கணும்.''

''யாரை எப்படி நினைக்கணும்னு நீ சொல்லித் தெரிஞ்சுக்க வேண்டிய நிலைமையில இந்த பாரிஜாதம் இல்லை ரூபா. யாரிடம் பேசறோம்னு நினைவில் வைத்துக் கொண்டு வார்த்தைகளை வெளிவிடு. நான் உன் அத்தை.''



''எனக்கும் அத்தைன்னு தான் இதுவரை நினைச்சிருந்தேன். ஆனா நீங்கதான் ஓரவஞ்சனை பண்றீங்க. என்னை உங்க மருமகனா என்னைக்காவது நினைச்சிருக்கீங்களா?''

''உன்னையும் என் அண்ணனை விடப் பாசத்துடன் வளர்த்தவள்ப்பா இந்த அத்தை. எனக்கு யாரையும் வஞ்சனை செய்து பழக்கமில்லை. அந்த குணம் என் பரம்பரைக்கே கிடையாது'' ஒரு ராணியின் நிமிர்வுடன் வந்தது பாரிஜாதத்தின் குரல்.

''அப்படி வஞ்சனை பண்ணாதவங்க தான் இரண்டு மருமகன்களிடையே வித்தியாசம் பார்க்கறீங்களா?''

''மறுபடியும் சொல்கிறேன் ரூபா. எனக்கு என் இரண்டு அண்ணன் மகன்களுமே ஒன்றுதான்.''

''இப்பக்கூட என்னை அண்ணன் மகன்னுதான் சொல்றீங்களே ஒழிய, மருமகன்னு சொல்ல மாட்டேங்கறீங்க பார்த்தீங்களா?'' பிடிவாதமாகக் கேட்டான் ரூபன்.

''ரூபா இதுவரை நீ பேசியதை எல்லாம் சின்னப் பிள்ளை என்று தான் பொறுத்துக் கொண்டேன். ஆனால் இப்ப நீ பேசுறது சிறுபிள்ளைத் தனமாகத் தெரியல. மறுபடியும் சொல்றேன் வார்த்தையை அளந்து புரிந்து பேசு'' கண்டிப்புடன் சொன்னாள் பாரிஜாதம்.

''என்னைக் கண்டிக்கிற வேலையை எல்லாம் வெச்சுக்காதீங்க அத்தை. உங்க பேச்சுக்கெல்லாம் எங்க அப்பா தான் கட்டுப்படுவார். நானில்லை'' தெனாவெட்டாக பதில் சொல்லிய ரூபனைக் கையைப் பிடித்து எழுப்பி நிப்பாட்டினாள் பாரிஜாதம்.

"அப்போ போயி என் அண்ணனை வரச்சொல்லு. நான் அவரிடம் பேசிக்கிறேன். நீ கிளம்பு முதல்ல."

"என்னையா போகச் சொல்றீங்க...?"

"உன்னைத் தான் போகச் சொல்கிறேன். போ" என்றபடி வாசலை நோக்கிக் கைநீட்டிய பாரிஜாதத்தை முறைத்தவன் வேகமாக வெளியேறினான்.

"ஏதோ சின்னப்பிள்ளைத் தனமாய் உளறிவிட்டுப் போறான் அத்தை. நீங்க அவன் பேச்சை பெரிதாக எடுத்துக்க வேணாம்."

"இல்லை கண்ணா. இவன் பேச்சு சிறுபிள்ளை தனம் என்று எடுத்துக் கொள்ள முடியாத பேச்சு" யோசனையாய் அத்தையின் பேச்சுக்குத் தலையாட்டிய கண்ணன்,

"சரி அத்தை எதுவாக இருந்தாலும் அப்பாவும் மாமாவும் வந்த பின் பேசிக் கொள்ளலாம்."

"இல்லை கண்ணா வன் பேசியது அவர்கள் இருவருக்கும் தெரிய வேண்டாம். குடும்ப ஒற்றுமை கெட்டு விடும். நான் சின்ன அண்ணனிடம் பேசிக் கொள்கிறேன்."

"சரிங்கத்தை உங்களுக்கு எப்படித் தோன்றதோ அதன்படியே செய்யுங்க. நான் அப்பாவிடம் சொல்ல மாட்டேன். நான் கிளம்பட்டுமா அத்தை."

"சரி கண்ணா போயிட்டு வா..." என்றவள் எதுவும் தோன்றாமல் சோபாவிலேயே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.



# 29

கோபத்துடன் வீட்டிற்கு விரைந்த ரூபனின் கால்கள் நேராக அன்னையின் முன் சென்று நின்றது.

"அந்த பொம்பளை நம்ம வழிக்க வரவாட்டாம்மா."

"எந்தப் பொம்பளைடா."

"அதான்மா என் அத்தைக்காரிதான். என்ன திமிரா பேசுறா தெரியுமா?"

"அவ எவ்வளவு திமிர் பிடிச்சவள்னு எனக்கு தான் தெரியுமே ரூபா?"

"தெரிஞ்சும் நம்ம திட்டப்படி எல்லாம் நடக்கும் என்று எப்படிம்மா நம்பறீங்க?"

"ரூபா நம்ம திட்டப்படி நடந்து வினயா இந்த வீட்டுக்கு மருமகளா வந்தால் நல்லது. அப்படி நடக்கலைன்னா அந்த வீட்டுக்கும் அவ மருமகளா போகக் கூடாது. அது தான் என் எண்ணம்."

"ஆனா அந்தக் கண்ணன் அப்படியெல்லாம் விட்டுத் தர மாட்டான் போல இருக்கும்மா. நான் இன்னைக்கு காலைல போன் பண்ணி அவனுக்குப் பேசிப் பார்த்தேம்மா. அவன் எப்படித் தெனாவெட்டாப் பதில் சொன்னான் தெரியுமா?"

"அவனுக்கு எதுக்குடா நீ போன் பண்ணின. நான் தான் உங்க அப்பாவை விட்டே பேசச் சொல்லிக்கிறேன்னு சொல்லியிருந்தேன்ல. அதுக்குள்ள உனக்கு என்ன அவசரம்?"

"இல்லம்மா காலையில அந்த வினயா குரங்கு அவன் கிட்ட எப்படி பல்லைக் காட்டிட்டே டிபனை பரிமாறினாள் தெரியுமா? அவள் இனிமேல் சிரிக்கவே கூடாதுன்னு தான் நான் கண்ணனுக்குப் போன் பண்ணினேன்?"

"போன் பண்ணி அவனிடம் என்னத்தை சொல்லித் தொலைச்ச."

"இல்லம்மா அவன் லைனுக்கு வந்தவுடன் நான் அழுவது போல ஆக்சன் பண்ணினேன். அவன் உடனே எப்பவும் போல துடிக்கத்தான் செய்தான்..."

ரூபன் கூறியது உண்மை தான். வினயாவை கல்லூரியில இறக்கி விட்டுத் திரும்பிய கண்ணனுக்கு அவன் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவளின் அருகாமைக்காக ஏங்கிய அவன் மறுபடியும் வினயாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் காரை திருப்ப முயன்ற போது தான் அவன் செல்போன் ஒலித்தது.

காரை ஓரமாக நிறுத்திய கண்ணன் செல்போனை ஆன் செய்து காதில் வைத்தான்.

"சொல்லு ரூபா. இப்பத்தானடா பார்த்தோம். அதுக்குள்ள என்ன பேசணும்னு போன் பண்ணின?"

"அண்ணா, உன்னிடம் நான் பேசக்கூடாதா. மத்தவங்களைப் போல நீயும் என்னை ஒதுக்கப் பார்க்கிறாயா?" போனில் கேட்ட ரூபனின் அழுகுரலில் ஆடிப்போய் விட்டான் கண்ணன்.



"டேய் என்னடா ஆச்சு? ஏன் இப்படி அழுகிற மாதிரி பேசற?"

"அழுகிற மாதிரி இல்லண்ணா. அழுதுக்கிட்டுத்தான் பேசறேன்."

"டேய் முட்டாள். நீ எதுக்காகடா அழணும். முதல்ல அதுக்கான காரணத்தைச் சொல்லு."

"நான் முட்டாள் தாண்ணா. இல்லைன்னா எல்லோர் பேச்சையும் உண்மைன்னு நம்புவேனா?"

"யார் பேச்சைடா சொல்ற?"

"வேற யாரு வினயாவைத் தான் சொல்றேன்" வினயாவின் பேரைக் கேட்டவுடன் கண்ணனின் உள்ளம் விழித்துக் கொண்டது.

"சொல்றதை உருப்படியாகப் புரியுற மாதிரி சொல்றியா?"

"புரியுறதுக்கு என்னண்ணா இருக்கு. இந்த மூணு வருஷமா என்னை விரும்புகிறவள் போல நடித்தவள் உன்னைப் பார்த்ததும் அப்படியே மாறிட்டாளே அண்ணா? காலையில் இருந்து என்னைப் பார்த்துப் பேசக்கூட மாட்டேன் என்கிறாளே? அதைத்தான் என்னால தாங்க முடியல."

"ரூபா... பேச்சை நிறுத்து முதலில். நீ யாரை வேண்டுமானாலும் சொல்லு. நான் நம்புறேன். ஆனா வினியை பற்றி மட்டும் தவறாகப் பேசாதே."

"நான் ஏண்ணா பேசக்கூடாது? அவ என்கிட்ட நடந்துகிட்டதைத் தானே சொல்கிறேன்."

''பேச்சை நிறுத்து ரூபா... என் வினியை பற்றி எனக்கு தெரியும்.''

''உனக்கு என்ன தெரியும்? உன்னை விட அவளைப் பற்றி அதிகமாக எனக்குத் தெரியும். நான் சொல்லவா?''

ஏளனமாகக் கேட்ட ரூபனின் குரல் கண்ணனின் கோபத்தை மேலும் அதிகரித்தது.

''வாயை மூடுடா முதலில். நேரில் வந்தேன்னா அடிச்சுப் பல்லைப் பேத்துடுவேன். யாருகிட்ட எப்படிப் பேசறதுன்னுக் கூடத் தெரியாதா உனக்கு?''

''அண்ணா என்னண்ணா நீயா. அவளுக்கு ஏத்துக் கிட்டு என்னைய திட்டுற.''

''வேணாம் ரூபா நடிக்காதே? உன்னைப் போய் நான் எவ்வளவு நம்பினேன்? உன்மேல உயிரையே வெச்சு இருந்தேனேடா. நீ எப்படி இவ்வளவு மோசமானவனா மாறினே?''

''என்னைப் பார்த்தாண்ணா அப்படிச் சொல்ற? உன்னையும் அவ மாத்திட்டாளா?''

''வேணாம் ரூபா. இதுக்கு மேல ஒரு வார்த்தை கூட நீ என்னிடம் பேச வேண்டாம். என் வினியைப் பற்றி எனக்குத் தெரியும். அவ சொக்கத் தங்கம்டா. அப்புறம் வினயாவை இனிமேல் நீ அவள் இவள்னு பேசாதே. அவ நான் கல்யாணம் பண்ணிக்கப் போகும் பெண்.''

''கல்யாணம் பண்ற அளவுக்கு அவளை நீ நம்பறியா? என்மேல உனக்கு அந்த அளவு கூட நம்பிக்கை யில்லையா?''



''இல்லை என் நம்பிக்கையை நீ இழந்துட்டே. அதோட வினயாவை நான் என்னைப் படைச்ச ஆண்டவனை விட ஒரு படி மேலாகவே நம்புவேன். நீ போனை வையி'' கோபமாக போனைக் கட் பண்ணிய கண்ணன் உன்மத்தம் பிடித்தவனைப் போல காரை மதுரையை நோக்கி விரட்டினான். அவன் உள்ளத்தில் எண்ண அலைகள் புயலைப் போலச் சுற்றி சுழன்று அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

வினயாவின் மேல் கண்ணனுக்கு இருந்த நம்பிக்கை எள்ளளவும் குறையவில்லை. ஆனாலும் அவன் மேல் வினயாவுக்கு காதல் இருக்கின்றதா இல்லையா என்பதை அவள் வாயாலேயே சொல்லி கேட்கும் வரை தன் மனம் சமாதானமாகாது என்று அவனுக்கு தெளி வாகத் தெரிந்துவிட்டது. இதற்கு மேலும் இந்தப் பிரச்சனையைத் தள்ளிப்போட்டால் அது தங்கள் எதிர்கால வாழ்வையே அழித்துவிடும் என்பதை அவன் உள்ளம் உணர்ந்து கொண்டது. அதன் காரணமாகவே கண்ணன் அன்று மாலையே வினயாவிடம் அவள் காதலைக் கேட்டுத் தன் காதல் மனதையும் அவளுக்குப் புரிய வைத்து விட்டான். கண்ணனின் காதலுக்கு மறைமுகமாகத் தானே உதவிவிட்டதை அறியாமல் தன் அன்னையிடம் நடந்ததைக் கூறிக்கொண்டிருந்தான் ரூபன்.

''சரிடா அவன் தான் துடிச்சான்னு சொல்றியே? அப்ப அவன் நீ சொன்னதை நம்பிட்டானா?''

''அது தான் இல்லம்மா. அவன் வினயாவை உண்மையிலேயே விரும்புறான் போலத் தெரியுது.

சின்ன வயசிலிருந்து நான் என்ன சொன்னாலும் நம்பிக்கிட்டு எல்லாத்தையும் விட்டுக் கொடுத்தவன் இந்த வினயாக் குரங்கு விஷயத்தை மட்டும் நம்ப மாட்டேன்னுட்டான். அத்தோட இனிமேல் அவனிடம் பேசவும் கூடாதுன்னு சொல்லிட்டான்.

"சரி சரி விடு ரூபா. அவனிடம் பேசாவிட்டால் உனக்கு என்ன நட்டம் வந்துடப் போகுது. இனிமேல் நீ எதுவும் யாரிடமும் பேசவேண்டாம். உன் அப்பா வரட்டும். அவரிடம் நான் பேசுற பேச்சில அந்த மனுஷன் தங்கச்சியிடம் போய் நிக்கப் போறார் பாரு'' என்று மகனை சமாதானப்படுத்திய வேதவல்லியின் உள்ளம் கணவனிடம் பேச வேண்டியதை உருப்போட ஆரம்பித்தது.

## 30

''வேதவல்லி, வேதவல்லி'' மனைவியை உரக்க அழைத்தபடியே பங்களாவிற்குள் நுழைந்தார் பலராமன்.

அவர் அப்படி உரக்கக் கூப்பிட்டதற்கும் காரணம் இருக்கிறது. மாலை ஏழு மணிக்கே வயிறு முட்டும் அளவிற்கு டிபன் வகைகளை உள்ளே தள்ளிவிட்டு உறங்கச்சென்று விடுவாள் வேதவல்லி. கணவன் வந்து காட்டுக் கத்தல் கத்தினாலும் மெல்ல மெதுவாக எழுந்து அசைந்து அசைந்து அவள் ஹாலுக்கு வரவே அரைமணி நேரமாவது ஆகும்.

'''ஐயய்ய. இந்த வீட்டுல பகலெல்லாம் உழைச்சு ஓடாத் தேஞ்ச மனுசி, தலைவலின்னு கொஞ்ச நேரம்



தலையை சாய்க்க முடியுதா? இப்பத்தான வந்தீங்க? அதுக்குள்ள எதுக்கு இப்படிப் கூப்பாடு போடுறீங்க?'' என்று பலராமனை ஒரு நிமிடம் கத்தித் தீர்த்தால் தான் வேதவல்லியின் மனம் ஆறும்.

''வேத...'' மறுபடியும் குரல் கொடுக்கப்போன பலராமன் வியப்பினால் வாயை மூடிக்கொண்டார். ஏனெனில் அவரின் தர்மபத்தினி கூப்பிட்ட குரலுக்குக் கையில் தண்ணீர் செம்பை வேறு எடுத்துக்கொண்டு வந்து அவர்முன் நின்று அவரிடம் செம்பை நீட்டினாள்.

என்னடா இது! உலகம் எதுவும் நாளைக்கே அழியப் போகுதா? அப்படியே அழிஞ்சாலும் கூட இவ இப்படி மாற மாட்டாளே? உள்ளத்தில் நினைப்பதை எல்லாம் வெளியில் சொல்லும் வரம் வாங்கியிராத பலராமன் பரிதாபமாக அவளை ஏறிட்டார்.

''ஹி... ஹி... தலைவலின்னு எதுவும் சும்மாப் படுத்திருந்தியோன்னு நினைச்சேன்.''

''தலைவலி தாங்க. ஆனா தலையைச் சாய்க்கக் கூட தோணாமல் பைத்தியம் பிடிச்சதுபோல வருது.''

''உனக்குப் பைத்தியம் பிடிக்க வைக்க இந்த உலகத்துலயே யாராலயும் முடியாதே. அப்படி ஒரு புண்ணியவான் இருந்தால் அவனுக்கும் கோயில் கட்டிக் கும்புட்டுற மாட்டேன்'' மனதில் எண்ணிக்கொண்ட பலராமன் வெளியில்,

''ஏம்மா? என்ன ஆச்சு? யாராச்சும் உன்னை மனசு வருத்தப்படும்படி ஏதாச்சும் சொல்லிட்டாங்களா?'' தன் மனைவிக்கு மனசு என்ற ஒன்று இருக்கின்றதா என்ற சந்தேகத்தை மறைத்துக் கொண்டு கேட்டார்.

''காலம் போன கடைசியில என் மனசு வருத்தப் பட்டா என்ன? படாவிட்டால் என்ன?'' சலிப்புடன் கூறினாள் வேதவல்லி.

'அப்பாடா, கடைசியில என் பெண்டாட்டிக்கும் மனசுன்னு ஒண்ணை ஆண்டவன் படைச்சுத்தான் இருக்கான். பயபுள்ள அதைப் பயன்படுத்தத் தான் மாட்டேன் என்கிறாள் போல' ஆசுவாசமாக நெஞ்சை நீவிக்கொண்ட பலராமன் மெதுவாக சோபாவில் அமர்ந்தார்.

''என்ன உட்கார்ந்துட்டீங்க?''

''ஏம்மா? நம்ம வீட்டு சோபாவிலே தானே நான் உட்கார்ந்தேன்'' தவறேதும் செய்து விட்டோமோ என்று பரபரப்புடன் வினவினார் பலராமன்.

அவர் பயம் அவருக்கு. என்றும் இல்லாத திருநாளாய் அமைதியாய் இருக்கும் வேதவல்லி. வேதாளம் முருங்கைமரம் ஏறுவதைப்போல ஏறிவிட்டால் அவளைச் சமாளிக்க வேண்டுமே என்று கவலைப்பட்டார் அவர்.

''இல்லீங்க. நாளெல்லாம் உழைச்சுக் களைச்சுப் போயி வந்திருக்கீங்க. போய் கை, கால் கழுவிட்டு வந்தால் சூடா டிபன் சாப்பிட்டுட்டு படுக்கப் போவீங்களல்ல? அதான்...''

''சூடா டிபனா! அதுவும் நம்ம வீட்டிலா! அதுவும் என் பொண்டாட்டி பக்கத்துல நின்னு அவளே பரிமாறப் போறாளா!'' அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியால் பலராமனுக்கு நெஞ்சு லேசாக வலிப்பதை போல இருந்தது.



'இதுக்கு மேல தாங்க முடியாது சாமி' தப்பிேனேன் பிழைத்தேன் என்று வேகமாக ரூமிற்குள் நுழைந்த பலராமன் தன் கையை நன்றாகக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார். கிள்ளிய இடத்தில் தோன்றிய வலி இது கனவல்ல நிசம்தான் என்று அவருக்கு உணர்த்தியது. நிம்மதியுடனும், ஆச்சரியத்துடனும் குளியல் அறைக்குள் நுழைந்தார் பலராமன்.

''இன்னும் கொஞ்சம் சாம்பார் ஊத்தட்டுமா?'' பாசமாகக் கேட்ட மனைவியை நிமிர்ந்து பார்த்தார் பலராமன். ஆனந்தக் கண்ணீரால் அவர் சட்டையில் பாதி நனைந்தே விட்டது.

''ஏங்க...? என்னாச்சு? சட்டினியில் காரம் அதிகமாப் போட்டுட்டாளா இந்த சமையல்காரி? அவளை...'' பல்லைக் கடித்தபடி திரும்பிய வேதவல்லியைப் பார்த்த சமையல்காரி அம்புஜம் சுவரோடு சுவராக பல்லியைப் போல ஒட்டிக்கொண்டே பார்வையால் பலராமனை கெஞ்சினாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லை வேதவல்லி. இன்னிக்கு டிபன் சூப்பராத்தான் இருக்கு. எனக்குத்தான் கண்ணுல ஏதோ தூசு பட்டிருச்சி போல...'' பார்வையாலேயே சமையல்காரிக்குத் தைரியம் சொன்ன பலராமன் வேகமாக சாப்பிட்டு முடித்து எழுந்தார்.

''நான் வேணும்னா ஊதி விடட்டுமா'' மனைவி கேட்ட கேள்வியில் அரண்டு போனார் பலராமன். ஏனென்றால் தன் மனைவியின் வாயில் இருந்து வரும் காற்று பத்து சூறாவளிக்குச் சமம் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். இதற்கு அவர் காலம் முழுவதுமே கண்ணை மூடிக்கொண்டே வாழ்ந்துவிடுவாரே?

"இ... இ... இல்லை வேதவல்லி. இப்ப சரியாப் போயிருச்சு. அது சரி நீ சாப்பிட்டாயா?" அவள் சாப்பிட்ட மிச்சம் மீதியைதான் தனக்கு அவள் போட்டிருப்பாள் என்று தெரிந்தே கேட்டார் பலராமன். ஆயிரம் இருந் தாலும் கணவனுக்கும் கடமை என்ற ஒன்று உண் டல்லவா?

"சாப்பிடவே பிடிக்கலைங்க. ராத்திரியில வெறும் வயித்தோட படுக்கக் கூடாதேன்னு ஏதோ கொஞ்சமாச் சாப்பிட்டேன்."

எஜமானிக்காக நெய்யிலேயே வேகவைத்த தோசை களை ஊற்றி ஊற்றி வலித்த கைகளை பிடித்து விட்டுக் கொண்டிருந்த சமையல்காரி அம்புஜத்திற்கு மயக்கமே வந்துவிட்டது. அதற்கு மேல் அங்கு நிற்கும் தைரியம் இல்லாத அவள் சாப்பிடாமல் கூடத் தன் படுக்கையை தூக்கிக் கொண்டு மாடிக்கு ஓடினாள்.

அன்று தன் வீட்டில் நடந்த அதிசயங்களை எல்லாம் தாங்க முடியாத களைப்பில் படுக்கையில் விழுந்த கணவரின் அருகில் மெதுவாக கட்டிலில் அமர்ந்தால் வேதவல்லி.

"என்ன வேதவல்லி? உனக்கு இன்னிக்கு இன்னமும் தூக்கம் வரலியா?" அதிசயத்துடன் கேட்டார் பலராமன்.

"இன்னிக்குக் காலையில் நம் ரூபன் சொன்ன செய்தியைக் கேட்டதில் இருந்து எனக்கு மனசே சரியில்லை."

ரூபனின் பெயரைக் கேட்ட உடனே வேகமாகப் படுக்கையில் இருந்து எழுந்து உட்கார்ந்து விட்டார்



பலராமன். ஒரே செல்ல மகன் என்பதினால் ரூபனின் மேல் உயிரையே வைத்திருந்தார் அவர்.

"அப்படி ரூபன் என்னடி சொன்னான்?"

"உங்க தங்கச்சி அவ மகளுக்கு மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டாளாமே?"

"நல்ல விசயம்தானே? இதுல என்ன இருக்கு?"

"நல்ல விசயம்தாங்க. ஆனால் நம்ம வீட்டுலயும் மாப்பிள்ளை இருக்கிறானுல்ல. நம்ம மகன் ரூபனைத் தான் சொல்றேங்க."

ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தார் பலராமன். அதுவரை தன் பிள்ளைகள், அண்ணன் மகன், தங்கை மகள் என்று அனைவரையும் தன் பிள்ளைகளாக எண்ணி வந்த அவருக்கு, தன் மகன் ரூபன் வினயாவிற்கு முறை மாப்பிள்ளை என்ற எண்ணமே அன்றுதான் தோன் றியது.

"நீ சொல்றதும் சரிதான் வேதவல்லி. நான் இதைப் பத்தி நினைச்சே பார்த்ததில்லை."

'நீ எதுக்குய்யா நினைக்குற? உனக்கு இருக்கிற சொத்தையெல்லாம் செய்முறைங்கற பேர்ல உன் தங்கச்சிக்கு தாரை வார்க்கத்தானே உனக்குத் தெரியும்?' மனதிற்குள் பல்லைக் கடித்தாள் வேதவல்லி.

"இதுவரை நினைக்காட்டி என்னங்க? இப்பத்தான் நினைச்சுப் பாருங்களேன்? அதிலும் நம்ம ரூபன் வினயாச் செல்லத்தின் மேல உயிரையே வெச்சிருக் கான் போல. காலையில இந்த விசயத்தைச் சொல்லி விட்டு அவன் என் மடியில படுத்து அழுதிட்டான். ஒரு

ஆம்பளைப்பிள்ளை வாய்விட்டு அழற அளவுக்குப் போனான்னா வினயாச் செல்லத்தின் மேல அவன் எவ்வளவு பிரியம் வெச்சு இருக்கணும்?'' வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் வேதவல்லி.

''என்னது?... ரூபன் அழுதானா?''

''ஆமாங்க...''

''வினயாவை ரூபன் அவ்வளவு விரும்பறானா? எனக்கு இது இதுவரைக்கும் தெரியாமல் போச்சே?''

''இப்பத்தான் தெரிஞ்சிருச்சில்ல? சட்டுப்புட்டுன்னு உங்க தங்கச்சியப் பார்த்து பேசி முடிக்கிற வழியைப் பாருங்க..''

''எல்லாத்துக்கும் நல்ல நேரம் பொழுதுன்னு ஒண்ணு இருக்குல்ல. எடுத்தோம் கவுத்தோம்னு திடீர்னு எதையும் பேசி முடிவு பண்ணிர முடியுமா?''

''ஆமாம் நீங்க பையப் பதறாமல் பேசி முடிவு பண்றதுக்குள்ள உங்க தங்கச்சி வேற ஏதாவது ஒண்ணை நினைச்சு முடிவு பண்ணிறப் போறா. பாரிஜாதத்துக்கு நல்லது கெட்டது ஒண்ணும் தெரியாது? நம்மதான் அதுக்கு எடுத்துச் சொல்லிப் புரியவைக்கணும். கேட்கலேன்னா மிரட்டிக் கூட இந்தக் கல்யாணத்தை எப்படியாவது தயவு செஞ்சு நடத்திப்புடுங்க. ஏன் இவ்வளவு தூரம் சொல்றேன்னா... நம்ம ரூபன் வினயாவை எனக்குக் கட்டித்தரலேன்னா நான் செத்துப் போயிடுவேன்னு சொல்றாங்க...''

முந்தானையில் மூக்கைச் சிந்திவிட்டு முகத்தையும் பொத்திக்கொண்டு அழுவதைப் போல நடித்த வேதவல்லி ஓரக்கண்ணால் கணவரை பார்வை யிட்டாள்.



## 31

வேதவல்லி சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பலராமன் இதயம் துடிப்பதை ஒரு கணம் நிறுத்திக் கொண்டது.

''என்னடி சொல்ற? ரூபன் அப்படியா சொன்னான்?''

''ஆமாங்க. உங்க மகன் அப்படித்தான் சொல்றான். அவன் சொன்னதைக் கேட்டதுல இருந்து என் உயிரே என்கிட்ட இல்லை. ஒருவேளை உங்க தங்கச்சி நம்ம ரூபனுக்குப் பொண்ணு தர மாட்டேன்னு சொன்னா நம்ம பிள்ளை என்ன பண்ணப் போறானோன்னு நினைச்சா எனக்குக் குலையே நடுங்குது.''

''*சீச்சீ*... என் தங்கச்சி பாரிஜாதம் என் பேச்சை என்னிக்குமே மீறாது. நீ வேணும்னா பாரு.''

''அப்படிச் சொல்லாதீங்க. யாரு மனசுல என்ன இருக்கோ? காலையிலே கூட உங்க தங்கச்சி வேற யாரையோ மனசுல வெச்சுக்கிட்டு பேசுனதாத்தான் ரூபன் சொன்னான்.''

''ரூபன் சின்னப் பையன்டி. அவன் சொன்னதை எல்லாம் கேட்டு நாம பாரிஜாதத்தைச் சந்தேகப் படக் கூடாது.''

''இல்லைங்க. நான் சொல்றேன்னு நீங்க தப்பா நினைக்கக் கூடாது. உங்க தங்கச்சிக்கு உங்களை விட

உங்க அண்ணன் மேலத்தான் பாசம் அதிகம். அதனால அவ தன் பொண்ணை நம்ம கண்ணனுக்குக் குடுக்கணும்னு கூட நினைக்கலாம்.''

''அப்படிக் கொடுத்தாலும் நல்லதுதானே? அவனும் நம்ம பிள்ளைதானே?''

'ஐயோ ஐயோ... இந்த மனுசன் தலையில கல்லைத் தூக்கிப் போட்டு மண்டைய உடைச்சாலும் என் மனது ஆறாது' மனதிற்குள் மனாசீகமாகத் தன் தலையை உடைக்க ஆசைப்பட்ட மனைவியை அப்பாவியாக ஏறிட்டார் பலராமன்.

''அதெப்படிங்க? நம்ம ரூபன் உசிருக்கு உசிரா ஆசைப்பட்ட பொண்ணு அவனுக்கே அண்ணியா வந்தால் நம்பிள்ள மனசு என்ன பாடுபடும்? காலம் பூராவும் அவன் மனசு நொந்து வாழணுமா?''

''இதுவும் சரியாத்தான் இருக்கு.''

'கூறுகெட்ட மனுசா உனக்கு எல்லாமே சரியாத்தான் இருக்கும்.'

''அதனால தாங்க சொல்றேன். உங்க தங்கச்சி தன் பொண்ணைக் குடுத்தால் நம்ம ரூபனுக்குத் தரட்டும். இல்லேன்னா வெளியில யாராவது நல்ல மாப்பிள்ளையாப் பார்த்துக் கொடுக்கட்டும். நம்ம வினயாச் செல்லத்தோட அழகிற்கும், அறிவிற்கும் ஆயிரம் மாப்பிள்ளைகள் போட்டிப் போட்டுக்கிட்டு வரிசைல வந்த நிக்க மாட்டாங்களா? அதோட பாரிஜாதம் தன் பொண்ணுக்கு வரப்போற மாப்பிள்கைக்கு தங்கத் தட்டுலதான் சாப்பாடு போடுவேன்னு சொன்னாளாம். ம்ம்... யாருக்குக் கொடுத்து வெச்சிருக்கோ?''



வினயாவின் குணத்தையும் அழகையும் பிடிக்காத மனத்துடன் பட்டியலிட்டு கணவனின் மனதில் பதிய வைத்தாள் வேதவல்லி. தங்கத் தட்டில் சாப்பாடு என்பது பலராமனின் செல்வாக்குக்குப் பெரிதல்ல என்றாலும் அது மிகப்பெரிய மரியாதையின் அடையாளம் என்பது பலராமனுக்கு தெரியும். அந்த மரியாதை தன் மகனுக்குக் கிடைக்க வேண்டும் என்று அவர் தந்தை உள்ளம் ஆசைப்பட்டதில் ஆச்சரியம் இல்லை.

''அதுமட்டும் இல்லேங்க. தங்க ஊசின்னாலும் கண்ணுல குத்திக்க முடியுமா? நம்ம கண்ணன் வயசு என்ன? வினயாச் செல்லத்தின் வயசு என்ன? நம்மளே கூட நம்ம நீலாவதிக்கு இவ்வளவு வயசு வித்தியாசத்திலே மாப்பிள்ளை பார்ப்போமா? வினயாவும் நம்ம வீட்டுப் பொண்ணுதானேங்க. பெண் பாவம் பொல்லாதது. உங்க தங்கச்சி உங்க அண்ணன் மேல இருக்கிற பாசத்துல அப்படியொரு முடிவை எடுத்தாலும் நாமதான் எடுத்துச்சொல்லி பாரிஜாத்திற்குப் புரிய வைக்கணும். அவ பாவம் வெள்ளந்தி மனசுக்காரி.''

''பார்ப்போம் வேதவல்லி. நாளைக்கே நான் இதைப்பத்தி பாரிஜாதத்திடம் பேசி புரியவைக்கிறேன்.''

வெற்றிப் புன்னகையுடன் கணவரின் அருகே படுக்கையில் சரிந்தாள் வேதவல்லி. வெகுநாட்களுக்குப் பிறகு அருகில் வந்த மனைவியின் ஆசையில் மயங்கிப் போனார் பலராமன்.

''வாங்க சின்ன மாப்பிள்ளை. இவ்வளவு நேரமாச்சே இன்னும் உங்களைக் காணோமேன்னு இப்போதான் நினைச்சேன். நீங்களே வந்துட்டீங்க'' தோட்டத்திலுள்ள

செடிகளுக்குப் பைப்பின் மூலம் தண்ணீரைப் பீய்ச்சிக் கொண்டிருந்த ஹரிசந்தர் புன்னகையுடன் மாப்பிள்ளை பலராமனை வரவேற்றார்.

''எங்க அண்ணனுக்கு நூறு வயசு. நானும் இப்பதான் அவங்களை நினைச்சேன். உட்காருங்கண்ணா குடிக்க ஏதாச்சும் கொண்டு வர்றேன்'' கூறிக்கொண்டே நகரப் போன தங்கையைத் தடுத்தார் பலராமன்.

''ஒண்ணும் வேணாம்மா. இப்பத்தான் நம்ம வீட்டுல குடிச்சுட்டு வர்றேன். இப்படி வந்து உட்காரு. நான் உன்னிடமும் மாப்பிள்ளையிடமும் கொஞ்சம் பேசணும்.''

''இங்க ஈரமாய் இருக்குண்ணா. வாங்க உள்ள ஹால்ல போய் உட்கார்ந்து நிதானமாப் பேசலாம். ஏங்க, உங்களை அண்ணன் கூப்பிடுறாங்க பாருங்க'' கணவரை அழைத்துக்கொண்டே வீட்டிற்குள் வந்த பாரிஜாதத்தின் உள்ளம் அவளை எச்சரித்தது.

பொதுவாக வீட்டினர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்கு அழைத்தால் தவிர அந்த வீட்டின் வேலையாட்கள் யாரும் வரமாட்டார்கள். ஆனாலும் அந்தச் சமயத்தில் வெளியாட்கள் யாரும் வீட்டில் இருப்பதை விரும்பாத பாரிஜாதம் செவ்வந்தியை அழைத்தாள்.

''செவ்வந்தி மார்க்கெட்டிற்குப் போய்க் கொஞ்சம் காய்கறி வாங்கிட்டு வர்றியா?''

''காய்கறியெல்லாம் இருக்கும்மா. நேத்துத்தானே மார்க்கெட்டிற்குப் போய் வாங்கி வந்தேன்? மறந்துட்டீங்களா'' ஆச்சரியத்துடன் பாரிஜாதத்தின் முகத்தை



ஏறிட்ட செவ்வந்தி அவள் கண்களின் குறிப்பை நொடியில் அறிந்து கொண்டாள்.

''சரிங்கம்மா, நான் போயிட்டு வர்றேன். அப்படியே துணைக்கு மேவேலைக்கு இருக்கும் மாரிக்கண்ணுவையும், முனியனையும் கூட்டிட்டுப் போறேன். வர்றேங்கம்மா'' என்று உடனடியாக வீட்டை விட்டு வெளியேறினாள் செவ்வந்தி.

வழக்கம்போல செவ்வந்தியின் அறிவை மெச்சிய மனத்துடன், பாரிஜாதம் அண்ணனிடம் திரும்பினாள்.

''ஏண்ணா நின்னுக்கிட்டே இருக்கீங்க? சோபால உட்காருங்கண்ணா.''

''அப்படி என்ன முக்கியமான விஷயம் பேசப் போறீங்க?'' என்றவாறே பலராமனின் தோள் தொட்டுச் சோபாவில் அமரவைத்த ஹரிசந்தர் தானும் அவர் அருகில் அமர்ந்து கொண்டார்.

''முக்கியமான விஷயம் தான் மாப்பிள்ளை. ஆனால் அது என்ன விசயமுன்னு நீங்கதான் சொல்லணும்.''

''அப்படியென்ன முக்கியமான விசயத்தை உங்ககிட்ட சொல்லாம விட்டுட்டேன் அண்ணா? இதுவரை என் மூச்சுக் காத்து கூட உங்ககிட்ட சொல்லாம வெளி வந்தது இல்லையேண்ணா?''

''நானும் அப்படித்தான் நினைச்சு இறுமாப்புல இருந்தேன் பாரிஜாதம். ஆனால் இப்ப உங்க சின்ன அண்ணன் உனக்கு ரெண்டாம்பட்சமாயில்ல போயிட்டேன்?''

''மாப்பிள்ளை பெரிய பேச்செல்லாம் பேசாதீங்க உங்க தங்கச்சியால அதைத் தாங்க முடியாது. அவருக்கு

அவளோட ரெண்டு அண்ணன்களும் ரெண்டு கண்ணு மாதிரி.''

''சும்மா இருங்க மாப்பிள்ளை. என் மனசு ஆறவே மாட்டேங்குது. நம்ம வினயாக்குட்டிக்கு மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டீங்களாமே? அதுவும் இந்த விசயம் அண்ணனுக்கும் தெரியுமாமே? அப்படின்னா நான் மட்டும் உங்களுக்கு அந்நியனா போயிட்டேனா?''

''ஐயோ அண்ணா! நீங்க நினைப்பதுபோல நான் மாப்பிள்ளை பார்க்கவெல்லாம் இல்லைன்னா. நம்ம வீட்டுலயே மாப்பிள்ளை இருக்கும்போது நான் ஏன்னா வெளியில மாப்பிள்ளை தேடப்போறேன்? இத நான் பேச்சுவாக்குல நேத்து இங்க சாப்பிட வந்த பெரியண்ணன்கிட்ட சொன்னேன். அவரும் சம்மதம் சொன்னார். அவ்வளவுதான். இதையும் நான் நேத்து உங்களைப் பார்த்திருந்தா அப்பவே உங்ககிட்டச் சொல்லியிருப்பேன். நேத்துத்தான் நீங்க இங்க வரவே இல்லையே. இதுல என்மேல தப்பு ஏதாச்சும் இருந்துச்சுன்னா என்னை மன்னிச்சிக்கங்கண்ணா'' பாரிஜாதத்தின் விழிகளில் கண்ணீர் பெருகியது.

ஹாலில் பேச்சுக் குரல் கேட்டு ரூமில் இருந்த வெளியே வந்த வினயா அன்னையின் கண்களில் கண்ணீரைக் கண்டு திகைத்து நின்றாள். ஆனால் தங்கையின் கண்ணீரால் பாதிக்கப்படாதவராக அமர்ந்திருந்த சிறிய மாமாவின் தோற்றம் அவளுக்குப் புதிதாக இருந்தது.

''அதெல்லாம் சரிம்மா பாரிஜாதம். நீ சொல்ற காரணம் சரின்னே வெச்சுக்கிட்டாலும் பொருத்தமான



மாப்பிள்ளையை வெச்சிருக்கிற என்கிட்டத்தானே நீ முதலில் கேட்டிருக்கணும்?''

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் பாரிஜாதம். அவள் பார்வை மகளை ஒருமுறை பார்த்து மீண்டது.

''என்னண்ணா சொல்றீங்க? மூத்தவன் கண்ணன் இருக்கும் போது நான் எப்படி உங்களிடம் மாப்பிள்ளை கேட்க முடியும்?''

''இதைத்தான் நான் அப்பவே சொன்னேன். என்ன தான் பாசத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் நான் உனக்கு ரெண்டாம்பட்சம் தான் என்று.''

''அந்த வார்த்தையை மறுபடியும் சொல்லாதீங் கண்ணா. நானா உங்களை அப்படி நினைப்பேன்? ஆனால் அண்ணா நியாயம்னு ஒண்ணு இருக்கில்ல? உங்களுக்குத் தெரியாததா?''

''எல்லா நியாயமும் எனக்கும் தெரியும். கண்ணன் வயசென்ன? வினயாவின் வயசென்ன? அண்ணன் வீட்டுல பொண்ணைக் குடுக்கணும்னு நினைச்சால் எல்லா வகையிலும் பொருத்தமான ரூபனுக்குப் பொண்ணைக்குடு. இல்லையா வேற நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து வெளியில பொண்ணைக் குடு.''

''நீங்க ரெண்டு பேருமே இதோட பேச்சை நிறுத்தினால் நல்லது மாப்பிள்ளை. என் பொண்ணை யாருக்குக் கொடுக்கணும் என்பது எனக்குத் தெரியும். பாரிஜாதம் உங்க மேல வெச்சிருக்கிற பாசத்துக்காகத்தான் நான் இவ்வளவு நேரமும் பொறுமையா இருந்தேன்'' கோபத்துடன் கர்ஜித்தார் ஹரிசந்தர்.

''வேணாங்க. எனக்காக கொஞ்சம் பொறுமையா இருங்க. நான் அண்ணனிடம் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கிறேன்.''

''என்னத்தைம்மா புரிய வைக்கப் போற? நான் என்ன பச்சப் புள்ளையா? நீ எடுத்துச் சொன்னால் நான் புரிஞ்சுக்கிறதுக்கு? நான் சொன்னால் சொன்னதுதான். ஒண்ணு ரூபனுக்கு உன் பொண்ணைக்குடு. இல்லைன்னா வெளியில யாராவது நல்ல மாப்பிள்ளையா பார்த்து பொண்ணக்குடு அவ்வளவுதான்'' பிடிவாதமாகக் கூறினார் பலராமன்.

## 32

''யார் முன்னாடி நின்னுக்கிட்டு என்ன பேசறீங்கன்னு தெரிஞ்சுதான் பேசறீங்களா? ராஜா ஹரிசந்திர பிரகாஷ் முன்னாடி நின்னு பேசறோம்னு ஞாபகம் வச்சுக்கிட்டுப் பேசுங்க'' கண்கள் சிவக்க எச்சரித்தார் ஹரிசந்தர்.

''நீங்க யாருன்னு தெரியாமலா எங்க பொண்ணை உங்களுக்குக் கொடுத்திருக்கோம். இந்த மிரட்டலை எல்லாம் வேற யாருகிட்டயாவது வெச்சுக்கங்க மாப்பிள்ளை.''

''அண்ணா, வேண்டாண்ணா, என் பொண்ணோட வாழ்க்கையில விளையாடாதீங்க. உங்களைக் கை எடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன்'' கைகூப்பித் தொழுத தங்கையை ஏறிட்டும் பார்க்கவில்லை பலராமனின் கண்கள்.



''என்னிடம் ஏம்மா கும்பிட்டுக் கேட்டுக்கிறே? உன் புருஷன் ராஜா ஹரிசந்தரிடம் கேள். அவர்தான் அவர் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும்.''

''ஹரிசந்தருக்கு என்றும் ஒரு சொல். ஒரு நாக்கு. நான் வாக்குக் கொடுத்தால் கொடுத்ததுதான். அதை ஆண்டவனாலும் மாற்ற முடியாது.''

''நாங்களும் உங்களுக்குக் குறைந்த பரம்பரையில வரலேங்க. நானும் சொன்னால் சொன்னதுதான். என் மகனுக்கு உங்க மகளைத் தரலேன்னா நம்ம இரண்டு குடும்பத்துக்கும் இடையிலே சொந்தம் அறுந்துப் போச்சுன்னு நினைச்சுக்கங்க.''

''அண்ணா... என்ன வார்த்தைண்ணா சொல்லிட்...?'' மயங்கிச் சரிந்த பாரிஜாதத்தை ஓடி வந்து தாங்கிப் பிடித்துக் கொண்டார் ஹரிசந்தர். அவசரமாக தன் மடியினில் மனைவியைச் சாய்த்துக் கொண்டு அமர்ந்தவர் கோவத்துடன் நிமிர்ந்து சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த பலராமனைப் பார்வையாலேயே எரித்தார்.

''நீ எல்லாம் ஒரு அண்ணனா? கழுத்தை வெட்டிக் கொள்ளச் சொன்னாலும் கேள்வி கேட்காமல் வெட்டிக் கொள்ளும் தங்கையிடம் நீ காட்டும் பாசம் இதுதானா?'' வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டார் ஹரிசந்தர்.

''பெத்த பெண்ணை இந்த அண்ணனை நம்பி அவன் மகனுக்குக் கொடுக்காதவதான், உயிரைக் கொடுக்கப் போகிறாளாக்கும்? நீங்க வேறங்க! வசனமெல்லாம்

பேசிக்கிட்டு. நான் கேட்ட கேள்விக்குப் பதிலைச் சொல்லுங்க. நான் கிளம்பணும். எனக்கு வேலை நிறைய இருக்கு."

"என்ன பதில் வேணும்? கேளு."

"ஒண்ணு என் மகனுக்குக் கொடுங்க. இல்லை உங்க பொண்ணை வெளியில கொடுங்க. அங்க அண்ணன் வீட்டுல கொடுக்கக் கூடாது."

"அதைச் சொல்ல நீ யாரு? என் பொண்ணை யாருக்குக் கொடுக்கணும் என்பது என் இஷ்டம். நீயெல்லாம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

"அப்படின்னா உங்க குடும்பத்துக்கும் என் குடும்பத்துக்கும் இனிமேல் ஒட்டும் இல்லை. உறவும் இல்லை. எல்லாம் முடிஞ்சிருச்சி" கோபமாகக் கூறிவிட்டு நகர்ந்த பலராமனை வினயாவின் குரல் தடுத்து நிறுத்தியது.

"மாமா, ஒரு நிமிஷம் நில்லுங்க."

"இன்னும் எதுக்கும்மா நிக்கணும்? இந்த வீட்டில இனி எனக்கென்ன வேலை?"

"நீங்க கேட்க வந்த வார்த்தையைக் கேட்காமல் போறீங்களே? எங்க அம்மா இதுவரை உங்களை மனக் குறையோடு இந்த வீட்டில் இருந்து போகவிட்டதில்லையே?"

"வினயா நீ சும்மாயிரம்மா. நம்ம என்ன சொன்னாலும் இவர் மனம் ஆறாது. பேசாமல் இரு" தன்னை அடக்கிய தந்தையை நிமிர்ந்து பார்த்தாள் வினயா.

"இல்லப்பா. இப்ப நான் சொல்ற வார்த்தையில் மாமாவின் மனம் ஆறிவிடும்" என்றபடி பலராமனிடம்



திரும்பினாள் வியா. வினயாவின் பேச்சின் பொருளை உணர்ந்த ஹரிசந்தர் மனைவியைக் கீழே படுக்க வைத்துவிட்டு வேகமாக வினயாவின் அருகில் வந்தார்.

"வேண்டாம் வினயா. அவசரப்பட்டு எதையும் சொல்லிவிடாதே. உன் அம்மாவால் தாங்க முடியாது."

"இல்லப்பா. நாம இப்ப முடிவு எடுக்கலைன்னா அம்மாவை உயிரோடயே நம்மால பார்க்க முடியாது. ஏன்னா அவங்களுக்கு மாமா மேலே இருக்கிற பாசம் உங்களுக்கே நல்லாத் தெரியும். மாமா இரண்டு பேரோட அன்புதான் அவங்களோட உயிர்நாடி. அது கிடைக்கலேன்னா அவங்க நடைபிணம்ப்பா. எனக்கு என் அம்மாதான் எல்லாத்தை விடவும் முக்கியம்."

"அதுக்காக நீ உன் வாழ்வைப் பணயம் வைக்க நான் ஒருநாளும் சம்மதிக்க மாட்டேன். உன் அப்பாவின் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?"

"உங்களை நம்பாமல் நாங்கள் யாரைப்பா நம்புவோம்? ஆனால் இது நம் குடும்ப ஒற்றுமைக்காக நான் செய்வதுப்பா. எனக்கு இதுவும் முக்கியம்பா. என்னால இந்தக் குடும்பம் உடைவதைத் தாங்கிக்கிற சக்தி எனக்கும் இல்லப்பா."

"இங்க பாரும்மா வினயா. உங்க நாடகத்தைப் பார்க்க எனக்கு இப்ப நேரமில்லை. என்ன சொல்லணுமோ சட்டுப்புட்டுன்னு சொல்லு" துடைத்துவிட்டது போன்ற குரலுடன் உணர்ச்சியற்று ஒலித்தது பலராமனின் குரல்.

சிறுவயதிலிருந்தே தன்மீது பாசத்தைப் பொழிந்த மாமாவை கண்களில் நீர் வழிய வேதனையுடன்

பார்த்தாள் வினயா. 'தன் கண்ணில் ஒரு துளிக் கண்ணீரைப் பார்த்தாலும் அன்பினால் துடித்துப் போகும் மாமாவா இவர்! காலம்தான் மனிதர்களை எப்படி மாற்றிவிடுகிறது. ஆனால் அவரும், அவள் அன்னையும் என்றுமே அவரின் பாசத்துக்கும் கட்டுப்பட்டவர்கள் தான் என்பதை அவருக்குப் புரியவைக்க வேண்டும்' என்று எண்ணிக் கொண்ட வினயா கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறு நிமிர்ந்து பலராமனை உறுதியுடன் பார்த்தாள்.

''இப்ப உங்களுக்கு என்ன வேண்டும் மாமா.''

''எனக்கென்னம்மா வேணும். ஆண்டவனின் புண்ணியத்திலே ஒரு தலைமுறைக்கு வேணும்கிறது எல்லாம் என்னிடம் இருக்கு. உன் கல்யாணத்தைப் பத்தி என்ன முடிவை உங்க அம்மாவும், அப்பாவும் எடுத்திருக்கிறாங்கன்னு சொன்னா நான் போயிக்கிட்டே இருப்பேன்.''

''இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணமே கிடையாது மாமா.''

''வினயா, என் கண்ணே. என்னம்மா சொல்ற'' அலறினார் ஹரிசந்தர்.

''என்னம்மா விளையாடுற. சின்னப்பிள்ளைத் தனமாப் பேசாமல் வேற வேலை இருந்தால் போய்ப் பாரு.''

''இல்லை மாமா நான் சொல்வதன் முழு அர்த்தமும் புரிஞ்சுதான் சொல்றேன். இந்த ஜென்மத்துல எனக்குக் கல்யாணம் கிடையாது.''

''நீ கல்யாணம் பண்ணிக்காம நின்று அந்தப் பாவத்த நான் எங்கே போய்த் தொலைக்கம்மா? வெளிய



யாரையாச்சும் நல்ல மாப்பிள்ளையைப் பார்த்தும் பண்ணிவைங்கன்னுதான உங்க அப்பாகிட்டச் சொன்னேன். வேணாம்மா, இந்த மாதிரியெல்லாம் பேசாதே'' குற்ற உணர்ச்சியுடன் வெளிவந்தது பலராமனின் குரல்.

''இல்லை மாமா. ராஜா ஹரிசந்திர பிரகாஷ் வம்சத்தில வந்த நான் சொன்ன சொல்லை மாத்திக்க மாட்டேன். நான் சொன்னா சொன்னதுதான்.''

அவளை வெறித்துப் பார்த்த பலராமன் திரும்பித் தளர்ந்த நடையுடன் வெளியேறினார். தன் தங்கை மகள் வாழ்வை தானே குலைத்துவிட்டோமே என்ற குற்ற உணர்ச்சி அவரை வாட்டியது. தான் பெண் கேட்டுத் தங்கை மறுத்ததால் வந்த ஆத்திரத்தில் தான் அவர் பேசினாரே ஒழிய தங்கை மகளின் வாழ்வைப் பாழாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் இல்லை அவர். வீட்டிற்குள் நுழைந்த கணவரின் சோர்வடைந்த தோற்றத்திலேயே தனது வெற்றியை அறிந்துகொண்ட வேதவல்லி சத்தமில்லாமல் சமையலறையில் சென்று மறைந்து கொண்டாள். அதுசமயம் அவர் முன் சென்றால் என்ன விளைவுகளை அவள் சந்திக்க வேண்டும் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்.

## 33

அறைக்கதவைத் திறந்த வேகத்திலிருந்தே வந்தது யார் என்று தெரிந்துகொண்ட வினயா கண்களைத் திறக்காமலேயே அசையாமல் படுத்துக்கொண்டு இருந்தாள்.

அவளைக் கொன்றுவிடும் ஆவேசத்துடன் அறைக்குள் புயலாய் நுழைந்த கண்ணன் கிழிந்த நாராகக் கட்டிலில் கிடந்த அவளின் தோற்றத்தைக் கண்டு சிறிது ஆத்திரம் தணிந்தான்.

''மகாராணி தூங்கறீங்களா? உங்களுக்கு என்ன கவலை? நீங்க நிம்மதியாய் படுத்திருங்க. உயிரோட சாகிறதெல்லாம் நான்தானே?'' கண்ணனின் குத்தல் மொழிகளைக் கேட்ட வினயாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

''நான் பேசிக்கிட்டே இருக்கேன். மகாராணிக்குக் கண்ணைத் திறந்து பார்க்கக் கூடப் பிடிக்கலையா?''

''.....''

''என்னடி திமிரா? இவன் என்ன கேக்கறது நாம என்ன சொல்றதுன்ற ஆணவமா?''

''.....''

''நான் பேசிக்கிட்டே இருக்கேன்? நீ சட்டைபண்ணாம படுத்திருக்கிற? இப்ப எந்திருக்கப் போறயா இல்லையா? முதல்ல எழுந்திருடி?''

பிடிவாதமாக வினயாவைத் திருப்பிய கண்ணன் அவளைத் தூக்கி நிறுத்தினான். அவளின் கலைந்த தோற்றமும் அழுகையில் சிவந்து தடித்திருந்த கண்களும் அவன் மனதைப் பிசைந்தது.

எல்லாம் இவளா இழுத்துக்கிட்டது... கோபத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றிருந்தவனை நிமிர்ந்து பார்க்கவே வினயாவிற்குப் பயமாக இருந்தது.



''நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா? மகாராணி உங்க கல்யாணத்தை பத்தி நீங்களே முடிவு பண்ணிட்டீங்களா?''

''.....''

''உன் கல்யாணத்தைப் பத்தி முடிவெடுக்க நீ யாருடி? என் உயிரே நீங்கதான்னு அன்னிக்கு நீ சொன்னதெல்லாம் பொய்யா?''

அன்றைய நினைவில் கன்னம் சிவந்தவளைப் பார்த்து கண்ணனுக்கு அவளைக் கொன்றுவிடும் ஆவேசம் தோன்றியது.

''இதுக்கு நீ என்னைக் கொன்னிருக்கலாம் வினி. அது உன்னால முடியாதுன்னா செத்துருன்னு என்னிடம் கூடச் சொல்லியிருக்கலாமே. நானே செத்திருப்பேனே. நீயும் உன் இஷ்டப்படி இருந்திருக்கலாம். இப்படி என்னை நடைபிணமா, கையாலாகதவனா ஆக்கிட்டியே? உன்னால எப்படி முடிஞ்சது வினி இப்படி ஒரு முடிவெடுக்க'' தாங்க முடியாத சோகத்துடன் கட்டிலில் தொப்பென்று அமர்ந்த கண்ணனின் கால்களில் கதறிக்கொண்டே விழுந்தாள் வினயா.

''இப்படியெல்லாம் பேசி என்னைக் கொல்லாதீங்க அத்தான். நான் செஞ்சது எல்லாம் நம்ம குடும்ப ஒற்றுமைக்காகத்தான். எனக்கு இதைவிட்டா வேற வழி தெரியலே.''

''ஏன் வினி? என் நினைவே உனக்கு வரலியா? உன் கண்ணன் மேல உனக்கு நம்பிக்கையில்லையா? எல்லாத்தையும் நான் சரி பண்ண மாட்டேனா?''

''சின்ன மாமா யார் என்ன சொன்னாலும் கேட்கிற நிலமைல இல்ல அத்தான். அம்மா நெஞ்சைப் பிடிச்சுட்டு மயங்கி விழுந்துட்டாங்க. அந்த நிமிஷம் எனக்கு நம்ம குடும்பம் மொத்தமும் ஒத்துமையா நிம்மதியா இருக்கனும்ற ஒரே எண்ணம்தான் தோணுச்சு.''

''அதுக்காக நம்ம வாழ்க்கையை பணயம் வைப்பியா நீ?''

''நம்ம சொந்த வாழ்க்கையை விட குடும்பமும் அதன் ஒற்றுமையும் தான் முக்கியம் அத்தான்.''

''என் வாழ்வை பணயம் வைக்க நீ யாருடி.''

''நான், நான்தான் கல்யாணம் செஞ்சுக்க மாட்டேன்னு சொன்னேன். நீங்க வேற யாரையாச்சும் கல்யாணம் பண்ணிக்கலாம்'' நடுங்கும் குரலுடன் சொன்ன வினயாவின் தலைமுடியை பிடித்துக் கொத்தாகத் தூக்கி அவளை நிறுத்திய கண்ணன் அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறைவிட்டான்.

''ஏய்... இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசுன உன்னைக் கொலை பண்ணவும் தயங்கமாட்டேன். செய்யுறதையும் செஞ்சுட்டு என்ன தைரியமாய் பேசற. இனிமேல் என் மூஞ்சில கூட முழிக்காதே.''

''இல்லத்தான் நான் உங்க நல்...''

''வாயை மூடுடி. எனக்கு எது நல்லதுன்னு எனக்குத் தெரியும். வந்துட்டா பெரிசா அட்வைஸ் பண்றதுக்கு'' புயலாக வெளியேறி விட்டான் கண்ணன். சுவரோடு சுவராகச் சரிந்து அமர்ந்து முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டவள் தன்னையறியாமல் கதறினாள்.



தளர்ந்த நடையுடன் நடக்க முடியாமல் நடந்து வந்த திருப்பதியும், அலமேலம்மாளும் மகள் வீட்டிற்குள் நுழைந்தனர்.

''நான் பெத்த மகளே. இப்படிக் கிழிஞ்ச நாராக் கிடக்கிறாயே! இதுக்காகவா உன்னை வரமிருந்து பெத்து, சீராட்டி வளர்த்து, ராஜா வீட்டில் கல்யாணம் பண்ணிக் கொடுத்தேன்'' ஓடிவந்து கட்டிக் கொண்ட அன்னையின் மடியில் படுத்துக் கதறினாள் பாரிஜாதம்.

'என் மகளோட வாழ்க்கையே அஸ்தமிச்சுப் போச்சேம்மா.''

''அழாதேடி கண்ணு. உன்னைப் பெத்தவங்க நாங்க உன்னை அப்படி விட்டுறுவோமா.''

''என் மகள் வாழ்வை அவளை வெச்சே சூனியமா ஆக்கிட்டாங்களே. நான் நினைச்சே பார்க்கலயே இப்படியெல்லாம் நடக்குமின்னு... நான் என்ன செய்வேன்?''

''அழாதேம்மா பாரிஜாதம். பெரியவங்க நாமளே இப்படி மனசொடிஞ்சு போனா, என் பேத்தி பச்ச மண்ணு, அது என்ன செய்யும் சொல்லு'' மகளின் தலையைக் கோதியபடியே ஆறுதல் சொன்னார் திருப்பதி.

''அவ முகத்தை என்னால பார்க்கவே முடியலப்பா. என் பெத்த வயிறு பத்தி எரியுதே. இனிமே அவ என்ன செய்யப் போறான்னு தெரியலையே? அவ ஏதாச்சும் பண்ணிக்கிட்டா அப்புறம் நாங்களும் இருக்க மாட்டோம்ப்பா'' பாரிஜாதத்தின் வார்த்தைகளைக் கேட்ட அலமேலு அவசரமாக அவள் வாயை மூடினாள்.

''இப்படி நீ பேசறது இதுதான் கடைசியா இருக்கணும் சொல்லிட்டேன். நீ இப்படிக் கிடக்கிறதைப் பார்த்து மாப்பிள்ளையும் இடிஞ்சு போயி உட்கார்ந்திருக்கார் பாரு. உனக்காகவும் நம்ம குடும்பத்து மேல இருக்கிற பாசத்துக்காகவும் ஒரு ஜமீன் சொத்தையே விட்டுட்டு இங்க வந்து இருக்கிறவர் அவர். அவர் மனசு ஒடிஞ்சு நிக்கிறதைப் பார்க்கவா நம்ம எல்லோரும் இருக்கோம்'' கண்டிப்புடன் ஒலித்தது திருப்பதியின் குரல்.

''முதல்ல எழுந்து போய் முகத்தைக் கழுவிட்டு வா. அலமேலு செவ்வந்தியைக் கூப்பிட்டு ஏதாவது சாப்பாடு செய்யச் சொல்லு.''

''செவ்வந்தி...'' கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்த செவ்வந்தியின் கண்களும் கலங்கியிருந்தன. தலைமுறை தலைமுறையாக ஹரிசந்தரின் குடும்பத்தில் வேலை பார்க்கும் பரம்பரையில் வந்தவள் அவள்.

''சாப்பாடு ஏதாவது செய்.''

''எல்லாம் ரெடியா இருக்கும்மா. உங்க காலில விழறேன்மா. தயவு செஞ்சு எல்லோரையும் சாப்பிடச் சொல்லுங்க. உங்களுக்குப் புண்ணியமாப் போகும்.''

''சரி செவ்வந்தி எல்லாத்தையும எடுத்து டேபிள் மேல வச்சுட்டு ஐயாவைச் சாப்பிடக் கூட்டிட்டு வா.''

''நான் அப்பவே கூப்பிட்டேன்மா. ஐயா வர மாட்டேன்னு சொல்லிட்டாரு.''

''இப்பப் போயி அவங்க மாமனார் கூப்பிடறாருன்னு சொல்லு வருவாரு.''



''சரிங்கம்மா...'' என்றபடி சந்தோஷமாக நகர்ந்தாள் செவ்வந்தி.

அலமேலு எழுந்து வினயாவின் அறைக்குள் நுழைந்தாள். கால்களைக் கட்டிக் கொண்டு தேம்பிக் கொண்டிருந்த பேத்தியைக் கண்டதும் பீறிட்டு வந்த அழுகையை தனக்குள் விழுங்கிவிட்டு பேத்தியின் முதுகைத் தொட்டாள்.

## 34

முதுகில் ஸ்பரிசத்தை உணர்ந்து தலை நிமிர்ந்த வினயா அலமேலுவைக் கண்டவுடன் அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டு புன்னகைத்தாள்.

''வாங்க பாட்டி. எப்ப வந்தீங்க?''

''நான் அப்பவே வந்துட்டேன் கண்ணு. இவ்வளவு நேரமும் உன் அம்மாவிடம் பேசிக்கிட்டிருந்தேன்.''

''அம்மா என்ன சொன்னாலும் சமாதானமே ஆகமாட்டேங்கறாங்க பாட்டி. நீங்களாவது அவங்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரியவைங்க பாட்டி.''

''சரிம்மா. உன் அம்மாவிடம் பேசறேன்.''

''பாட்டி...''

''என்னடா கண்ணு? சொல்லு...''

''நான் செஞ்சது சரிதானே பாட்டி? எனக்கு அந்த நேரத்துல வேற ஒண்ணும் தோணல பாட்டி.''

''சரியா தப்பான்னு எனக்குச் சொல்லத் தெரியல தாயி. ஆனா இந்தச் சின்ன வயசுல குடும்ப ஒற்றுமைக் காக உன் வாழ்க்கையை தியாகம் பண்ணின உன்னை நெனச்சால் எனக்குப் பெருமையா இருக்கும்மா.''

''ஆனா அத்தான் என்னைத் தப்பா நினைக்கறாங்க பாட்டி. என் செயலுக்குப் பின்னால இருக்குற தியா கத்தைப் புரிஞ்சுக்க மாட்டேன்றாங்க.''

''யாருக்குமே ஆரம்பத்துல கோபம் வரத்தாண்டா கண்ணு செய்யும். கொஞ்ச நாளாச்சுன்னா கண்ண னுக்கும் உன் மேல இருக்கற கோபம் குறைஞ்சிடும் பாரேன்.''

''அத்தானின் கோபம் குறைஞ்சிருமா பாட்டி.''

''கண்டிப்பா குறைஞ்சிரும் கண்ணு. அப்படிக் குறையலேன்னாலும் பாட்டி நான் இருக்கேன்ல. அவனை நான் பார்த்துக்கறேன். நீ கவலைப்படாமல் எழுந்திரும்மா. வீடே இருள் வாங்கிப் போயிக் கிடக்கு. நீ சந்தோஷமா இருந்ததாத்தான அப்பாவும், அம்மாவும் நிம்மதியா இருப்பாங்க? கண்களைத் துடைச்சுட்டுச் சாப்பிட வா.''

''இல்ல பாட்டி எனக்கு சாப்பாடு வேணாம்.''

''அப்படிச் சொன்னா எப்படிம்மா? நீ சாப்பிட்டாத் தான உன்னப் பெத்தவங்க சாப்பிடுவாங்க? பிடிக்காட் டியும் முடிஞ்சதைக் கொஞ்சம் சாப்பிடு வா.''

கண்ணைத் துடைத்துக்கொண்ட வினயா எழுந்து பாட்டியுடன் ரூமைவிட்டு வெளிவந்தாள். ஹாலில் அமர்ந்து மாமனாரிடம் பேசிக்கொண்டு இருந்த



ஹரிசந்தர் மகளைக் கண்டவுடன் பாசத்துடன் கைகளை நீட்டினார். ஓடிச்சென்று அப்பாவின் கைகளைப் பிடித்துக் கொண்ட வினயா,

''ஸாரிப்பா. என்மேல கோபம் இல்லையே?'' என்றாள்.

மகளின் தலையைத் தன் தோள்களில் சாய்த்துக் கொண்டு கன்னத்தில் தட்டிக் கொடுத்தார் ஹரிசந்தர்.

''இருக்கட்டும் விடுடா. நீ சந்தோஷமா இருந்தால் அது போதும் எங்களுக்கு. மற்றவற்றை அப்புறம் பார்த்துக்கலாம்.''

''சரிங்கப்பா. எனக்குப் பசிக்குது. சாப்பிடலாமா?'' பசியில்லாவிட்டாலும் தனக்காகக் கேட்கும் மகளைப் பாசத்துடன் பார்த்தார் ஹரிசந்தர்.

''சரிம்மா. வா சாப்பிடலாம். நீங்களும் வாங்க மாமா அத்தை நீங்களும் வாங்க. எல்லோரும் சேர்ந்த சாப்பிட லாம்.''

''சரிங்க மாப்பிள்ளை. அலமேலு, பாரிஜாதத்தையும் கூப்பிடு'' என்றவாறே எழுந்தார் திருப்பதி.

டைனிங் டேபிளில் அமர்ந்த திருப்பதி திரும்பி அலமேலுவை பார்த்தார்.

''என்னங்க?'' என்றாள் அலமேலு.

''பாரிஜாதம் எங்கே?''

''தெரியலையே இருங்க கூட்டிட்டு வர்றேன்'' என்று விரைந்தவள் மகள் குளியலறையில் சுவரில் சாய்ந்து விம்மிக் கொண்டு இருப்பதைப் பார்த்து உறைந்து நின்றுவிட்டாள்.

"அம்மா பாரிஜாதம் எதுக்கும்மா இப்படி மறுகிறே? அம்மா நான் இருக்கேண்டா. எல்லாம் சரியாப் போயிடும். நீ கலங்காதடா."

"இல்லைம்மா. சின்னண்ணன் இப்படி மாறுவாருன்னு நான் நினைச்சே பார்க்கலைம்மா."

"அவனைப்பத்திப் பேசாதே கண்ணு. அவனெல்லாம் ஒரு மனுசனா. அவனைப் பெத்த வயித்துல பெரண்டையைத் தான் நான் கட்டிக்கணும்."

"அண்ணனைக் குறை சொல்லாதீங்கம்மா. சொல்வார் பேச்சை கேட்டுட்டார் அவ்வளவுதான். மத்தபடி அவர் மேல குறை இருக்காது."

அந்த நிலையிலும் சகோதரனை விட்டுக் கொடுக்காமல் பேசும் மகளைப் பார்த்த அலமேலு பெருமூச்சு விட்டாள்.

"எந்தப் பேச்சைக் கேட்டானோ? இல்ல யாரோட கொள்ளிக் கண்ணு நம்ம குடும்பத்து மேலே விழுந்துச்சோ அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம். எல்லாம் தெரிஞ்ச ஆண்டவனும் மௌனமா வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கே? அதுதான் இன்னும் கஷ்டமா இருக்குது?"

"உங்க வாயால சாபம் கொடுக்காதீங்க அம்மா. அண்ணன் கெட்டுப் போனால் அந்த வருத்தமும் நம்மைத் தான் சேரும்."

"என் ராஜாத்தி. உன் நல்ல மனசுக்கு உன் பரம்பரையே நல்லா இருக்கும்."



"எங்கம்மா? எனக்குத்தான் எங்களுக்குப் பின்னால் பரம்பரையே அத்துப் போச்சேம்மா?" விரக்தியாகப் புன்னகைத்த மகளை பார்த்துச் சிரித்தாள் அலமேலு.

"என்னம்மா சிரிக்கறீங்க?"

"நீ சொன்னதைக் கேட்டுத்தான் சிரிச்சேன். நடக்குற எல்லாத்தையும் அந்த நாராயணன் தான் முடிவு பண்ணனும். பரம்பரை அத்துப் போச்சுன்னு நீ எப்படி முடிவு பண்ணலாம். நடப்பதை அந்த ஏழுமலையான் கிட்ட விட்டுட்டு நீ உன் வேலையை பாரும்மா. இந்த அம்மா பேச்சை நம்பு. நாம கும்புடுற தெய்வம் அப்பவுமே நம்மைக் கைவிட மாட்டார்" சொன்ன அன்னையை நம்பிக்கை இல்லாமல் பார்த்தாள் பாரிஜாதம். மகளின் கைபற்றி அழைத்து வந்து அருகில் இருந்த நாற்காலியில் அமர வைத்தாள் அலமேலு.

"அம்மா பாரிஜாதம் நான் சொல்றதைக் கவனமா கேட்டு மனசுல பதிய வைச்சுக்க. ஒரு குடும்பத்துல ஆணும் பெண்ணும் சரிசமம்னாலும், கஷ்டம்னு வரும் போது மனசு திடமா நின்னு பொம்பளைதான் போராடி கணவனையும், குழந்தைகளையும் பாதுகாக்கணும். ஆம்புளைங்க சீக்கிரமா உணர்ச்சிவசப் பட்டுடுவாங்க. ஆனா பொம்பளைங்க நாம தான் நல்லது கெட்டது நாலையும் ஆராஞ்சு பாத்து செயல்படணும். இப்பப் பாரு. நீயே இப்படி உடைஞ்சு போயி நின்னா, வினயாவும், மாப்பிள்ளையும் என்ன செய்வாங்க? அதுவும் உனக்கு வாய்ச்ச புருஷன் எப்பேர்ப்பட்ட மகராசன்னு நான் சொல்லித்தான் உனக்குத் தெரியனும்னு இல்லை. ராஜ குடும்பத்தில் பொறந்து வளர்ந்த மனுசன் அவர்.

அப்பேர்ப்பட்ட ராஜ மாளிகையை விட்டுட்டு, உனக்காக, உன்மேல அவர் வச்ச பாசத்துக்காக இந்த ஊருக்கு வந்தவரு அவரு. நாங்க உனக்காக கொடுத்த இந்த வீடு அவர் மாளிகைக்கு முன்னாடி நிக்கக் கூட முடியாதே. ஆனாலும் உனக்காக தன்னோட ஊரு, அடையாளம், மக்க மனுசங்கன்னு அத்தனையையும் விட்டுப்புட்டு நாமதான் எல்லாமுன்னு வந்திருக்காரு. அவரை நாம தங்கத் தட்டுல தாங்கணும். கண்ணுல போட்டு இமையில மூடி பாதுகாக்கணும். ஏதோ நான் பெத்த சின்ன மகனால அவரு மனசு ஒடிஞ்சு நிக்கிறாரு. நானும் உன் அப்பாவும் இந்த நிலையைக் கண்டிப்பா மாத்துவோம். ஆனா அதுவரைக்கும் அவரையும், வினிக்குட்டியையும் நீதான் தைரியம் சொல்லிப் பாதுகாக்கணும். என்ன? நான் சொல்றதைப் புரிஞ்சுக்கிட்டயா இல்லையா.''

வில்லேந்திய அர்ச்சுனனுக்கு கீதை சொன்ன பரந்தாமனாக, உடைந்து நின்ற தன் மகளுக்கு உலக அறிவைப் புகட்டினாள் அலமேலு. அலமேலுவின் அறிவுரையால் மனம் தெளிந்த பாரிஜாதம் அன்னையைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''புரிஞ்சுக்கிட்டேன்மா. இனிமேல் நான் தைரியமா இருப்பேன். என் மகளின் வாழ்க்கையில் மறுபடியும் வசந்தத்தைக் கொண்டு வராமல் விடமாட்டேன்மா. நான் கெட்டுப் போகணும்னு நினைக்கிறவங்களே நல்லா இருக்கும் போது, என் குடும்பத்தைக் கரை சேர்க்காமல் நான் வேடிக்கையா பார்த்துக்கிட்டா இருப்பேன். நீங்க கவலைப்பட வேண்டாம்மா. இனி எல்லாத்தையும் எங்க வைக்கணுமோ அங்க வைக்கிறேன். எதை எப்படிச்



செய்யணுமோ அப்படியே செய்யறேன். பாசத்தை அந்து விட்டு வேடிக்கை பார்க்கிற மனுசங்களுக்கு அதையே ஒட்ட வைச்சுக் காட்டறேன். நான் என் அண்ணன்களின் மேலே வச்ச பாசம் உண்மைன்னா எல்லாம் இனிமே நல்லதாத்தான் நடக்கும்.''

# 35

அன்னையுடன் பேசியவாறு வந்த பாரிஜாதத்தின் தெளிந்த முகத்தைப் பார்த்த திருப்பதியும், ஹரிசந்தரும் ஒருவரை ஒருவர் நிம்மதியுடன் பார்த்துக் கொண்டனர். ஹரிசந்தருக்கு மனைவிதான் உலகம். அவள் கண்கலங்கி நின்றாள் அவருக்கு உலகமே இருண்டது போல ஆகி விடும். அப்படிப்பட்டவர் பாரிஜாதம் மனமே உடைந்து நின்ற நிலையில் உயிரே போய்விட்டது போல உணர்ந்தார். உலகமே இருண்டு தெரிந்தது அவருக்கு. பாரிஜாதம் மட்டும் பழைய நிலைக்கு வந்து விட்டாள் அதுவே போதும் என்றிருந்தார் அவர். இன்று அன்னையுடன் புன்னகை முகத்துடன் மனைவி வந்து நின்றவுடன் அவருக்கு உலகமே அழகாகத் தோன்றியது. மனமெல்லாம் நிம்மதி நிறைந்தது.

''வா பாரிஜாதம். வந்து உட்காரு. இன்னிக்கு எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாம்.''

''இல்லைங்க. நீங்க முதல்ல சாப்பிடுங்க. நான் பரிமாறினால் தான் நீங்க வயித்துக்குச் சாப்பிடுவீங்க. நானும் அம்மாவும் அப்புறமாய்ச் சாப்பிடுவோம்.''

"நீ என்ன சொல்றயோ அப்படி செய்யத்தானே நான் இருக்கேன்" சிரித்தபடியே சொன்ன மருமகனைப் பார்த்த அலமேலுவிற்கு மனம் நிறைந்தது.

"வினயாக்குட்டி, என்ன வேணுமோ கேட்டு வாங்கிச் சாப்பிடணும். வளர்ற பிள்ளை வயித்தைக் காயப்போடக் கூடாது" என்றபடி அனைவருக்கும் அமைதியுடன் உணவைப் பரிமாறிய அன்னையைப் பார்த்த வினயாவின் மனம் நிம்மதியானது. ஏனென்றால் எளிதில் உணர்ச்சிவசப்படாத பாரிஜாதம் மனம் உடைந்து போனதால் அந்தக் குடும்பமே நிலைகுலைந்து விட்டது. ஆனால் பாரிஜாதம் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டாலும் போதும். அவளது மனம் தெளிந்து புத்துணர்ச்சியுடன் எப்படிப்பட்ட பிரச்சினையிலிருந்தும் சமாளித்து மீண்டு வந்து விடுவாள்.

அன்னையின் இந்த இயல்பைப் புரிந்து வைத்திருந்த வினயா நிம்மதியுடன் தனது உணவை உண்டு முடித்தாள்.

"இப்ப நீங்களும் பாட்டியும் உட்காருங்கம்மா. நான் தான் பரிமாறுவேன்" தன்னால் அன்னைக்கு உண்டான கவலைக்குப் பிராயசித்தம் தேட முற்படும் மகளின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் பாரிஜாதம்.

"நீ இந்த வீட்டு ராணிடா. நீ எப்பவும் சிரிச்சுக்கிட்டே ப்ரீயா இருக்கணும். இதையெல்லாம் பார்த்துக்கத்தான் செவ்வந்தி இருக்காளே? நீ கவலையில்லாமல் போய் படி."

"இல்லம்மா நான் கொஞ்ச நேரம் உங்க கூடவே இருக்கேன்."



"அதனால என்னடா கண்ணு. நீ என் பக்கத்துல இருந்தா நான் எப்பேர்ப்பட்ட கஷ்டத்தையும் கடந்து வந்துருவேன். நீ எங்க கூட இருந்தால் மட்டும் போதும்" மகளின் கண்களுக்குள் பார்த்துக்கொண்டே பேசிய அன்னையின் பயத்தை நொடியில் புரிந்து கொண்டாள் வினயா.

"நான் உங்க மகள்மா. பாரிஜாதத்தின் மகள் என்றுமே கோழையாக இருக்க மாட்டாள். அதனால நீங்க தேவையில்லாம எதையாவது நினைச்சு பயப்படாதீங்க."

"என் கண்ணே. உன்னைப் பொண்ணாகப் பெற நான் எத்தனை ஜென்மமாய் தவமிருந்தேனோ தெரியலியே" மகளின் கன்னம் பற்றி முத்தமிட்டாள் பாரிஜாதம்.

"இல்லைம்மா. இந்தக் குடும்பத்தில் வந்து பிறக்க நான்தான் புண்ணியம் செய்திருக்கிறேன்."

"போதும், போதும், அம்மாவும் பொண்ணும் கொஞ்சினது. ஆன்னா ஊன்னா மூலையில உட்கார்ந்து அழுக வேண்டியது. யாராச்சும் தேறுதல் சொல்லித் தேத்தி விட்டா சாப்பிடாமக் கூட கட்டிப்பிடிச்சு உருள வேண்டியது. பசிக்குது பாரிஜாதம். ஏண்டி செவ்வந்தி நீயாவது சோத்தைப் போடலாம்ல. நீயும் சேர்ந்துக்கிட்டு வாயைப் பார்த்துக்கிட்டு நிக்கிற. நல்ல பொம்பளைதான் போ..." அதட்டிய அலமேலுவின் தட்டில் வேகமாக உணவைப் பரிமாற ஆரம்பித்தாள் செவ்வந்தி.

"என் பாட்டி சூப்பர்ப் பாட்டிதான் இல்லை செவ்வந்தி?" இல்லை என்று சொல்ல செவ்வந்தி பைத்தியமா என்ன?

வேலையிருப்பது போன்ற பாவனையில் வேகமாகச் சமையலறைக்குள் நுழைந்து கொண்டாள் செவ்வந்தி.

''பார்த்தீங்களாம்மா... செவ்வந்தியின் பயத்தை... அவள் யாருக்காச்சும் இப்படி பயந்திருக்காளா...'' அன்னையின் காதோரம் ரகசியமாகச் சொன்ன வினயா வாய்பொத்திச் சிரித்தாள். கடைக்கண்ணால் அதைப் பார்த்து ரசித்தாலும்,

''இப்பத்தான சொன்னேன். கொஞ்சனது போதும்னு. நீ போய் உங்க அப்பாகிட்ட கொஞ்சநேரம் அரட்டை அடி. என் மகள் நிம்மதியாச் சாப்பிடட்டும்'' என்றாள் அலமேலு.

''போதும் பாட்டி. ரொம்பத்தான் துரத்தாதீங்க. எங்க அம்மா சாப்பிடணும்றதுக்காகப் போறேன். சரியா?'' என்று பாட்டியிடம் சொன்ன வினயா, ஹாலில் அமர்ந்து மாமனாருடன் பேசிக்கொண்டிருந்த தந்தையின் அருகில் சென்று அமர்ந்து கொண்டு அவர்கள் பேசுவதைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

சாப்பிட்டோம் என்ற பெயருக்கு எதையோ உள்ளே தள்ளிய பாரிஜாதமும், அலமேலும் கைகளைக் கழுவி விட்டு வந்து அவர்களோடு அமர்ந்தனர்.

''சரிங்க மாப்பிள்ளை. நாங்க கிளம்பறோம். அங்கயும் யாருமே சாப்பிடலை. சிவராமன் மனசு ஒடிஞ்சு போயி எங்கயுமே போகாம வீட்டிலேயே படுத்திருக்கான். பார்வதியையும் கண்ணனையும் பத்திச் சொல்லவே வேணாம். அவங்கவங்க ஆளுக்கொரு பக்கமா உட்கார்ந்துட்டாங்க. வீடு வீடாவே இல்லை'' என்றார் திருப்பதி.



''அண்ணனைப் பார்த்துக்கங்க அம்மா.''

''உங்க அண்ணனுக்கு அவன் மகன் கவலையை விட உன்னைப் பத்தின கவலைதான் அதிகம்மா. இப்பக்கூட இங்க வரமுடியாமல் தான் தவிச்சுப் போயி உட்கார்ந் திருக்கான். எங்க அவன் இங்க வந்தால் கூட்டணி சேருறீங்களான்னு சின்னவன் பேசிடுவானோன்ற நினைப்புதான் அவனுக்கு.''

''அண்ணன் வந்து என்னைப் பார்த்தால் தான் எனக்கு ஆறுதல்னு இல்லம்மா. அவங்க மனசால நினைச்சாலே போதும். நான் நல்லாத்தான் இருக்கேன்னு அவங்ககிட்ட சொல்லிருங்க'' பாரிஜாதம் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''சரி சரி. நீ மறுபடியும் பிள்ளையை அழுக வைக்காதே அலமேலு. அம்மா பாரிஜாதம் எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்மா இந்தக் கஷ்டமெல்லாம். ஆண்டவன் செயலால் அப்புறம் எல்லாம் சரியாயிடும். நீயே பாரேன்.''

''அதென்னவோ எனக்கும் அப்படித்தான் தோணுது பாரிஜாதம். மனசைத் தளரவிடாதே தெரியுதா? அப்ப நாங்க போயிட்டு வரவா?''

''இருங்க பாட்டி. ஒரு விஷயம் பேசணும் கொஞ்சம் உட்காருங்களேன்.''

''என்ன கண்ணு நீ ஏதாச்சும் புதிசா ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுறாத. ஏற்கனவே வீடே ரணகளமாய் இருக்கு. என்னன்னு சீக்கிரமாய் சொல்லு தாயி'' பயத்துடன் படபடத்தாள் அலமேலு.

''அதெல்லாம் ஒண்ணும் இல்ல பாட்டி. கொஞ்சம் என்னைப் பேச விடுங்களேன். அப்பா போன மாசம் எங்க காலேஜில கேம்பஸ் இண்டர்வியூ நடந்துச்சுல்ல? அதோட ரிசல்ட் வந்துருச்சுப்பா...''

''அதுக்கென்னம்மா இப்ப... அதுலதான் நீயும் கலந்துக்கிட்டயே? ஆனால் எந்தக் கம்பெனிலயும் செலக்ட் ஆகலைன்னு சொன்னியே? அப்புறம் என்ன?''

''இல்லப்பா. சில பெரிய கம்பெனிகள் தங்களோட ரிசல்ட்டை ஹெட் ஆபீஸ்ல போய் கன்சல்ட் பண்ணிட்டுச் சொல்றேன்னு சொல்லியிருந்தாங்க. அவங்களோட கம்பெனி ரிசல்ட் தான் இப்போ வந்திருக்கு.''

''சரிம்மா. அதுக்கு என்ன இப்பன்னு கேட்டேன்?''

''வந்துப்பா... வந்து... அதுல ஒரு பெரிய கம்பெனி என்னை செக்ஷன் மேனேஜரா செலக்ட் பண்ணியிருக்காங்கப்பா அதான்...''

''நீ என்ன சொல்ல வர்றேன்னு புரியுதுடா வினி. ஆனா இந்த அப்பாவுக்கு உன்னை வேலைக்கு அனுப்பறதுல இஷ்டம் இல்லடா. உன்னோட சொத்துக்களை ஒழுங்காக நீ கவனிக்க ஆரம்பிச்சாலே மாசம் லட்சக் கணக்குல லாபம் வருமேடா. ஆயிரம் பேருக்கு வேலை கொடுக்கப் பிறந்தவடா நீயி. நீ போய் இன்னொருத்தர்கிட்ட கை கட்டி வேலை பார்க்கிறதா? இதுக்கு ஒரு நாளும் நான் சம்மதிக்க மாட்டேன் வினயா? கண்டிப்புடன் ஒலித்தது ஹரிசந்தரின் குரல்.

''இல்லப்பா. ஒரு எக்ஸ்பீரியன்ஸுக்காக நான் போகலாமான்னுதான் கேட்டேன்.''



''அந்த எக்ஸ்பீரியன்ஸை நம்ம கம்பெனில வேலை பார்த்துக் கத்துக்க. இல்லையா உனக்காக ஒரு கம்பெனி ஆரம்பிச்சுத் தர்றேன். அதுல வேலை பார்த்துக் கத்துக்க.''

''அந்தக் கம்பெனி எந்த ஊரில இருக்கு வினயா'' அமைதியாகக் கேட்டாள் பாரிஜாதம்.

''நான் வேலைக்கே வேணாம்னு சொல்லிக்கிட்டு இருக்கேன். நீ என்னன்னா அந்தக் கம்பெனியைப் பத்தி விசாரிக்கிற?''

''கொஞ்சம் அமைதியா இருங்களேன். நீ சொல்லு வினி?''

''பெங்களூரில் இருக்கும்மா. நல்ல கம்பெனிதான்.''

''உனக்குக் கிடைச்சு இருக்குற வேலை நல்ல வேலைதானே?''

''செக்ஷன் மேனேஜர் வேலைம்மா. என் செக்ஷனில் இருக்கிறவங்க எல்லோருக்கும் நான்தான் ஹெட். சம்பளம் கூட நாற்ப..''

கைகளை உயர்த்தி மகளின் பேச்சை நிறுத்தினாள் பாரிஜாதம்.

''சம்பளத்திற்காக உன்னை வேலைக்கு அனுப்பும் நிலைமையில நம்ம குடும்பம் இல்லை வினி. ஆனால் நீ இந்த வேலைக்குப் போய்க்கொள்.''

## 36

பாரிஜாதத்தின் வார்த்தைகளைக் கேட்டு அங்கு இருந்த அனைவருமே அதிர்ந்தனர்.

"உனக்கென்ன பைத்தியம் பிடிச்சுருச்சாடி. என் பொண்டாட்டி புத்திசாலின்னு இல்ல இத்தனை நாள் நான் பெருமைப் பட்டுக் கொண்டிருந்தேன்" கோபத்துடன் ஒலித்தது ஹரிசந்தரின் குரல்.

"உங்க பொண்டாட்டி நல்ல புத்தியோடுதான் இருக்கிறேன் அத்தான்."

மனைவி அத்தான் என்று அழைத்தவுடன் கோபம் அனைத்தும் தணிந்தவராக அமர்ந்துவிட்டார் ஹரிசந்தர். அவர் எப்பொழுதாவது மிகவும் கோபப்படும் வேளையில் மட்டும் அத்தான் என்று கூப்பிடும் வழக்கத்தைக் கையாள்வாள் பாரிஜாதம். அந்த அழைப்பில் தனது அத்தனை கோபத்தையும் கைவிட்டுவிட்டு மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு விடுவார் ஹரிசந்தர்.

"அப்புறம் எதுக்கு இப்படி ஒரு முடிவெடுக்கிற."

"அதற்குக் காரணம் இருக்கிறதுங்க. கொஞ்ச நாளைக்கு நம்ம வினிக்குட்டிக்கு மனமாறுதல் அவசியம். அது இந்த வேலையினால் அவளுக்குக் கிடைக்கும்னா அவ தாராளமா போயிட்டு வரட்டுமே."

"அந்தக் கம்பெனி பெங்களூரில் இருக்குடி."

"இதோ இருக்கு பெங்களூர். காரை எடுத்தால் மறுநாள் காலையில உங்க மகள் முகத்துல முழிக்கலாம். இதுக்குப் போய் தயங்கலாமா?"

"அதுக்கில்லை... வினயா நம்மளை விட்டு ஒருநாள் கூடப் பிரிஞ்சு இருந்ததில்லை... அதான்."

"இந்த வேலைக்குப் போகட்டுமான்னு உங்களோட பொண்ணுதான் கேட்டாள். கவனிச்சீங்களா?"



வாயடைத்துப் போய் அமர்ந்து விட்டார் ஹரிசந்தர். அவருக்கு அப்பொழுதுதான் இந்த விஷயமே உறைத்தது. அமைதியாக அமர்ந்த தந்தையின் தோள்களில் சாய்ந்து அவர் அருமே அமர்ந்தாள் வினயா.

"அப்பா எனக்கும் உங்களைப் பார்க்காமல் பிரிஞ்சு இருக்க முடியாதுப்பா. ஆனால் என்னால் இங்க இந்தச் சூழ்நிலையில் இயல்பாய் இருக்க முடியலப்பா. நடந்ததை எல்லாம் ஏத்துக்கிட்டு பக்குவப்பட எனக்குக் கொஞ்சம் கேப் வேணும். அதனால தான் நான் இந்த வேலைல ஜாயின் பண்ணவான்னு கேட்டேன்" மகளின் குரலில் தெரிந்த வேதனை தகப்பனின் மனதை உலுக்கியது. அவர் வினயாவின் உச்சந்தலையில் மெல்ல முத்தமிட்டார்.

"ஓகேடா. நீ போய்ட்டு வா. எப்ப அந்தக் கம்பெனில ஜாய்ன் பண்ணனும்."

"நெக்ஸ்ட் வீக்ல எக்ஸாம்ஸ் எல்லாம் முடிஞ்சரும்ப்பா. அதுக்கு மேல எப்ப வேணும்னாலும் சேரலாம்."

"சரிடாம்மா. நீ நாளைக்கே அந்த கம்பெனில சேர்ந்துக்கறேன்னு இன்பார்ம் பண்ணிடு. அப்பத்தான் அவங்க அப்பாயிண்ட்மென்ட் ஆர்டரை அனுப்புவாங்க."

"ஓகேப்பா."

"என்னவோ... எங்க பேத்தியின் தலையெழுத்து இப்படி ஆகிப்போச்சு. யாரு கண்ணு பட்டுச்சோ? எந்தச் சொல்லு பலிச்சுச்சோ?" புலம்பத் தொடங்கிய அலமேலுவை அடக்கிய திருப்பதி அவளை அழைத்துக் கொண்டு மகன் வீடு நோக்கிக் கிளம்பினார்.

சரியாக ஒரே வாரத்தில் வினயா பெங்களூர் கிளம்பி விட்டாள். மகளின் மனநிலை உணர்ந்து பெற்றவர்கள் இருவருமே அவளைத் தடுக்கவில்லை. அவளுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் அடங்கிய அபார்ட் மெண்ட் ஒன்றை வாங்கிக் கொடுத்த ஹரிசந்தர் மனைவியுடன் சென்று அங்கு மகளைக் குடியமர்த்தி னார். மகளின் பாதுகாப்பிற்காக தன் ஜமீனில் விசுவாச மான வேலை ஆட்கள் ஐந்து பேரையும் மகளுடன் சேர்ந்தே குடியமர்த்தினார். அவர்கள் கண்ணின் மணி யாக வினயாவைப் பாதுகாத்தாலும் ஹரிசந்தரும், பாரிஜாதமும் மகளின் பிரிவால் வேதனைப்பட்டார்கள்.

''ஹாய் வினயா? குட்மார்னிங். ஹேவ் ய நைஸ் டே'' தன் முன்னால் குனிந்து காலை வணக்கத்தைக் கூறிய ராமைப் பார்த்த வினயா முகம் சுளித்தாள்.

''டிஸ்டன்ஸ் கீப் அப் பண்ணுன்னு எத்தனை தடவை சொல்றது ராம். அண்ட் கால் மீ மேடம்'' கண்டிப்புடன் கூறிய வினயாவைப் பார்த்து சிரித்த ராம்,

''இவ்வளவு அழகான பெண்ணைப் பார்த்துக் கிழ வியை கூப்பிடுவது போல மேடம்னு கூப்பிடச் சொல் றியே? நான் உன்னை வினயான்னுதான் கூப்பிடு வேன்.''

''சரி எப்படியோ கூப்பிட்டுக் கொள் ராம். இப்ப போய்த் தொலை'' கடுப்பாகக் கூறினாள் வினயா.

அதற்கும் சிரித்த ராம் அவளைப் பார்த்துக் கை அசைத்துவிட்டு ஒன்றுமே நடக்காததுபோல அவன் ஸீட்டில் போய் அமர்ந்தான்.



அந்தக் கம்பெனியில் வேலை பார்க்கும் மற்ற அனைவரும் அவரவர் வேலையைப் பார்த்துக் கொண்டு அவளுக்கு உரிய மரியாதையுடன் நடக்கும் பொழுது இவன் மட்டும் ஏன் இப்படி இருக்கிறான் என்று எரிச்சலுடன் எண்ணிக் கொண்டாள் வினயா. அவள் எவ்வளவுதான் கண்டிப்புடன் இருந்தாலும், நோஸ்கட் பண்ணினாலும் எதுவுமே நடக்காதது போல மறுபடியும் வந்து வழியும் இவனை என்ன செய்வது என்று வினயாவிற்குத் தெரியவில்லை.

அவளுக்குத் தெரியாது. ராம் வினயாவிடம் வழிவது அவளுடைய அழகிற்காக மட்டும் இல்லை. முதல் நாள் வேலையில் சேர வரும்போதே பெரிய வெளிநாட்டுக் காரில் டிரைவர் அவசரமாக இறங்கிக் கதவைத் திறந்து பிடித்திருக்க ஒரு ராணியின் மிடுக்கோடு இறங்கிய வினயாவைப் பார்த்து வாய் பிளந்து நின்றான் அவன். அன்றிலிருந்தே அவளைப்பற்றி அவளறியாமல் விசாரிக்க ஆரம்பித்துவிட்டான். வினயாவின் பின் புலத்தை அறிந்து கொண்ட அன்று இரவு அவன் தூங்கவே இல்லை. மணந்தால் இப்படியொரு பெண் ணைத்தான் மணக்க வேண்டும் என்ற கனவில் இருந் தவன் அவன்.

அவனது கனவெல்லாம் வினயா என்ற பெயரில் அவன் முன்னால் நேரில் வந்து நிற்கும்போது அதை கைவிடும் தவறை அவன் செய்வதாக இல்லை. எனவே வினயா என்னதான் விரட்டினாலும் அவளது மனதில் இடம்பிடிக்கும் எண்ணத்தோடு அவளையே சுற்றி வந்தான் ராம்.

ராமின் இந்த நடவடிக்கைகளால் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானாள் வினயா. தான் மட்டும் இருக்கும் இடத்தில் இருந்திருந்தால் இந்த நாயெல்லாம் நம்மிடம் வாலாட்ட முடியுமா என்ற எண்ணத்தில் குமுறினாள் அவள். தனக்கு டிரைவராக வந்திருக்கும் மாணிக்கத்திடம் அவள் சொன்னால் கூடப் போதும். ராமின் எலும்பை எண்ணிவிடுவான் அவன். ஆனால் மன நிம்மதிக்காக வேலை பார்க்க வந்த இடத்தில் பிரச்சினை வேண்டாம் என்று அமைதியாக இருந்தாள் வினயா. வினயாவின் இந்த அமைதியே ராம் அவளை மேலும் மேலும் டார்ச்சர் பண்ணுவதற்கு வழிவகுத்தது.

''அம்மா பலகாரம் சாப்பிடுங்கம்மா'' தன் முன்னால் டிபன் தட்டினை நீட்டிய வேலைக்கார கமலத்தைப் பார்த்துப் புன்னகைததாள் வினயா.

''தேங்க்ஸ் கமலம்.''

''இதுக்கெல்லாம் எதுக்கும்மா நன்றி சொல்லிக்கிட்டு. நாங்க உங்களைக் கவனிச்சுக்கத்தான இருக்கிறோம்.''

''அதுக்கும் சேர்த்துத்தான் தேங்க்ஸ் கமலம்.''

''அடப் போங்கம்மா. சீக்கிரமாய் பலகாரத்தைச் சாப்பிடுங்க. சூடாக் காபி கொண்டு வந்தேன்.''

''சரி கமலம். எனக்கும் லேசா தலைவலிக்கிற மாதிரிதான் இருக்கு... சீக்கிரமா காபி தரியா?''

''இதென்ன கேள்வி. ஒரு நொடில எடுத்தாரேன். தலைவலின்னு முதலிலேயே சொல்லக்கூடாதா?''

அன்று ராம் பண்ணிய டார்ச்சரால் தலையெல்லாம் வெடிப்பது போல் வலிக்க ஆரம்பித்தது வினயாவிற்கு.



# 37

''குறையொன்றும் இல்லை மறைமூர்த்திக் கண்ணா'' என்று பாடிக்கொண்டே அழைத்தது வினயாவின் செல்போன். எடுத்துப் பார்த்தவளின் முகம் மலர்ந்தது.

''அம்மா எப்படி இருக்கீங்க? அப்பா நல்லா இருக்காங்களா?''

''நாங்க எல்லோரும் இங்க நல்லா இருக்கறோம் வினி. அங்க நீ நல்லா இருக்கியா?'' பாசத்தில் கரைந்தது பாரிஜாதத்தின் குரல்.

''நான் நல்லா இருக்கேன்மா. ஒரு பிராப்ளமும் இல்லை. எவ்ரிதிங் இஸ் நைஸ்.''

''என்னமோ போ. நீ சொன்னதை நானும் நம்ப வேண்டியதுதான். பணமெல்லாம் இருக்கா இல்லை அனுப்பணுமா?''

''ஏற்கனவே நீங்க அக்கௌண்ட்ல போட்ட பணத்தையே நான் இன்னும் தொடலம்மா. எனக்கு எதுக்கு இவ்வளவு பணம் போட்டுவிடறீங்க.''

''நாங்க சம்பாதிக்கிறது நீ நல்லா செலவு பண்ணத்தானே வினி?''

''சரிம்மா. வேற எதுவும் விஷேசமான நியூஸ் ஒண்ணும் இல்லையா?''

''அதைச் சொல்லத்தாண்டா போன் பண்ணினேன். அத விட்டுட்டு என்னென்னமோ பேசிக்கிட்டு இருக்கேன் பாரு.''

''என்னம்மா விஷயம்.''

''நம்ம ரூபாவதிக்குக் கல்யாணம் நிச்சயம் பண்ணி இருக்காங்கடா.''

''சந்தோஷமான விஷயம்தானே? மாப்பிள்ளை என்ன வேலை பார்க்கிறார்? அழகா இருக்காரா?''

''மாப்பிள்ளை எல்லாம் நல்லாத்தான் இருக்காரு. குடும்பமும் நம்ம அந்தஸ்துக்கு ஒத்ததுதான். பையன் அமெரிக்காவுல வேலை பார்க்கிறாராம். கல்யாணத்துக்கு அப்புறம் ரூபாவதியும் அமெரிக்கா போயிருவாளாம்.''

''வெரிகுட் வெரிகுட். ரூபாவதி அப்போ பாரின் கேர்ள் ஆகிட்டாளா. ஓகே ஓகே.''

''அதான் வினி. உனக்கு இப்போ லீவு கிடைக்குமா? ரூபாவதியின் கல்யாணத்துக்கு நீ வந்தால் நல்லா இருக்கும்னு தோணுது. அந்தச் சாக்கிலாவது நம்ம வீட்டுல வந்து ரெண்டு நாள் தங்கிட்டுப் போயேன் அப்பாவும் உன்னைப் பார்க்க ரொம்பவும் ஏங்கறாங்க'' போனிலேயே கெஞ்சிய தாயின் குரலில் மனம் கரைந் தாள் வினயா.

''இந்த ஒரு வருஷமா நான் லீவே போட்டது இல் லேல்லம்மா. அதனால கண்டிப்பா லீவு கிடைக்கும். நானும் கண்டிப்பா வர்றேன்மா.''

''உண்மையாகத்தான் சொல்றியா வினி? கண்டிப்பா நீ வருவியா.''

''கண்டிப்பா வர்றேன்மா. நாளைக்கு ஆபீஸ்ல போய் லீவு சொல்லிட்டு நாளை நைட்டே கிளம்பறேன். நாளைக்



கழிச்சு காலைல உங்க பொண்ணு முகத்திலதான் நீங்க முழிப்பீங்க போதுமா.''

''அது போதும்டி என் செல்லமே. இன்னிலேர்ந்தே உன்னைப் பார்க்கற நிமிஷத்தை எண்ணிக்கிட்டே இருப்பேன். சீக்கிரமா வந்துரு. இதைக் கேட்டா உன் அப்பாவுக்கு தலை கால் புரியாது. சரி வச்சிரட்டுமா?''

''ஓகேம்மா. பை'' செல்போனை அணைத்தவள் மனம் இன்னும் கொஞ்ச நாள்களுக்கு இந்த ராமின் டார்ச்சர் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்து மகிழ்ந்தது. வினயா பெங்களூர் வந்து ஏறக்குறைய ஒரு வருடம் ஆகிவிட்டது. இந்த ஒரு வருடத்தில் அவள் பூஞ்சோலைக்கு போகவே இல்லை. ஹரிசந்தரும் பாரிஜாதமும் மாதம் இருமுறை வந்து மகளைப் பார்த்துவிட்டுப்போனார்கள். இடையில் ஒரு முறை பெங்களூர் வந்து வினயாவைப் பார்த்துவிட்டுப் போனார்கள் அலமேலுவும், திருப்பதியும். ஆனால் கண்ணன் மட்டும் அவள் கண்ணிலேயே படவில்லை. அவளுக்கு போன் பண்ணிக்கூட பேசியதில்லை. அன்று என் முகத்தில் விழிக்க வேண்டாம் என்று கூறிச் சென்றவன் அவளது முகத்தில் விழிக்காமல் அவனே விலகிச் சென்று விட்டான். கண்ணனை எண்ணித் தவித்த தன் மனத்தினை வேலையில் செலுத்தி மேலதிகாரிகளின் நன் மதிப்பைப் பெற்றாள் வினயா. இரவும் பகலும் அவளை வாட்டி வதைத்த வேதனையை மறக்க இரவு பகலாக கம்பெனிக்காக உழைத்தாள். எனவே கம்பெனியும் அவளுக்குப் பல சலுகைகளை அளித்து இருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு கம்பெனிக்கு

வரவேண்டிய அவசியம் கிடையாது என்ற சலுகையை மீறி குறித்த நேரத்திற்கு முன்னதாகவே அலுவலகம் சென்று விடுவாள்.

தேவையான விடுமுறையை எடுத்துக் கொள்ளலாம் என்ற சலுகையைக் கொடுத்தவர்களிடம் ஒரு நாள் கூட ''லீவ் வேண்டும்'' என்று போய் நின்றதில்லை வினயா. அலுவலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் வினயாவை செல்லமாக ரோபாட் என்பார்கள். ஆனால் வினயாவிற்கு மட்டும் தான் தெரியும் தன்னைத் துரத்தும் நினைவுகளில் இருந்து தப்பிக்கவே தான் இப்படி ஓடிக்கொண்டிருக்கிறோம் என்று.

அலுவலகம் சென்றவுடன் மேலதிகாரியின் அறைக்குள் தான் முதலில் நுழைந்தாள் வினயா.

''ஹாய் மேடம் குட்மார்னிங். ஸிட்டவுன்'' மரியாதையாகக் கூறிக்கொண்டே இருக்கையைக் காட்டும் அதிகாரியைப் பார்த்துப் புன்னகைத்தாள் வினயா.

''தேங்க் யூ சார். நான் ஒரு ஹெல்ப் கேட்டு உங்களிடம் வந்தேன்.''

''ஹெல்ப்பா? என்னிடமா! திஸ் இஸ் சர்ப்ரைஸ்-பார் மீ! உங்களிடம் இல்லாத திறமையா என்ன? வாட் கைன்ட் ஆப் ஹெல்ப் டூ யூ வாண்ட்?'' ஆச்சரியத்துடன் புருவத்தை உயர்த்தினார் அவர்.

''பெரிதாக ஒன்றுமில்லை சார்... வந்து... எனக்கு ஒரு மாதம் லீவ் கொடுப்பீர்களா சார்?''

''வினயா வான்ட்ஸ் லீவ்? திஸ் இஸ் அநதர் சர்ப்ரைஸ் டூ.''



''என்னோட கஸின் சிஸ்டருக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு சார். அதற்காக வரச்சொல்லி அம்மா ரொம்பக் கம்ப்பெல் பண்றாங்க. அதான்...''

''நோ நோ. நீங்க இதுக்காகத் தயங்க வேண்டியது இல்லை. டேக் யுவர் ஓன் டைம். எவ்வளவு நாள் லீவ் கேட்டீங்க ஒன் மன்த்தா...?''

''யெஸ் ஸார். முடிந்தால் அதற்குள்ளாகவே ரிடர்ன் வந்துருவேன்.''

''இட்ஸ் ஆல் ரைட். நீங்க ஒன் மன்த் கழிச்சுக் கூட வந்தால் போதும். உங்க லேப் டாப் எடுத்துட்டுத் தானே போறீங்க?''

''ஆமாம் சார்.''

''தென் நோ பிராப்ளம். ஏதாவது அர்ஜென்ட்டான வொர்க்கை உங்க இமெயில் ஐடிக்கு அனுப்பறேன். நீங்க முடிஞ்சா அங்கிருந்து முடிச்சு ரிடர்ன் அனுப்பிடுங்க. ஓகேவா?''

''ஸ்யூர் சார். அப்போ நாளையில் இருந்தே லீவ் எடுத்துக்கலாமா?''

''ஸ்யூர், ஸ்யூர். கோ அண்ட் என்ஜாய் யுவர் ஹாலிடேஸ் அண்ட் ஹேவ் எ நைஸ் டைம்.''

''தேங்க் யூ அகெய்ன் சார்'' என்றபடியே மனம் நிறைந்த நிம்மதியுடன் வெளியேறினாள் வினயா.

தன்னுடைய இருக்கையில் வந்து அமர்ந்தவள் தொலைபேசியில் தனது அபார்ட்மெண்டிற்கு அழைத்தாள்.

''அலோவ்.''

''ஏன் கமலம் இப்படிக் கத்துற? நீ மெதுவாய் பேசி னாலே எனக்குக் கேட்கும். சரி நான் சொல்றதைக் கேளு. முதலில் ஒரு மாசத்துக்குத் தேவையான துணிமணி சாமான்களை பேக் பண்ணி வை. உனக்கும் சேர்த்துத் தான். ஏன்னா நம்ம எல்லோரும் ஊருக்குப் போறோம். ஆமாம் இன்னைக்குத்தான். எப்பவா? ஈவ்னிங் நான் வந்தவுடன் கிளம்பிடுவோம் சரியா? போனை வெச் சுட்டு வேலையை ஆரம்பி... ஓகே?'' போன் கட் பண்ணிவிட்டு இருக்கையில் சாய்ந்தவளுக்கு உடனே பூஞ்சோலைக்குப் போய் அன்னையின் மடியில் சாய்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்தது.

சொன்னபடியே கிளம்பி மறுநாளே பூஞ்சோலை வந்துவிட்டாள் வினயா.

## 38

பின்னோக்கிச் சென்ற நினைவுகளை கட்டுக்குள் கொண்டு வந்த கண்ணன் ஆழ்ந்து மூச்சுவிட்டுத் தன்னைச் சமனப்படுத்திக் கொண்டான். ஒரு வருடமாக வினயாவைப் பார்க்காமல் தவித்த அவனது உள்ளம் அவளைப் பார்த்தவுடன் மேலும் மேலும் தவிக்க ஆரம்பித்தது. சும்மாவா சொன்னார்கள் காதலைத் தீ என்று. அதன் வெம்மை அவனைத் தகிக்க ஆரம்பித்தது. பெருமூச்சுடன் வீட்டுக்குள் திரும்பினான் கண்ணன்.

எதிர்ப்பட்ட அலமேலுவிடம், ''என்ன பாட்டி. உங்க பேத்தி வந்திருக்கா போல இருக்கு?'' என்றான்.



''அவ நேத்தே வந்துட்டாளேப்பா?'' விட்டேத்தியாக வந்தது அலமேலுவின் பதில்.

''என்கிட்டச் சொல்லவே இல்லை.''

''நீதான் என்கிட்டக் கேட்கவேயில்லையே. இப்ப கேட்டே அதான் சொன்னேன்'' என்றபடித் தன்னைக் கடந்து போன அலமேலுவின் முதுகை கோபத்துடன் வெறித்தான் கண்ணன்.

அலமேலுவிற்கு அவன் இந்த ஒருவருடமாக தன் பேத்தி வினயாவிடம் போனில் கூடப் பேச மறுத்து விட்டதால் கோபம்.

''என் பேத்தி இந்தக் குடும்பம் ஒத்துமையா இருக் கணும் என்பதற்காக தன் வாழ்க்கையையே தியாகம் பண்ணின தெய்வம். அவளைக் குலதெய்வமாய் நாம கும்பிடணும். இங்க என்னடான்னா அவளை ஒதுக்கி வெச்சுள்ள வேடிக்கை பார்க்கிறாங்க?'' ஜாடையாக கண்ணனை முறைப்பாள் அலமேலு.

''அவ பணயம் வெச்சது என் வாழ்க்கையையும் சேர்த்துத்தான்'' முறைப்புடன் பதிலளிப்பான் கண்ணன்.

''என் பேத்தி மட்டும் என்ன இன்னொருத்தனை கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமாவா இருக்கா? பச்ச மண்ணா இருந்தவள் இப்போ எவ்வளவு பொறுப் பான வேலையில இருந்துக்கிட்டு, ஊரு ஒறவு சனத்தையெல்லாம் விட்டுப்புட்டு கண்ணுக்காணாத எடத்துல கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்காள்?'' பாட்டியை முறைத்தபடி எழுந்து சென்று விடுவான் கண்ணன்.

இடைப்பட்ட இந்த ஒரு வருடத்தில் வினயாவைப் போன்றே பாரிஜாதமும் குடும்ப ஒற்றுமை குலையாமல்

இருக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்தாள். ரூபாவதியைப் பெண்பாக்க மாப்பிள்ளை வீட்டார் வந்த போது, ஒரு முறைக்காக தன் தங்கையிடம் சொல்ல வந்து விட்டு, வாசலிலேயே தயங்கி நின்றிருந்த பலராமனைப் பார்த்ததும் பாரிஜாதம் வாசலுக்கு ஓடி வந்து அண்ணனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''வாங்கண்ணே. வாங்க. ஏன் இங்கயே நின்னுட்டீங்க? இது என்னிக்கும் உங்களோட பாசமான தங்கச்சி வீடுதாண்ணே'' கைபிடித்து வீட்டினுள் இழுத்துச் சென்ற தங்கையைப் பார்க்க முடியாமல் பலராமனின் மனம் கூசியது.

''வாங்க மாப்பிள்ளை வாங்க. இப்படி உட்காருங்க'' மனைவிக்குச் சற்றும் குறையாத பாசத்துடன் மைத்துனரை வரவேற்றார் ஹரிசந்தர்.

தயக்கத்துடன் சோபாவில் அமர்ந்த பலராமனுக்குப் பேசுவதற்கு நாக்கு எழும்பவில்லை. 'உங்க பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டு என் பெண்ணின் திருமணத்திற்கு உங்களைக் கூப்பிட வந்திருக்கேன் என்று எப்படிச் சொல்வது' என்று மனதிற்குள் புழுங்கினார் பலராமன்.

''என்னண்ணே. எதைச் சொல்ல இவ்வளவு தயங்கறீங்க.''

''இல்லம்மா... வந்து... நம்ம ரூபாவதியைப் பெண் கேட்டு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இன்னிக்கு வராங்க. அதான் உங்களிடம் ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போகலாம்னு...'' வாக்கியத்தை முடிக்க முடியாமல் தலை குனிந்தார் பலராமன்.



''அப்படியாண்ணே. ரொம்ப சந்தோஷம். நம்ம குடும்பத்தோட முதல் கல்யாணம் இது... எல்லோரும் ஒண்ணாயிருந்து அமோகமாய் நடத்திடலாம்ண்ணே. என்னங்க நான் சொல்வது சரிதான்?''

''நீ என்னிக்குத் தப்பாச் சொல்லுவ பாரிஜாதம்? நம்ம பிள்ளைக்குக் கல்யாணம்னா சும்மாவா? அமர்க்களமாய்ப் பண்ணிருவோம்.''

''மாப்பிள்ளை வீட்டுக்காரங்க எத்தனை மணிக்குண்ணே வர்றாங்க?''

''சாயந்திரம் 6 மணிக்கும்மா.''

''அப்ப நாங்க நாலு மணிக்கே வந்திடுவோம். ரூபாவதிக்கு நான்தான் என் கையால அலங்காரம் பண்ணி விடுவேன்.''

''உன் மனசுக்கு என்ன தோணுதோ செய்யும்மா. நான் வரட்டுமா?''

''என்னண்ணே. ஒண்ணும் சாப்பிடாமப் போறீங்க? இருங்க. காபியாவது கொண்டு வர்றேன்.''

''ஒண்ணும் வேண்டாம்மா. நீயும் மாப்பிள்ளையும் பேசுன பேச்சிலேயே என் மனசும் வயிறும் நிறைஞ்சிருச்சி.''

தளர்ந்த மனத்துடன் சோர்வுடன் வீட்டைவிட்டு வெளியேறிய பலராமனின் முதுகை சிந்தனையுடன் பார்த்தது பாரிஜாதத்தின் பார்வை.

சொன்னபடியே அண்ணனின் வீட்டிற்குள் மாலை நாலு மணிக்கே வந்துவிட்டாள் பாரிஜாதம். 'இவள் எங்க

இங்க வந்தாள்?' மனதிற்குள் குமைந்தபடி வரவேற்ற வேதவல்லியை அவள் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

நேராக ரூபாவதியின் அறைக்குள் நுழைந்தவள் அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள்.

''நான் பார்த்துப் பார்த்து வளர்த்த பொண்ணு நீ. இன்னிக்கு வேற வீட்டுக்குப் போக ரெடியாயிட்டே. போற இடத்துல நீ மகராசியா நல்லா இருக்கணும்'' பாசத்துடன் வாழ்த்திய அத்தையின் கைகளைப் பிரியமாய் பற்றிக் கொண்டாள் ரூபா.

''எங்களை மன்னிச்சிடுங்க அத்தை. அப்பா வேணும்னு அதையெல்லாம் செய்யலை. எங்க மேல இருந்த பாசத்திலதான்..'' மருமகளின் வாயை பொத்தினாள் அத்தை.

''போனதைப் பத்திப் பேசி புதுப்பொண்ணு மனசு வருத்தப்படக் கூடாது. எங்க அண்ணனைப் பத்தி எனக்குத் தெரியும். சரியா? நீ வரப்போற உன் புருஷனைப் பத்தி மட்டும் இப்ப நினைச்சுக்கிட்டே இரு.''

பேசிக்கொண்டே ரூபாவதியை தேவலோக மங்கையைப் போல அலங்கரித்து விட்டாள் பாரிஜாதம். அலங்காரம் முடிந்தவுடன் மகளைப் பார்க்க வந்த வேதவல்லி வியப்பினால் வாய்பிளந்து நின்றுவிட்டாள். தனது மகள் தேவதையைப் போல ஜொலித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்த அவளது மனம் பாரிஜாதத்தின் கைத்திறனைப் பற்றிப் பொறாமை கொண்டது.

''வித்தாரக்கள்ளி... எல்லா வித்தைகளையும் கற்றுக் கைக்குள்ள வெச்சிருக்கா.''



ரூபாவதியைப் பார்த்த மாப்பிள்ளை வீட்டார் மறுபேச்சின்றித் திருமணத் தேதியைக் குறித்துவிட்டார்கள். அதுவும் மாப்பிள்ளையின் தூண்டுதலால் திருமணத் தேதி குறுகிய காலத்திற்குள் குறிக்கப்பட்டது. மாப்பிள்ளையின் பார்வை ரூபாவதியை விட்டு அகலவில்லை. ரூபாவதிக்கே அவன் பார்வையைக் குறித்து மனம் கொள்ளாப் பெருமை. இவை எல்லாவற்றிற்கும் காரணம் அத்தைதான் என்று எண்ணிய அவள் பாரிஜாதத்தின் கைகளை நன்றியுடன் பற்றிக் கொண்டாள்.

ரூபனோ இந்த உலகத்திலேயே இல்லை. பெண் பார்க்க வந்திருந்த மாப்பிள்ளையின் தங்கையைப் பார்த்தவன் வியப்பில் வாய் பிளந்தவன், வாயைப் பிறகு மூடவே இல்லை. இயற்கையிலேயே பேரழகியான அவளைப் பார்த்தவுடன் மனதைப் பறிகொடுத்து விட்டான் ரூபன். அவளது ஒவ்வொரு அசைவிலும் அவனது உள்ளம் அசைந்து கொண்டிருந்தது. வெறும் கவர்ச்சியாக மட்டும் அல்லாது அவளை உண்மையாகவே காதலிக்கத் தொடங்கியது ரூபனின் உள்ளம். இதனால் இந்தத் திருமணம் நிச்சயமானதில் ரூபாவதியைவிட அவன்தான் மிகவும் மகிழ்ச்சியில இருந்தான். இதற்காகவே அவன் பாரிஜாதத்தையும் அவளது மகளையும் மன்னித்து விட்டுவிட்டான்.

## 39

''வினயாக்குட்டி ரெடியாம்மா? முகூர்த்தத்துக்கு நேரம் ஆகிருச்சுடா? சீக்கிரம் வா'' என்றபடி வினயாவின் அறைக்குள் நுழைந்த பாரிஜாதம் முகம் சுளித்தாள்.

"என்னடா இது?"

"எம்மா. இந்தச் சுடிதாருக்கு என்ன? ஃபைவ் தௌசண்ட் போட்டு வாங்குன சுடிதார்மா இது?"

"அதுக்கில்லடா... நான் தான் உனக்காக இந்தக் கல்யாணத்திலே கட்டுறதுக்குன்னே புதுப் பட்டுப்புடவை எடுத்து வெச்சிருந்தேன்ல. இப்படிச் சுடிதார்ல கிளம்பி நிக்கிற?"

"போம்மா. சாரியெல்லாம் போர். எனக்கு அதைக் கட்டவும் தெரியாது. அதோட அந்த சாரி ரொம்ப வெயிட்டா இருக்கும்மா."

"என் செல்லமில்லை. இன்னிக்கு ஒரு நாள் அந்த சாரியை நீ கட்டிக்கடி தங்கம். இனிமேல் நான் உன்னைக் கம்பெல் பண்ண மாட்டேன்" கூறிக்கொண்டே புதுப்பட்டுப் புடவையை எடுத்த பாரிஜாதம் மகளுக்கு அதை கட்டியும் விட்டாள்.

"இப்பத்தான் நம்ம ஜமீன் வம்சத்து ராணியாட்டம் இருக்கே" மகளின் கன்னம் வழித்து திருஷ்டி எடுத்தாள் பாரிஜாதம்.

"ஒரு நிமிஷம் இரு வினி - இதோ வந்துட்டேன்" வேகமாக அறையிலிருந்த வெளியேறிய பாரிஜாதம் கையில் பெரிய நகைப் பெட்டியுடன் வந்தாள்.

"அம்மா சொன்னாக் கேளுங்க. நான் இந்த நகைகளைப் போட்டுக்க மாட்டேன். ஏற்கனவே ஸாரி வெயிட்டையே என்னால தாங்க முடியலை" சிணுங்கிய மகளின் கைகளைப் பிடித்துக் கெஞ்சினாள் பாரிஜாதம்.



"சொன்னால் கேளுடா வினி. இப்படி ஏதாவது நல்ல விஷேசத்துலதான உனக்கு நகை போட்டு நாங்க அழகு பார்க்க முடியும். இதுக்குக் கூட நாங்க கொடுத்து வைக்கலியா?"

மறுபேச்சின்றி பெட்டியை வாங்கிக்கொண்ட வினயா நகைகளை அணிந்துகொள்ள ஆரம்பித்தாள்.

"போதுமாம்மா. எல்லா நகையையும் போட்டாச்சு. இப்ப உங்களுக்குத் திருப்தியா?"

கேட்டுக் கொண்டே முன்னால் வந்து நின்ற வினயாவைப் பார்த்த பாரிஜாதத்துக்கும், ஹரிசந்தருக்கும் கண்கள் குளமாகியது.

இளம்பச்சை வண்ணப் பட்டுப்புடவையில் தன் மேனி அழகு கூடித் தெரிவதை உணராதவளாய் அலட்சியமாக நின்று கொண்டிருந்தாள் வினயா. கழுத்தை ஒட்டியிருந்த பச்சை வண்ண மரகதமும், வெள்ளை வண்ண வைரமும் பதித்த நெக்லசும், அதற்குச் சற்றுக் கீழே தொங்கிய வைர ஆரமும் அவளது அழகுக்கு மேலும் அழகு சேர்த்துக் கொண்டு இருந்தது. கைகளில் பச்சையும் வெள்ளையுமாக கற்கள் பதித்த கண்ணன் அவளுக்கும் ஆசையுடன் பரிசளித்த வளையல்களை வெகுநாட்களுக்குப் பிறகு ஆசையுடன் அணிந்துகொண்டு இருந்தாள். கண்ணனை இன்று கண்களால் பார்த்துவிடலாம் என்ற எண்ணமே அவளை வானத்தில் சிறகடித்துப் பறக்க வைத்துக் கொண்டிருந்தது.

கல்யாண மண்டபத்துக்குள் நுழைந்த தங்கையின் குடும்பத்தை மண்டப வாசலிலேயே நின்று வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார் பலராமன்.

"வாங்க." ஒப்புக்காகக் கைகூப்பிய வேதவல்லியை திரும்பியும் பார்க்காமல் கடந்து சென்றனர் ஹரிசந்தரும் பாரிஜாதமும்.

"வாடி என் ராஜாத்தி. என் கண்ணே பட்டுவிடும் போல இம்புட்டு அழகா இருக்கியே என் தங்கமே" பேத்தியின் கைகளைப் பற்றி தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டாள் அலமேலு.

திருப்பதி ஐயாவோ எதுவும் பேசாமல் பார்வையாலேயே பேத்தியைத் தடவிக் கொடுத்தார். இந்த ஒரு வருடப் பிரிவில் வதங்கிய மலர்க்கொடியாய், மெலிந்து தெரிந்த பேத்தியின் உடல்வாகு அவர் நெஞ்சில் பாரமாய் ஏறி அமர்ந்தது. தன் மகளின் ஒரே வாரிசும் பட்ட மரமாய்த் தணித்து நிற்கும்படி செய்த விதியின் செயலை எண்ணி வேதனையடைந்த அவர் அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் மண்டபத்தின் உள்ளே போய்விட்டார்.

வினயாவின் கண்கள் மண்டபம் பூராவும் சுற்றி வந்தது. ஆனால் அவள் கண்கள் தேடிய கண்ணன் மட்டும் அவள் பார்வையில் தென்படவே இல்லை. பேத்தியின் கண்கள் யாரை தேடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட அலமேலு வினயாவின் இடுப்பைக் கட்டிக்கொண்டு அவள் காதோரம்,

"திருட்டு ராஸ்கல். இங்கதான் எங்கயாவது ஒளிஞ்சு நின்னு இந்நேரம் அவனும் உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருப்பான்" என்றாள் மெதுவாக.



அலமேலு சொல்லிய வார்த்தைகள் உண்மைதான். மண்டபத்தின் மாடியில் இருந்த தூண் மறைவில் நின்றுகொண்டு கண்ணனும் அப்போது வினயாவைத் தான் பார்த்துக்கொண்டு இருந்தான். முதன் முதலாக அன்றுதான் சேலை கட்டியிருந்த வினயா, அவன் பார்வைக்கு அன்று தேவதையைப் போலத் தோன்றினாள். மெலிந்திருந்த உடல்வாகு கூட அவள் அழகினை கூட்டித்தான் காட்டுகிறது என்று எண்ணிக்கொண்ட கண்ணனின் பார்வை நீண்டு வளர்ந்து முழங்கால்களை தொட்டுக்கொண்டிருந்த அவள் பின்னலைத் தடவிக் கொடுத்தது.

இவள் மட்டும் வாயை வைத்துக் கொண்டு அமைதியாக அன்று இருந்திருந்தால் இன்று இத்தனை அழகுள்ள அவள் கண்ணனுக்குச் சொந்தமாகியிருப்பாள் என்ற எண்ணம் தோன்றிய மறுகணமே, கோபத்தில் பல்லைக் கடித்தவாறு வேகமாக அங்கிருந்து சென்றுவிட்டான்.

"அம்மா நான் போய் ரூபாவதியைப் பார்த்துட்டு வரட்டுமா" அன்னையிடம் கேட்டாள் வினயா.

"இரு வினயாக்குட்டி. நானும் வர்றேன்" என்ற பாரிஜாதம் கணவரிடம் சொல்லிக்கொண்டு எழுந்து மகளை அழைத்துக் கொண்டு ரூபாவதியின் அறைக்குள் நுழைந்தாள்.

"வினயா... உண்மையிலேயே இது நீதானா? ரொம்பவும் மாறித் தெரியறியே? வா வா" பாசத்துடன் தன்னை வரவேற்ற ரூபாவதியைக் கட்டிக் கொண்டாள்

வினயா. அவளின் இந்தப் பாசமான செய்கையைப் பார்த்த ரூபாவதியின் மனதில் வினயாவில் மேல் இருந்த பொறாமை வெளியேறி பாசம் குடிகொண்டது.

"கல்யாணக் கோலத்துல நீ ரொம்ப அழகாக இருக்கே ரூபாவதி" கள்ளமில்லாமல் சொன்ன வினயாவைப் பார்த்த ரூபாவதி அழுதுவிட்டாள்.

"ஏய்,என்னக்கா இது? கல்யாணப்பொண்ணு இப்படி அழலாமா?" பதறினாள் வினயா.

"இல்லை வினி. எங்களாலதான உன் வாழ்க்கையில உனக்குக் கல்யாணக்கோலமே இல்லாம போயிருச்சு?"

"அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லக்கா. என்னால என் இரண்டு மாமாக்களின் உறவில் விரிசல் விழக் கூடாதுன்னு தான் நான் அப்படி ஒரு முடிவை எடுத்தேன். மத்த படி என் முடிவுக்கு யாரும் காரணம் இல்லை. அது நானே எடுத்த முடிவு."

"சரிசரி பெரிய மனுசிகளா, உங்க பேச்சைக் கொஞ்சம் நிறுத்தறீங்களா? ரூபாவதி கொஞ்சம் இப்படித் திரும்பேன்" என்று மருமகளைத் தன் பக்கமாய்த் திருப்பிய பாரிஜாதம் தன் கையில் இருந்த நகைப் பெட்டியைத் திறந்தாள்.

சிறிய மலர்களால் ஒன்றாகக் கோர்க்கப்பட்ட தோற்றத் துடன் மூன்று சரத்துடன் மின்னிய மாலையைப் பார்த்த ரூபாவதியின்கண்கள் விரிந்தன.

"வைர மாலையா அத்தை? எதுக்கு இவ்வளவு விலை கூடிய நகையைத் தர்றீங்க?"



"விலை மதிப்பில்லாத என் மருமகளுக்கு தரும் பரிசுக்கு விலையெல்லாம் பார்க்கக் கூடாதுடா. உனக்கு இனி இரண்டு தாய்வீடு இல்லை. இந்த அத்தை வீட்டையும் சேர்த்து மூணு தாய்வீடு" என்று ரூபாவதியைக் கட்டிக் கொண்டாள் பாரிஜாதம்.

"சரி வினி. வா நாம் போகலாம். ரூபாவதியை மணமேடைக்கு அழைச்சுட்டுப் போக மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வந்துருவாங்க" மகளின் கைப்பற்றி அழைத்த பாரிஜாதத்தைத் தடுத்தாள் ரூபாவதி.

"வினியை எங்க கூப்பிடுறீங்க. அவள்தான் இன்னிக்கு என் தோழிப்பொண்ணு. இன்னிக்குப் பூரா வும் அவ என்கூடத்தான் இருப்பாள். நீங்க போங்கத்தை."

"ஐயோ அக்கா. எனக்கு மேடையில நிக்க கூச்சமா இருக்கும்கா. ஐம் சாரி. என்னால முடியாது."

"பிளீஸ் வினி. எனக்கு ரொம்ப லோன்லியா இருக்கு. எனக்கு ஒரு தங்கை இருந்தா என் கூடவே இருந்திருக்க மாட்டாளா? நீயும் எனக்கு ஒரு தங்கைதானே."

"ஆமாம்டா வினிச்செல்லம். கல்யாண சமயத்துல பொண்ணுகூட அவங்க சொந்தக்காரங்க யாராவது கூட நின்னா பொண்ணுக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும். நீ ரூபா கூட இரு. நான் அப்பாகிட்ட போறேன்" மகளை விட்டுவிட்டு கணவரைத் தேடிப் போனாள் பாரிஜாதம்.

## 40

"ஸர்வ மங்கல மாங்கல்யே..." ஐயர் வேத மந்திரங்களைச் சொல்ல ரூபாவதியின் கழுத்தில் தாலி

கட்டினான் மாப்பிள்ளை. அதைப் பார்த்த பாரிஜாதம் ரூபாவதியின் அருகில் நின்று சிரித்துக் கொண்டிருந்த மகளை உற்று நோக்கினாள்.

'என் மகளோட வாழ்க்கையிலும் இப்படி ஒரு தருணம் வரும்னு ஆயிரம் கனவு கண்டு வெச்சிருந்தேன் அம்மா. ஆனா என் கனவு கைகூடாமல் கானல் நீராய்ப் போயிடுச்சே' யாரும் அறியாமல் அலமேலுவின் கரம் பற்றிப் புலம்பிய பாரிஜாதத்தைப் பார்த்த திருப்பதி ஐயா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தார்.

''ஐயோ என் சாமி. உங்களுக்கு என்ன ஆச்சு'' அலமேலுவின் கதறல் மண்டபத்தையே உலுக்கியது.

மயங்கிச் சரிந்த மாமனாரைத் தூக்கிக் கொண்டு ரூமிற்குள் ஓடிய ஹரிசந்தர் அங்கிருந்த ஒரு கட்டிலில் அவரைக் கிடத்திவிட்டு பேனைப் போட்டுவிட்டார்.

''கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாங்கப்பா யாராச்சும் சீக்கிரம்'' ஹரிசந்தரைத் தொடர்ந்து அவர் பின்னாலேயே ஓடிவந்த பலராமனும், சிவராமனும் தன் தந்தையின் நிலையைப் பார்த்த அதிர்ச்சியில் சிலையாக நின்று கொண்டிருந்தனர்.

''என் ராசா? ஒரு நாள் ஒரு பொழுது கூட காய்ச்சல் தலைவலின்னு நீங்க படுத்து இந்தப்பாவி பார்த்த தில்லையே. இப்ப வேரருந்த மரமா இப்படிச் சாஞ்சு கிடக்கீங்களே? நான் என்ன செய்வேன், ஆண்டவனே இதுவும் உன் சோதனையா?'' புலம்பிய அலமேலுவின் குரல் அவர்களை இந்த உலகத்துக்கு அழைத்து வந்தது.



''அப்பா, அப்பா, கண்ணைத் திறந்து பாருங்கப்பா.''

''மாமா, மாமா, கண்ணைத் திறங்க மாமா.''

அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டு நின்று அழுது கொண்டிருக்க, நிலையை உணர்ந்த கண்ணன் வேகமாக காரை எடுத்துக் கொண்டு சென்று டாக்டரைக் கையோடு அழைத்து வந்தான்.

''கொஞ்சம் தள்ளி நில்லுங்க. ஏன் இப்படிக் கூட்டம் போட்டு இருக்கீங்க? பேசண்ட்டுக்குக் கொஞ்சம் காத்து வர வழி விடுங்க. அம்மா நீங்க அழறதைக் கொஞ்சம் நிறுத்துங்க. ஐயாவுக்கு ஒண்ணும் ஆகாது'' சுற்றி நின்றிருந்த அனைவரையும் விலக்கிய டாக்டர் திருப்பதி அய்யாவைப் பரிசோதிக்க ஆரம்பித்தார்.

''எங்க அப்பாவுக்கு என்ன ஆச்சு டாக்டர். பெரிய பிரச்சினை ஒண்ணும் இல்லையே?'' பதறிய நெஞ்சைக் கையில் பிடித்துக் கொண்டே கேட்டார் சிவராமன்.

''சிவியர் ஹார்ட் அட்டாக் போலத் தெரியுது. அவர் மனசு ரொம்ப வேதனைப் படுற மாதிரி ஏதாவது நடந்ததா?''

''ம்ம்... என் மக கல்யாணம்தான் நடந்துச்சு. அதான் எல்லார் கண்ணையும் உறுத்திச்சு'' நக்கலாகக் கூறிய வேதவல்லியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டார் பலராமன்.

''எங்க அப்பா உசிருக்குத் துடிச்சுக்கிட்டுப் படுத்துக் கிடக்காங்க. உனக்கு நக்கலாக இருக்கா. வாயைத் திறந்தே உன்னைக் கொன்னுருவேன். போடி 'அந்தப்

பக்கம்'' மனைவியின் கழுத்தைப் பிடித்து ரூமிற்கு வெளியே தள்ளிய பலராமன் ஓடி வந்து தந்தையின் காலருகே அமர்ந்து கொண்டார்.

''இப்ப நாங்க என்ன டாக்டர் செய்யணும்.''

''ஒரு ஊசி போட்டிருக்கேன். பத்து நிமிசம் வெயிட் பண்ணிப் பார்க்கலாம். கண்ணைத் திறக்கலேன்னா கொஞ்சம் சிரமம்தான்'' மெல்லிய குரலில் கூறினார் டாக்டர்.

''அப்படிச் சொல்லாதீங்க டாக்டர். பத்து நிமிசத்துல என் புருஷன் கண்ணைத் திறந்திடுவார். என் தாலி பாக்கியத்தின் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு'' உறுதியுடன் கூறிய அலமேலு கணவரின் கைகளைப் பற்றித் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டாள். அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் திருப்பதியின் கைகளை நனைத்தது.

அலமேலுவின் கண்ணீரின் ஈரத்தை உணர்ந்தோ அல்லது அவள் வேண்டுதலின் பலனாலோ மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார் திருப்பதி.

''அப்பா, அப்பா நல்லாக் கண்ணைத் திறந்து எங்களைப் பாருங்கப்பா. எங்களைத் தவிக்க விட்றாதீங்க'' கண்ணீர் வழியக் கதறிக் கொண்டு நின்றிருந்த பலராமனைக் கைகளால் அழைத்தார் திருப்பதி.

''என்னப்பா, ஏதாவது வேணுமா'' வேகமாகத் தந்தையின் வாயருகே காதைக் கொடுத்துக் கேட்டார் பலராமன்.



''நான் சாகிறதுக்குள்ள என் பேத்தியின் கலியாணத்தைப் பார்க்கணும் .. இந்த உதவியை எனக்குச் செய்வியா'' கை கூப்பிய தந்தையை அதிர்ச்சியுடன் பார்த்தார் பலராமன்.

''என்னப்பா. என்னைப் போய்க் கும்பிடுறீங்க. உங்க ஆசையை நிறைவேத்தறதை விட எனக்கு வேற கொடுப்பினை எதுவும் இல்லப்பா.''

வேகமாக அறையை விட்டு வெளியேறிய பலராமன் கண்களால் ரூபனைக் கூட்டத்திற்குள் தேடினார்.

அப்பொழுது தான் தன் காதலை தன் மாப்பிள்ளையின் தங்கையான மேனகாவிடம் தெரிவித்து, அவளின் காதலையும் அறிந்து கொண்ட ஆனந்தத்தில் அவளைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்த ரூபனுக்கு, அவன் கைகளைப் பற்றிக் கொண்டு இழுத்த தந்தை மேல் எரிச்சல் வந்தது. அவன் தன் கைகளை உருவிக் கொண்டே அவரை முறைத்தான்.

''டேய் தாத்தா அங்க உயிருக்குப் போராடிக்கிட்டு இருக்காருடா.''

''அதுக்கு என்னை என்னப்பா செய்யச் சொல்றீங்க. நான் என்ன டாக்டரா?''

''இல்லடா. அவர் வினயாவின் கல்யாணத்தைச் சாகுறதுக்குள்ள பார்க்கணும்னு ஆசைப்படுறாடா...''

''அதுக்கு நான் என்னப்பா செய்ய...?''

''நீதாண்டா அவ கழுத்துல தாலி கட்டணும். நீதானடா அவளை விரும்பறதாச் சொன்ன?''

ரூபனை முறைத்தபடி நகரப் போன மேனகாவின் கையைப் பற்றி நிறுத்திய ரூபன்,

''என்னப்பா சொல்றீங்க? வினயாவை விரும்பியது கண்ணன். அவன்கிட்டப் போயி அவருக்குத் தாலி கட்டச் சொல்லுங்க. நான் விரும்பறது இவளைத்தான்'' என்று மேனகாவின் தோள்களில் கையைப் போட்டுக் கொண்டே தந்தைக்கு அறிமுகம் செய்தான் ரூபன்.

அவனை முறைத்துப் பார்த்த பலராமன் பதில் எதுவும் கூறாமல் பல்லைக் கடித்தபடி அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். ஏனெனில் மகனின் காதலில் தன் ஒரே மகளின் வாழ்க்கையும் அடங்கி இருப்பதால் ஒன்றும் செய்ய முடியாத குற்ற உணர்வுடன் தந்தை இருந்த அறைக்குள் நுழைந்தார்.

''என்னாச்சு...?'' எனச் சைகையால் வினவிய தந்தையைக் கடந்து சென்று கண்ணனின் கைகளைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார் பலராமன். பின் அவன் முன்னால் கைகூப்பி நின்றார்.

''என்னை மன்னிச்சிடு கண்ணா. இப்ப நீதான் தாத்தாவைக் காப்பாத்தணும். நீயும் வினயாவும் ஒருத்தரையொருத்தர் விரும்...'' பேசிய அவரது குரலை வேகமாக இடைமறித்தது அலமேலுவின் குரல்.

''டேய் முட்டாப்பயலே. அன்னிக்கும் இன்னிக்கும் உன் புத்தி மாறவே இல்லையே. கூட்டம் கும்பல்ல என்ன பேசறது, எப்படி பேசறதுன்னு கூடவா உனக்குத் தெரியாது? போயி மேல ஆக வேண்டியதைப் பார்ப்பியா அதவிட்டுட்டுப் பேசிக்கிட்டே நிக்கறான். ஏம்மா பாரிஜாதம் நீயும் அவன் வாயப் பார்த்துக்கிட்டே நிக்கிற. வினயாவைக் கூட்டிட்டு வந்து கண்ணன் பக்கத்துல நிக்கச் சொல்லு.''



பாரிஜாதம் வேகமாகத் தள்ளி நின்றுகொண்டு நடப்பதை நம்பமுடியாமல் பார்த்துக் கொண்டிருந்த வினயாவை கூப்பிட்டாள். அவளோ இருந்த இடத்தை விட்டு அசையாமல் நின்று கொண்டு இருந்தாள்.

''இல்ல பாட்டி. மாமாவுக்கு நான் சத்தியம் செஞ்சு கொடுத்திருக்கேன். என்னால அதை மீற முடியாது.''

வேகமாக மருமகளிடம் வந்த பலராமன் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''இல்லம்மா வினயா - எனக்காகத்தானே நீ சத்தியம் பண்ணின. அந்த சத்தியத்தை நானே திரும்பி கொடுத்திருறேன். என் அப்பாவைக் காப்பாத்து.''

''இல்லை மாமா. இந்த வினயா சொன்ன வார்த்தையை மீற மாட்டாள்'' என்ற வினயாவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை வைத்த கண்ணன்,

''மண்ணாங்கட்டி. பெரிய காரைக்கால் அம்மையார் இவங்க. அடச்சீ வா. இப்படிப் பேசிப்பேசியே என் பிராணனை வாங்கியது போதும். இப்ப என்னோட தாத்தாவின் உயிரையும் வாங்கிடாதே'' என்றபடி அவளை இழுத்து அருகில் நிறுத்தி கைகளில் வைத்திருந்த மஞ்சள் கயிற்றை அவள் கழுத்தில் கட்டினான்.

நடந்ததை நம்ப முடியாத வினயா தாத்தாவின் கால்களில் விழுந்து கதறித் தீர்த்துவிட்டாள்.

அவள் அழுவதை வேதனையுடன் பார்த்த கண்ணன் மெதுவாக அவளை எழுப்பி தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

''ஏய் அசடு. அதுதான் எல்லாம் நல்லதுதான நடந்திருக்கு. அப்புறம் ஏன் அழுகிற?''

''இல்லத்தான். தாத்தாவை நினைச்சுத்தான் எனக்கு கஷ்டமா இருக்கு.''

''அதுக்குத்தான இந்த டாக்டரு இருக்காரு. ஏங்க சாரு, நீங்களும் ஏன் இப்படி வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னுருக்கீங்க. எங்களை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போவீங்களா? மாட்டீங்களா?''

அலமேலு கேட்ட விதத்தில் அரண்டுபோன டாக்டர் ''இப்பவே கிளம்பலாம்மா. ஆம்புலன்ஸ் வரச் சொல்லட்டுமா... இல்ல நம்ம காருலயே போயிரலாமுங்களா'' என்று வினவினார்.

''அதெல்லாம் நம்ம காருலயே போயிக்கலாம்'' என்றவாறு கட்டிலில் இருந்து இறங்கிய கணவரைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு காருக்குக் கூட்டிச் சென்றாள்.

''இருங்கம்மா, நாங்களும் வர்றோம்'' என்றவாறு காரில் ஏறமுயன்ற இரு மகன்களையும் அதட்டினாள் அலமேலு.

''நீங்க எதுக்குப்பா இப்ப எங்க கூட வர்றீங்க? அதான் நான் இருக்கேன்ல. உங்கப்பாவ நான் பார்த்துக்கிறேன். கல்யாண வீட்டுல ஆயிரம் வேலை இருக்கும். அதையெல்லாம் யாரு பொறுப்பா பார்த்துக்கறது?''



''அதான் கண்ணன் இருக்கானில்லம்மா. அவன் எல்லாத்தையும் பார்த்துக்குவான்.''

''கொன்னுறுவேன் கொன்னு. என் பேரன் இன்னிக்கு கல்யாண மாப்பிள்ளையாக்கும். அவனை ஒரு துரும்பைக் கூட அசைக்க விடக்கூடாது பார்த்துக்கங்க. அதான் அப்பன்காரங்க ரெண்டு பேரும் இருக்கீங்க இல்ல. எல்லா வேலைகளையும் நீங்களே பொறுப்பாப் பார்த்துக்குங்க. ஏலே ஏய் டிரைவரு. காரை எடுக்கறியா இல்லையா.''

டிரைவர் காரைக் கிளப்பியதும் அண்ணன் தம்பி இருவரும் மண்டபத்திற்குள் நுழைந்தனர். தயங்கியபடியே நின்றிருந்த உறவினர் கூட்டத்தினரைச் சாப்பிட அழைத்துக் கொண்டிருந்த கண்ணனையும், ஹரிசந்தரையும் பார்த்த இருவரும் அவர்களுடன் இணைந்து உறவினர்களை உபசரிக்க ஆரம்பித்தனர்.

''கண்ணா நீ ரூமுக்குப் போப்பா. இனி நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் பலராமன். நிம்மதியுடன் லேசாகத் தலையசைத்து விட்டு வினயாவிடம் சென்றான் கண்ணன்.

## 41

''அண்ணி...'' அழைத்துக் கொண்டே வந்த பாரிஜாதத்தை நிமிர்ந்து பார்த்தார் பார்வதி.

''என்ன பாரிஜாதம்?''

"இல்லண்ணி. பிள்ளைகளை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகணும்ல. நீங்க கூப்பிட்டுக்கொண்டு கிளம்புனீங்கன்னா நான் அம்மாவுக்குத் துணையாய் ஆஸ்பத்திரியில போயி இருப்பேன்."

"அதுக்கென்ன பாரிஜாதம். இதோ இப்ப ரூபாவதியை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பிட்டு நம்மளும் கிளம்ப வேண்டியதுதான்."

"சரிங்கண்ணி. இங்க நீங்க பார்த்துக்கங்க. நான் நம்ம வீட்டுக்குப் போயி ஆரத்தி ரெடி பண்ணி வைக்கச் சொல்லிவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போறேன்" என்றவாறு கணவரைக் கூட்டிக்கொண்டு பலராமனின் வீட்டிற்கு விரைந்தாள் பாரிஜாதம்.

"ஆரத்தித் தட்டுல நூறு ரூபாய்க்குக் குறைச்சலாப் போடக்கூடாது" தங்கை முறையில் இருந்து ஆரத்தியைச் சுற்றிய பெண்ணைப் பார்த்துச் சிரித்த கண்ணன் பாக்கெட்டில் இருந்து ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்துத் தட்டில் போட்டான்.

"இப்பவாவது நாங்க வீட்டிற்குள் போகலாமா?" கேலியுடன் கேட்டவன் வினயாவின் கைப்பற்றியபடி வலதுகாலை வீட்டிற்குள் வைத்து நுழைந்தான் கண்ணன். நடப்பது எல்லாம் கனவா என்ற பிரம்மையுடனே அவனுடன் இணைந்து வீட்டினுள் நுழைந்தாள் வினயா.

"வினயாக்கண்ணு. முதல்ல பூஜை அறையில் விளக்கை ஏற்றும்மா."

விளக்கை ஏற்றினாள் வினயா.



"மாப்பிள்ளைக்கும் பொண்ணுக்கும் பால் பழம் குடுங்க."

பழம் சாப்பிட்டுப் பாலைக் குடித்தாள் வினயா.

"மாலையைக் கழற்றிக் கொடும்மா... கசகசன்னு இல்லையா?"

மாலையைக் கழற்றிக் கொடுத்தாள் வினயா.

சொல்வதைச் செய்யும் கிளிப்பிள்ளை போல மற்றவர் சொல்வதைச் செய்து கொண்டிருந்த வினயாவை உற்று நோக்கினான் கண்ணன்.

"ஏய் என்னடி ஆச்சு? இப்படிச் சுரத்தில்லாமல் இருக்கிற? என்னைக் கல்யாணம் கட்டிக்கிட்டதுல உனக்கு இஷ்டம் இல்லையா?"

"என்னத்தான் என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்டீங்க?"

"உன்னைத் தானே நான் கல்யாணம் பண்ணி இருக்கேன். உன்னைப் பார்த்துத்தான கேட்க முடியும்?"

"இப்படிக் கேட்கிறதுக்கு என்னை நீங்க கொன்னு போட்டுரலாம்" தலை குனிந்த வினயாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவளையே பார்த்துக் கொண்டிருந்த கண்ணனுக்கு அதற்கு மேல் தாளமுடியவில்லை.

தலையசைத்துப் பார்வதியை அழைத்தான் கண்ணன்.

"என்னடா, ஏதாச்சும் வேணுமா."

''அதெல்லாம் ஒண்ணும் வேணாம். எனக்குக் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும். நைட்டெல்லாம் தூங்காமல் வேலைபாத்தது தலையெல்லாம் சுத்துது.''

''சரி சரி நீ போயி உன் ரூமில் ரெஸ்ட் எடு... சாயந்திரம் வரைக்கும் உன்னை யாரும் தொந்தரவு பண்ணாமல் நான் பார்த்துக்கறேன். வினயாவையும் கூட்டிட்டுப் போடா. அழுதழுது பிள்ளை ஓய்ஞ்சு போயிக் கிடக்கு. அதுவும் கொஞ்சநேரம் தூங்கி எந்திரிக்கட்டும்.''

''சரிம்மா'' நன்றியுடன் தாயைப் பார்த்த கண்ணன் மனைவியை அழைத்துக் கொண்டு ரூமிற்குள் சென்றதும் மறக்காமல் கதவைத் தாழிட்டான்.

அவசரமாக நிமிர்ந்த வினயா ''கதவை ஏன் சாத்தறீங்க? கீழே கெஸ்ட் எல்லாரும் இருக்காங்கள்ள. எல்லோரும் தப்பா நினைக்க மாட்டாங்க?'' என்றாள் கன்னங்கள் சிவக்க.

பதில் சொல்லாமல் அவள் அருமே அமர்ந்த கண்ணன் வேகமாக அவளை இழுத்துத் தன் மடியில் சரித்துக் கொண்டு அவள் சிவந்த கன்னங்களில் முத்தமிட்டான்.

''இந்த நாளுக்காக எத்தனை வருசமாக் காத்திட்டு இருக்கேன். இப்பப் போயி கெஸ்ட்டை நினைச்சுக் கவலைப்படச் சொல்றியே?''

''விடுங்கத்தான். அத்தை என்ன நினைப்பாங்க?''

''உங்க அத்தையும் என்னை இதுக்குத்தான் ரூமிற்கு அனுப்பினாங்க.''



''ஆனா...''

''ஆனாவாவது... ஆவன்னாவாவது... வாடி'' அவளை கட்டிலில் சரித்த கண்ணன் ஆவேசத்துடன் அவள்மேல் பரவிப் படர்ந்தான். அவனின் ஆவேசத்தில் கிறங்கிய வினயாவின் கைகள் அவன் முதுகில் ஆசையுடன் படிந்தது. இந்த உலகை மறந்து ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதில் இருவருமே எல்லை வைத்துக் கொள்ளவில்லை. முழுமையாக அவளை ஆண்டு முடித்த கண்ணன் தாபத்துடன் வினயாவின் நெற்றியில் முத்தமிட்டு விலனினான்.

''இப்ப நீ ரெஸ்ட் எடு. ஏன்னா இன்னிக்கு நைட் முழுவதும் வேலை இருக்கில்ல.''

வெட்கத்தில் சிவந்த வினயா அவனுக்கு முதுகு காட்டித் திரும்பிப் படுத்தாள்.

மாலை இருவரும் இணைந்து மருத்துவமனையில் இருந்த தாத்தாவைப் பார்க்கக் கிளம்பினார்கள்.

மருத்துவமனையில் திருப்பதி இருந்த அறையில் நுழைந்த இருவரும் மகிழ்ச்சியில் வாயடைத்து நின்று விட்டார்கள். ஏனெனில் திருப்பதி கட்டிலில் சாய்ந்து அமர்ந்து காலை நீட்டிக்கொண்டு மனைவி வெட்டிக் கொடுத்த ஆப்பிள் துண்டுகளை வாயில் போட்டுச் சுவைத்துக் கொண்டிருந்தார்.

''தாத்தா... நல்லா இருக்கீங்களா?'' கட்டிலின் ஓரத்தில் அமர்ந்த கண்ணன் வினவினான்.

''எனக்கென்னடா நல்லாக் கல்லுக் குண்டாட்டம் இருக்கேன். உன் பாட்டிதான் கிழவியாயிட்டா.''

"ஏன் இப்ப வந்து பார்த்துட்டுப் போன நர்சை வேணா கட்டிக்கோங்களேன்" கணவரைப் பார்த்து நொடித்தாள் அலமேலு.

"என்ன ரசனைடி ஒனக்கு? இந்தக் குரங்கை யாராவது கட்டுவாங்களா? வேணும்னா மத்தியானம் வந்துச்சே ஒரு நர்சுப் புள்ள அதை வேணா பேசிப்பாறேன்."

"அதுக்கு நான் உங்களைக் கொன்றே பார்க்கிறேனே?" கூலாகக் கூறிய பாட்டியை அணைத்துச் சிரித்தான் கண்ணன்.

"சரி பாரிஜாதம் நீ கிளம்பு. நைட்டுக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நீதான செய்யணும்" என்றாள் அலமேலு.

அந்த ஏற்பாட்டை எல்லாம் மதியமே முடித்திருந்த கண்ணன் வினயாவைப் பார்த்து யாரும் அறியாமல் கண்சிமிட்டினான்.

கண்ணனின் கண்ணசைவையும் அதனால் கன்னம் சிவந்த மகளையும் பார்த்த பாரிஜாதத்தின் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. அவள் கண்ட கனவினை நனவாக்கிய தந்தைக்குப் பார்வையாலேயே நன்றி சொன்னாள் பாரிஜாதம். அதைக் கண்ட திருப்பதி ஐயாவும் என்றும் போல் இன்றும் அவளைப் பார்த்து அமைதியுடன் புன்னகைத்தாள்.